

விசேஷமான சௌகரியங்கள் வாய்ந்தது கேவர்ட் சூபர்க்ரோம் பிலிம் ஒன்றுதான். வெகு தூரத்திலிருந்துகூட பொருள்களைப் படம் எடுக்க முடியும். படம் எடுக்கும்போது ஏற்படும் பிழைகளைத் தானாகவே திருத்திக் கொள்ளும். வெளிச்சம் சற்று குறைவாக இருந்தாலும் மங்கும் தன்மை கிடையாது; ஆகையால் படம் எடுப்பதில் நல்ல பலனை அளிக்கும். பெரிய அளவில் படத்தை என்லார்ஜ் செய்ய மிகவும் சௌகரியமானது.

உரிமைபெற்ற
இறக்குமதியாளர்கள்:

Allied Photographics Limited

பம்பாய் • கல்கத்தா • மதராஸ்

நிலைமையை உயர்த்தலாம் என்று குறிப்பிட்டிருக்கிறதே தவிர மூலதனத்தைத் திரட்டுவதற்குச் சரியான வழி கூறியிருப்பதாகத் தோன்றவில்லை. சென்னை மாகாண சர்க்கார் வருகிற பத்து வருஷத்தில் உள் நாட்டிலிருந்தும், அயல் நாட்டிலிருந்தும் 500 கோடி ரூபாய் திரட்டுவது என்பது சிரமமான காரியந்தான்.

பல கோடி ரூபாய் மூலதனம் பெறுவதற்குத் திட்டம் ஒன்றும் குறிப்பிடாமல் அவற்றை செலவு செய்யும் விதத்தைப் பற்றிக் கூறும் திட்டம் ஏட்டுச் சுரைக்காய் திட்டம்தான் என்பதில் ஐயமுண்டோ?

குண்டறை
15—5—49 விஜயம் நாகேந்திரன்

இன்ஜினியரிங் கல்லூரிப் பிரவேசம்

தமிழை இரண்டாவது பிரிவின் கீழ் எடுத்துக் கொள்ளும் இன்டர்மீடியட் மாணவர்களின் நிலை பரிதாபத்திற்கிடமாகின்றது. இஞ்சினியரிங் காலேஜுக்கு முட்டுக்கட்டையாக நிற்பது நம் தமிழே! (கூறவும் வெட்கமாயிருக்கின்றது) ஏனெனில் உங்களுக்கு நன்றாகத் தெரிந்திருக்கும், தமிழில் 100 மார்க்குகள் வாங்குவது பிரஞ்சிலும், சம்ஸ்கிருதத்திலும் 150 மார்க்குகள் வாங்குவதற்குச் சமம் என்பது. எவ்வளவு முயன்று படித்த போதிலும், தமிழில் நூறு அல்லது நூற்றிருபது வாங்குவது குதிரைக் கொம்பாக இருக்கின்றது. ஆனால் பிரஞ்சிலும், சம்ஸ்கிருதத்திலும் குறைந்த முயற்சியுடன் 150 மார்க்குகள் வாங்குபவர் பலர்.

இஞ்சினியரிங் படிப்பிற்கு உயர்ந்த மொழியறிவு வேண்டியதில்லை. மூன்றாவது பிரிவில் பெருமைப்படத்தக்க மார்க்குகள் வாங்குபவர் பலருக்கு இடம் கிடைக்காதிருப்பது, தமிழால் தான். இதனால், ஒரு பிரஞ்சு அல்லது சம்ஸ்கிருத மாணவன் மிகவும் அவசியமான மூன்றாவது பிரிவில் குறைவான மார்க்குகள் வாங்கியிருந்தாலும் என்ஜினியரிங் கலாசாலையில் இடம் பெறுகிறான். ஆனால் ஒரு தமிழ் மாணவன் மூன்றாவது பிரிவில் அதிக மார்க்குகள் வாங்கிக் கூட இடம் பெறாமல் தவிக்கிறான்.

கணக்கு, பௌதிகம், இரசாயனம், இம்மூன்றும்தான் இஞ்சினியரிங் படிப்பின் அஸ்திவாரக்கல்களே ஒழிய பிரஞ்சும், தமிழும், சம்ஸ்கிருதமும் அல்ல.


ஆகவே இன்ஜினியரிங் கல்லூரியில் மாணவர்களைச் சேர்ப்பதற்கு மூன்றாவது பிரிவில் (கணக்கு, பௌதிகம், இரசாயனம்) வாங்கும் மார்க்குகளையே அடிப்படையாக வைத்துக் கொள்ள வேண்டும்.

கா. வெ. பத்மநாபன்

யம லோக சர்விஸ்

தலைப்பைப் பார்த்துவிட்டு இப்படி ஒரு மோட்டார் சர்விஸ் இருக்கின்றதா என்ற எண்ணம் பலருக்கு ஏற்படலாம். அவ்விதம் யமலோகத்திற்கு என்று பஸ் ஓடவில்லை. ஆனால் சில சமயங்களில் அது அங்கு வழி தவறிச் சென்றுவிடும். செங்கோட்டையிலிருந்து திருவனந்தபுரத்துக்குச் சுமார் 65 மைல் இருக்கும். இவ்வளவு தூரமுள்ள இடங்களுக்கு ஓடும் பஸ்களின் எண்ணிக்கை ஆறு. இவைகளில் உட்கார இடவசதி 28 பேருக்குத்தான். ஆனால் இதில் ஏற்றப்படும் ஜனங்களுக்குக் கணக்கே கிடையாது. பிரயாணிகள் பஸ்ஸில் ஏறும்போது 'சக்கரம்' (பணம்) கொடுத்து டிக்கட்டு வாங்கும் வேளையிலேயே அவர்களது உயிரையும் அந்த பஸ் ஸ்டாண்டில் டெப்பாஸிட் செய்துவிடுகிறார்கள். பின்பு புண்ணியத்தால் தமது ஊர்போய்ச் சேர்ந்தால் அதனை அங்கே மீண்டும் பெற்றுக் கொள்ள வேண்டியிருக்கிறது. ஏனென்றால் உடம்பில் உயிர் இருந்தால் மனிதன் மூச்சு விடவேண்டுமல்லவா? மூச்சுவிட அங்கு இடமேது?

இளம் வயதில் பிரயாணிகளுக்குத் தாய்மார்கள் தங்களைத் தொட்டிலிட்டு ஆட்டினது ஞாபகமிராது. பஸ்ஸில் பிரயாணம் செய்யும் போது மீண்டும் அந்த ஞாபகம் வரும். மண்டையோடு சிதிர்ந்த தேங்காய் போல உடைபடுவதும், கால்கள் நசுங்குவதும், உடலெல்லாம் வியர்வை வெள்ளமாக ஓடுவதும் சர்வ சகஜம். இவ்விதம் பிரயாணிகள் படும் துயரம் சொல்லிமுடியாது. "ஏனய்யா இப்படிக் கஷ்டப்பட்டுப் பிரயாணம் செய்கிறீர்கள்?" எனப் பிரயாணிகளை கேட்க மார்க்கமில்லை. கண்டக்டரிடமோ செக்கிங் இன்ஸ்பெக்டரிடமோ "ஏனய்யா மனிதனை இப்படி வதைக்கிறீர்கள்?" என்று கேட்டால் "எந்தா நிங்கள் மாத்திரம் பிரயாணம் செய்தால் மதியோ? மற்றுள்ளோர் செய்யவேண்டாமோ? நல்ல வர்த்தமான நிங்கள் பறயுன்னது. ஈ பஸ்ஸில் பிரயாணம் செய்யான் சௌகரியம் இல்லங்கில் டாக்ஸியில் செல்லணம் கேட்டோ" என்று என்னவெல்லாமோ புரியாத மலையாளத்தில் மடக்குகிறார்கள்.



பையன்:—அதோ பார், அம்மா! நம்ம வேலைக்காரி கீழே விழுந்து மண்டையை உடைத்துக்கொண்டு விட்டாள்!

அம்மா (ஏதோ ஞாபகமாக):—அவளுக்கு வேறு என்ன வேலை? எப்பொழுது பார்த்தாலும் எதையாவது உடைப்பதுதான் வேலை!

சைக்கிளில் இருவர் ஏறினாலும் கைதுசெய்து குற்றம் சாட்டத் தாமதியாத அரசாங்கம் தங்களது நேர்பார்வையில் ஓடும் இந்த பஸ்களை (State Transport) நேர்மையான முறையில் நடத்தலாகாதா?

செங்கோட்டை
15—5—49 அ. அருணாசலம்

வட்ட மேஜைப் பரிசுத் தொகை ரூ. 25ஐ இந்த இதழில் வெளியாகியிருக்கும் கடிதங்கள் ஒவ்வொன்றுக்கும் ரூ. 5 வீதம் பிரித்து வழங்கப்பட்டது.

வட்ட மேஜை

மாமல்லபுரம்

பார்த்திபன் கனவு, சிவகாமியின் சபதம் முதலிய சரித்திர சம்பந்தமான தொடர் கதைகள் வெளிவந்தபோது அவைகளை ஆவலுடன் வாசித்தேன். தமிழகத்தின் மகோன்னத காலத்தைச் சித்தரிக்கும் அக்கதைகளில் மாமல்லபுரத்தின் சிறப்பைப்பற்றி எழுதியவை என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டன. அந்தக் கலைக்கோயிலைத் தரிசிக்கவேண்டும் என்று நெடுநாளாக ஆசையிருந்தது. ஆனால் போவதற்கு அதிக வசதியுமில்லை; அவகாசமுமில்லை.

நமது சர்க்கார் பஸ் சர்வீஸ் திருப்திகரமான ஒரு காரியம் செய்திருக்கிறது என்றால் அது மாமல்லபுரத்திற்கு ஞாயிறுதோறும் ''ஸ்பெஷல் பஸ்'' விடத் தொடங்கியிருப்பதுதான். போகவர மூன்றே ரூபாய்தான். கலை ஆர்வமுள்ளவர்களெல்லாம் இந்தச் சந்தர்ப்பத்தைச் சரிவரப் பயன்படுத்திக் கொள்வார்களென்று நினைக்கிறேன்.

கி. பி. 300 முதல் கி. பி. 800 வரை ஆட்சிபுரிந்த பல்லவ அரசர்கள் காலத்தில் செதுக்கப்பட்ட ரதங்களும், சிற்ப வேலைகளும், குகைக் கோயில்களும் கடலுக்கும், காற்றுக்கும், இடி மின்னலுக்கும் தப்பிப் பிழைத்தது தமிழ் நாட்டின் பாக்கியமாகும். பல்லவர்கள் சேர்த்து வைத்துப்போன கலைச் செல்வத்தை நமது அரசாங்கத்தார் என்றும் அழியாமல் இருக்கும்படி பாதுகாக்க வேண்டும். அந்த கலைக்கோயிலைத் தரிசிக்க இன்னும் அதிக வசதி செய்து தரவேண்டும்.

ஹாமில்டன் பிரிட்ஜ் அம்பட்டன் வாராவதியாகிக் கடைசியாக ''பார்பர்ஸ் பிரிட்ஜ்'' ஆகவும் ஆகிவிட்டது. அதைப்போல மாமல்லபுரம் மகாபலிபுரம் ஆகிவிட்டது. பல ஊர்களின் சிதைந்த பெயர்களைச் சென்னை சர்க்கார் பழையபடி திருத்தமாக அமைத்திருக்கிறார்கள். ஆனால் தமிழ்நாட்டின் சரித்திரத்தில் புகழ்பெற்ற மாமல்லபுரம் இன்னும் மகாபலிபுரம் என்றே வழங்கி வருகிறது. நமது அரசாங்கத்தார் மாமல்லபுரத்தின் பெயரையும், மாமல்லபுரத்திலுள்ள கலைப் பொக்கிஷத்தையும் காப்பாற்ற வேண்டும்.

சென்னை
15—5—49 மு. முருகன்

○●○

ராஜாஜி ஹால்

நான் ஒரு கிராமவாசி; நான் சென்னை வந்து இரண்டு மாதங்கள் ஆகின்றன. நான் இதுவரை 'ராஜாஜி ஹாலை'ப் பார்த்தது கிடையாது. சென்ற 15-5-49 ஞாயிறன்று மாலை 5-30 மணிக்கு 'கவர்ன்மெண்ட் ஜெனரல் ரெக்ரியேஷன் கிளப்' அங்கத்தினர்கள் ராஜாஜி ஹாலில் வருடாந்திர விழாக் கூட்டம் நடத்தினர். அதற்கு நானும் சென்றிருந்தேன். இதுவரை அந்த ஹாலுக்குள் நான் சென்றதில்லையாதலால் மிகுந்த ஆவலுடன் ஒவ்வொரு இடமாகப்பார்த்து வந்தேன். சுவர்களிலெல்லாம் அனேகப் படங்கள் மாட்டப்பட்டிருந்தன. ஒவ்வொரு படமாகப் பார்த்து வந்தேன். என்ன அதிசயம்! எல்லாம் ஆங்கிலேய கவர்னர்கள் பிரமுகர்கள் படங்களாகவே இருந்தன. ஒன்றாவது நம் இந்தியத் தலைவர்களின் படமாக இருக்கவில்லை. ஹாலின் பெயரோ நம் இந்தியத் தலைவரின் பெயரைத் தாங்கியிருக்கிறது. ஆனால் உள்ளிருக்கும் படங்களோ அன்னியருடையவை.

ஆங்கிலேயர்கள் நம் தேசத்தை விட்டுச் சென்று ஒரு வருடத்திற்கு மேலாகிவிட்டது. ஆனால் இன்றும் அவர்களது படங்கள் நம் ராஜாஜி ஹாலில் இருக்கின்றன. விலையுயர்ந்த படங்கள் அலங்காரமாயிருக்கின்றன. ஆகவே அங்கே அவை இருந்தால் என்ன என்று கேட்கிறீர்களா? அவை இருந்துவிட்டுப் போகட்டும். நம் தலைவர்களின் படங்கள் ஏன் இன்னும் அந்த ராஜாஜி ஹாலில் வைக்கப்படவில்லை?

நம் தேசத்தில் அரும்பெரும் தலைவர்கள் இல்லையா? மோதிலால் நேரு, புலாபாய் தேசாய், பால கங்காதர திலகர், சுபாஷ் சந்திர போஸ், சுவாமி விவேகானந்தர், இசைக் குயில் சரோஜினி தேவி, கப்பலோட்டிய தமிழர் வ. உ. சிதம்பரம் பிள்ளை, பாரதியார், நௌரோஜி, அரவிந்தர், ராஜாஜி, பண்டித நேரு, படேல் ஆகியோருடைய படங்களை அவ்விடத்தில் வைக்கக் கூடாதா?

என்னைப்போன்ற கிராமவாசிகள் மேற்கூறிய தலைவர்களைப் பார்த்திருக்க மாட்டார்கள். அவர்களுக்கு இந்தப் பொது இடங்களில் வைக்கப்படும் படங்கள் மூலம் தான் இப்பேர்ப்பட்ட அரிய பெரிய தலைவர்களை அறிவிக்க முடியும்.

இப்பொழுதுதான் அண்ணல் காந்தியின் படமொன்று ராஜாஜி ஹாலுக்கு வந்துள்ளது. கூடியசீக்கிரத்தில் சென்னை சர்க்கார் ராஜாஜி ஹாலில் நம் தலைவர்களின் படங்களை வைப்பதற்கு ஏற்பாடு செய்வார்கள் என்று நம்புகிறேன்.

மைலாபூர்
17—5—49 ஆர். எஸ். நாராயணன்

○●○

மேலும் சந்தேகமா?

மே மாதம் 15-உ 'கல்கி' இதழில் பிரசுரிக்கப்பட்ட ''ஏட்டுச் சுரைக்காய்த் திட்டம்'' என்ற வட்டமேஜைக் கடிதத்தைப் பார்த்தேன்.

திருவாரூர் தமிழ்த் திருவிழாவில் சென்னை சர்க்கார் பொருளாதார ஆலோசகர் டாக்டர் நடராஜன் அவர்கள் கூறியவற்றை நான் எல்லாப் பத்திரிகைகளிலும் படித்தேன். மேற்படி கடிதத்தில் குறிப்பிட்டிருக்கும் பத்திரிகைப் பகுதிகளிலும் படித்தேன். டாக்டர் நடராஜன் அவர்களின் பிரசங்கத்தை நேரில் கேட்பதற்கு முடியவில்லை.

டாக்டர் நடராஜன் ரூ. 500 கோடி மூலதனத்தை எப்படித் திரட்டுவது என்பது பற்றிச் சரியான திட்டங்கள் கூறியிருப்பதாக மேற்கூறிய பத்திரிகைகளில் ஒன்றும் காணப்படவில்லை. தாங்கள் கூறியிருப்பது போல் 'எதிர்பார்க்கப்படுகிறது' 'ஏற்பாடு செய்யப்படும்' 'பெறப்படும்' என்றுதான் குறிப்பிட்டிருக்கிறது. ரூ. 500 கோடி எவ்விதம் செலவு செய்து சென்னை சர்க்காரின் பொருளாதார

ராஜ்யக் கொண்டாட்டத்துக்காகப் புறப்பட்ட ஊர்வலம்! இதுவோ தேசத்துக்காகத் தன்னுயிரைத் தியாகம் செய்த வீரரின் துக்க ஊர்வலம்! மூன்று நாள் சொல்லொணாத கஷ்டங்களை யெல்லாம் அநுபவித்து அந்த வீரரின் ஆவி பிரிந்தது. அவர் பதவி மோகம் பிடித்து அலைய வில்லை; அதிகார பீடத்துக்குத் தலை வணங்கவில்லை. அவர் சாகும் தறுவாயில் தன் சடலத்தைக் கங்கையில் குளிப்பாட்டிப் புதைக்க வேண்டும் என்று தன் உள்ளத்து விருப்பத்தைத் தெரிவித்துச் சென்றார்.

அவர் வீர மரணமடைந்த செய்தி கேட்டு நகரமே துயரக் காடாக மாறிவிட்டது. அந்தச் செய்தி கேட்டவர்கள் கதிகலங்கினர். கடைசி முறையாக அவரைத் தரிசிக்கும் பொருட்டு ஓடோடியும் வந்தனர். அவருடைய ஞாபகார்த்தமாகக் கடைத் தெருக்கள் மூடப்பட்டன. பஸ், டிராம் முதலியவை கூட நின்றுவிட்டன. நகரமே கொள்ளை போனதுபோலிருந்தது. நகரமே அவர் வீட்டு வாசலில் கூடிவிட்டது. சவ யாத்திரை புறப்படும்போது லட்சத்துக்கு மேல் ஜனங்கள் கூடிவிட்டனர். அந்தக் கூட்டத்தில் அந்த வீரரின் மரணத்துக்காகக் கண்ணீர் பெருக்காத கண்களே யில்லை.

வீரபல் சிங் தன் கான்ஸ்டேபிள்களுக்கு ஊர்வலத்துக்குப் பின் ஐந்து கஜ தூரத்தில் இருக்குமாறு உத்தரவு அளித்துவிட்டு, தான் சற்றுப் பின் தங்கிவிட்டான். பின் வரிசையில் ஐம்பது கஜதூரத்துக்கு ஒரே பெண்கள் கூட்டமாக இருந்தது. வீர்பல் சிங் அந்தப் பக்கம் சுற்றி முற்றிப் பார்த்தான். முதல் வரிசையிலேயே அவனுடைய மனைவி மிட்டன் பாய் இருந்தாள். முதலில் வீர்பல் சிங்குக்குத் தன் கண்கள்மீதே நம்பிக்கை ஏற்படவில்லை. பிறகு ஊன்றிக் கவனித்தான். அவளேதான்! மிட்டன் பாய் ஒரு தடவை அவனைப் பார்த்தாள். அடுத்த கணமே தன் முகத்தைத் திருப்பிக்கொண்டு விட்டாள். அவளுடைய அந்தப் பார்வையில் ஒரு வெறுப்பு, ஒரு விதத் துயரம், ஒரு வித வெட்கம், ஒரு விதக் கடுமை முதலியன தொனித்தன; அதைக் கண்ட வீர்பல் சிங்குக்கு உச்சந்தலையிலிருந்து உள்ளங் கால் வரை என்னவோ செய்தது. அவன் இம் மாதிரி அவமானத்துக்கு இது வரை இலக்கானதே யில்லை. (அடுத்த இதழில் முடியும்)

கம்பீரமான சிந்தனைக்கு உரிய விஷயமும்' என்பது அவனுடைய நினைப்பு.

ஆனால் மிட்டன் பாயின் முகத்தில் மகிழ்ச்சியின் குறியையே காணோம். மேலெழுந்த வாரியான விஷயங்கள் என்று வீரபல்சிங் எண்ணியவை அவனுடைய உள்ளத்தின் ஆழத்தை அடைந்து விட்டன போலும்.

“ஆமாம், டி. எஸ். பி. கட்டாயம் உங்கள் பெயரை 'நோட்' செய்து கொண்டுதான் இருப்பார். உங்களுக்குச் சீக்கிரமே பிரமோஷன் கிடைத்தாலும் கிடைத்துவிடலாம். ஆனால் நிரபராதிகளுக்குக் கஷ்டம் கொடுத்து பிரமோஷன் பெறுவதில் என்ன பெருமை இருக்கிறது? இது உங்கள் கெட்டிக்காரத்தனத்துக்காகக் கிடைக்கும் வெகுமதி யல்ல; தேசத்துரோகம் செய்ததற்காகக் கிடைக்கும் கூலி. உங்கள் கெட்டிக்காரத்தனத்துக்கு வெகுமதி கிடைக்க வேண்டுமென்றால், உண்மைக் குற்றவாளியைக் கண்டு பிடிப்பதனாலும், கஷ்டத்தில் உழலுபவனின் கஷ்டத்தைப் போக்குவதனாலும் கிடைக்கக் கூடுமே யொழிய இம்மாதிரிக் காரியங்களினால் கிடைக்கவே கிடைக்காது” என்றான்.

இதே சமயம் ஒரு போலீஸ்காரன் வராந்தாவில் வந்து, “எசமான், ஒரு கடிதம் கொண்டு வந்திருக்கிறேன்” என்றான்.

வீரபல் சிங் வெளியே வந்து கவரை வாங்கிக்கொண்டு, உள்ளே யிருந்த ஆபீஸ் கடிதத்தை எடுத்துப் படித்துவிட்டு அதை மேஜை மீது வைத்தான்.

மிட்டன், “என்ன, பிரமோஷன் கிடைத்து விட்டதா?” என்று ஏளனமாகக் கேட்டான்.

வீரபல் சிங் வெட்கத்துடன், “எதற்காக இப்படிக் கேலி செய்கிறாய்? இன்று இன்னொரு ஊர்வலம் புறப்படப் போகிறதாம். நான் அத்துடன் இருக்க வேண்டுமாம். ஆபீஸிலிருந்து உத்தரவு வந்திருக்கிறது” என்றான்.

“அப்படியா? அப்படியானால் உங்களுக்கு அதிர்ஷ்டம்தான்! சீக்கிரம் புறப்படுங்கள். இன்றைக்கும் அன்று மாதிரி உங்கள் சாமர்த்தியத்தைக் காட்டச் சந்தர்ப்பம் வாய்த்திருக்கிறது. நன்றாகக் காட்டுங்கள் உங்கள் சாமர்த்தியத்தை! டி. எஸ். பி.யும் வருவார். உங்களுக்கு இந்தத் தடவை கட்டாயம் 'பிரமோஷன்' கிடைத்துவிடும். நிஜமாகத்தான்!” என்றான் மிட்டன்பாய்.

வீரபல் சிங் புருவத்தை நெரித்துக் கொண்டு, “நீ சிற்சில சமயங்களில் அர்த்தமில்லாமல் ஏதாவது உளற ஆரம்பித்து விடுகிறாய். நான் போய்ப் பேசாமல் நிற்கிறேன் என்று வைத்துக்கொள். அதன் பலன் என்ன ஆகும்? என்னை உதவாக்கரை என்று தள்ளி என் ஸ்தானத்தில் இன்னொருத்தனை அனுப்பி விடுவார்கள். நான் ஸ்வராஜ்யக்காரர்களுடன் அனுதாபம் காட்டுகிறேன் என்று சந்தேகம் ஏற்பட்டுவிட்டால், அப்புறம் என் நிலைமை என்ன ஆகும்? வேலையை விட்டே டிஸ்மிஸ் செய்தாலும் செய்து விடுவார்கள். உலகத்தின் போக்கை அனுசரித்து நடப்பதுதானே கெட்டிக்கார மனுஷ்யனின் செயல். உன்னைப் போல அவ்வளவு புத்திசாலியாக நான் இல்லாவிட்டாலும் இந்த ஜனங்கள் நாட்டின் நலனுக்காகவும் சுதந்திரத்துக்காகவும் பாடுபடுகிறார்கள் என்பதை அறியாமல் இல்லை. சர்க்கார் இந்த முயற்சியை வேரோடு களைந்துவிட முயல்கிறது என்பதும் எனக்குத் தெரியாததல்ல. அடிமை வாழ்வில் ஆனந்தப்பட நான் அவ்வளவு முட்டாளும் அல்ல; ஆனால் காலத்தை அனுசரித்துக் கட்டாயப் படுத்தப் படுகிறேன்” என்றான்.

வாத்திய கோஷம் காதில் விழவே வீரபல்சிங் வெளியே போய்ப் பார்த்தான். ஸ்வராஜ்யக் கட்சியாரின் ஊர்வலம் புறப்பட்டு வந்து கொண்டிருப்பது தெரிந்தது. உள்ளே சென்று 'சட்புட்'டென்று உடை உடுத்திக் கொண்டான்; தலைப்பாவைத் தலையில் வைத்துக் கொண்டான். துப்பாக்கியைப் பையில் எடுத்துப் போட்டுக்கொண்டு வெளியே வந்தான். குதிரை தயாராக நின்று கொண்டிருந்தது. போலீஸ் காரர்களும் முன்னாலிருந்தே தயாராகக் காத்துக் கொண்டு நின்றனர். அவன் வந்ததும் எல்லாரும் 'டபிள் மார்ச்' செய்துகொண்டு ஊர்வலத்தை நோக்கிப் புறப்பட்டனர்.

4

அவர்கள் பதினைந்து நிமிஷத்துக்கெல்லாம் ஊர்வலத்துக் கெதிரே போய்ச் சேர்ந்தனர். அவர்களைப் பார்த்ததும் எண்ணற்றவர்களின் வாயிலிருந்து 'வந்தே மாதரம்' என்ற கோஷம் எழுந்தது. அந்த கோஷம் மேக மண்டலத்தில் இடி இடித்து அடங்கியது போலிருந்தது. அன்றைய ஊர்வலத்துக்கும் இன்றைய ஊர்வலத்துக்கும் எவ்வளவு வித்தியாசம்? அதுவோ ஸ்வ

கிறது. எந்த விதத்திலும் நாம் அவர்களுடன் விரோதம் பாராட்டக் கூடாது' என்பதை அவர்கள் ஒன்கறிந்திருந்தனர். 'நகரத்தில் கொள்ளையும் கலகமும் முற்றக்கூடாது. நமது தர்ம யுத்தத்தில் கடைகள் கொள்ளை போகக் கூடாது; மக்கள் மரிக்கக் கூடாது' என்று அவர்கள் நினைத்தனர். அவர்களுடைய எண்ணம் ஈடேறியது.

அவர்கள் தங்கள் வெற்றிக்கு உகந்த உன்னத சின்னமாக நகரத்து மக்களின் அநுதாபத்தையும் அன்பையும் பெற்றனர். அவர்களைப் பார்த்து ஏளனமாக நகைத்தவர்கள் எல்லோரும் அவர்களுடைய துணிவையும் தைரியத்தையும் பார்த்து, அவர்களுக்கு உதவி புரிவதற்காக வந்து சேர்ந்தனர்.

மனப்போக்கில் ஏற்பட்ட இந்த மாறுதல்தான் நமது உண்மையான வெற்றி. நாம் பிறருடன் போர் புரியவேண்டிய அவசியம் இல்லை. நமது உத்தேசம் மக்களின் அநுதாபத்தையும் அன்பையும் பெறுவதேயாகும். அவர்களுடைய மனப்போக்கை மாற்ற வேண்டியதுதான் நம் கடமை. நாம் இந்த லக்ஷ்யத்தில் வெற்றி பெறும் நன்னாளில்தான் சுதந்திர சூரியன் உதயமாவான் என்பது அந்தத் தொண்டர்களுக்குத் தெரியாத விஷயம் அல்ல.

3

மூன்று நாட்கள் சென்று விட்டன. வீரபல்சிங் தன் அறையில் உட்கார்ந்து தேநீர் அருந்திக் கொண்டிருந்தான். அவனுடைய மனைவி மிட்டன் பாய் அவனெதிரே நின்று கொண்டிருந்தாள்.

"நான் அப்பொழுது வேறென்ன செய்திருக்க முடியும்? பின்னால் டி. எஸ். பி. நின்று கொண்டிருந்தார். அவர்களுக்கு வழிவிட்டிருந்தால், எனக்கல்லவா கெட்ட பெயர் ஏற்பட்டிருக்கும்!" என்றான் வீரபல்சிங்.

மிட்டன் பாய் தலையசைத்து, "நீங்கள் அவர்களை அடிக்கச் சொல்லாமலாவது இருந்திருக்கலாம் அல்லவா? உங்கள் வேலைமனுஷ்யர்களைத் தடிகொண்டு அடிக்கச் சொல்வதுதானா? நீங்கள் அவர்களை மேலே போகவிடாமல் தடுத்து மட்டும் இருக்கலாமே! காலைக்குக் குற்றவாளிகளை அடிக்கச்சொல்லி உங்களுக்கு உத்தரவிட்டால், ரொம்ப சந்தோஷத்தோடு அந்தக் காரியத்தைச் செய்வீர்கள் போலிருக்கிறதே!" என்றாள் ஏளனம் கலந்த குரலில்.

வீரபல்சிங் முகத்தைக் கோணிக்கொண்டு, "உனக்கு ஏதாவது விஷயம் புரிந்தால்தானே?" என்றான்.

"புரியாமல் என்ன? நன்றாகப் புரிகிறது. பின்னால் டி. எஸ். பி. நின்று கொண்டிருந்தார். தான் மிகக் கெட்டிக்காரன் என்பதைக் காட்டி நமது மேலதிகாரியைத் திருப்திப் படுத்த இதைவிட நல்ல சந்தர்ப்பம் வேறு வாய்க்குமோ, வாய்க்காதோ என்று எண்ணித்தானே அப்படிச் செய்தீர்கள்?" என்று மறுபடியும் குத்தலாகக் கேட்டாள் மிட்டன் பாய்.

வீரபல் சிங் வெட்கத்தை விட்டுச் சிரித்துக்கொண்டு, "டி. எஸ். பி. என் பெயரை 'நோட்' செய்து கொண்டிருக்கிறார், தெரியுமா?" என்றான்.

இந்தச் செய்தியைச் சொல்லி மிட்டன் பாயைத் திருப்தி செய்து விடலாம் என்று வீரபல் சிங் நினைத்தான். 'கண்ணியமும் பெருந்தன்மையும் மேலெழுந்தவாரியான விஷயங்கள். உள்ளத்திலிருந்து வெளிவருபவை யல்ல; நாவிலிருந்து வெளிவருபவை. தன்னலம்தான் உள்ளத்தின் ஆழத்தில் குடிகொண்டிருப்பது. அதுதான்



னையோ பேரின் கைகள் ஒடிந்துவிட்டன. ஒரு நொடியில் அவர்கள் போலீஸ் படையைக் கிழித்துக் கொண்டு போயிருக்கலாம். ஆனால் அவர்களுடைய கால்களில் கொள்கை, கடமை, நீதி, நேர்மை என்னும் விலங்குகள் மாட்டப் பட்டிருந்தன.

2

இந்த அடிதடிச் செய்தி கடைத் தெருவில் காட்டுத் தீபோல ஒரு நொடியில் பரவி விட்டது. இப்ராஹிம் குதிரையினால் நசுக்கப் பட்டார்; எத்தனையோ பேர் காயமுற்றுக் கைகால் ஒடிந்து விழுந்து விட்டனர். ஆயினும் அவர்கள் பின் வாங்கவில்லை. போலீசும் அவர்களை முன்னேற விடவில்லை.

மைக்கடை உணர்ச்சி வசப்பட்டு, "இனிமேல் என்னால் இங்கே நிற்க முடியாது. நானும் அங்கே போகிறேன்" என்றான்.

தீனதயாள், "நானும் வருகிறேன், வேடிக்கை பார்க்க!" என்று சொன்னான்.

சம்புநாத் ஒரு நிமிஷம் பேசாமல் நின்றான். திடீரென்று அவனுக்கு என்ன தோன்றிற்றோ, தெரியவில்லை. "என்றைக்காவது ஒரு நாள் நாமும் சாகவேண்டியவர்கள் தானே! நடப்பது நடக்கட்டும். நமக்காக உயிரை விடும் அவர்களுக்கு நாமும் நம்மாலான உதவி செய்வோம்" என்று சொல்லிக் கடையைச் சாத்திக்கொண்டு புறப்பட்டான்.

சிறிது நேரத்துக்குள் பெரும்பாலான கடைகள் மூடப்பட்டுவிட்டன. சிறிது நேரத்துக்கு முன் வேடிக்கைப் பார்த்துக் கொண்டு நின்றவர்கள் எல்லாம் ஓடினர். ஆயிரக்கணக்கானவர்களின் கூட்டம் சம்பவம் நடந்த இடத்துக்குப் புறப்பட்டு விட்டது. வெறி பிடித்த—ஹிம்சை உணர்ச்சி நிரம்பியவர்களின் கும்பல் அது. அதற்குக் கொள்கையும் நேர்மையும் ஒரு பொருட்டல்ல. அக் கூட்டத்தினர் சாவதற்கும் கொலை புரிவதற்கும் கூடத் தயாராகச் சென்றனர். எத்தனையோ பேர்களின் கைகளில் பெரிய !பெரிய குண்டாந் தடிகள் இருந்தன; பை நிறையக் கற்கள் இருந்தன. யாரும் யாரிடமும் சொல்லவும் இல்லை; கேட்கவும் இல்லை. எல்லாரும் மனதில் ஒரே நோக்கத்துடன், வேகமாக முன்னேறிக் கொண்டிருந்தனர்.

இந்தக் கூட்டத்தைத் தொலைவில் பார்த்த பொழுதே போலீஸ் படை சற்றுக் கலங்கியது. வீரபல் சிங்கின் முகத்தில் ஈயாடவில்லை. டி. எஸ். பி. தன் மோட்டாரை எடுத்துக் கொண்டு முன்னேறினார். அமைதியையும் அஹிம்சையையும் விரதமாகக் கொண்டவர்கள்மீது தடியடிப் பிரயோகம் செய்வது வேறு விஷயம்; வெறிபிடித்த கூட்டத்தை எதிர்ப்பது வேறு விஷயம் அல்லவா? ஆகவே போலீஸ் படை வெகு வேகமாகப் பின் அடைந்து விட்டது.

இப்ராஹிமின் முதுகில் குதிரை மறுபடியும் காலை வைத்துவிட்டது. அவர் மூர்ச்சையுற்றுக் கீழே கிடந்தார். மக்களின் கூச்சலைக் கேட்டு அவர் கண்களைத் திறந்தார். ஒரு வாலிபனை அருகில் அழைத்து, "என் கைலாஸ், நகரத்திலிருந்து யாராவது ஜனங்கள் வருகிறார்களா, என்ன?" என்று மெதுவான குரலில் கேட்டார்.

கைலாஸம், முன்னேறி வரும் கும்பலை ஒரு முறை பார்த்துவிட்டு "ஆயிரக் கணக்கானவர்கள் வந்து கொண்டிருக்கின்றனர்" என்றான்.

"அப்படியா? அவர்கள் வருவது நல்லதற்கல்ல என்று தோன்றுகிறது. நம் கொடிகளைத் திருப்பிவிடு. நாம் உடனே திரும்பி விடவேண்டும். இல்லாவிட்டால் பெரிய ரணகளரி ஏற்பட்டுவிடும். நம் நோக்கம் நம் சகோதரர்களுடனேயே சண்டையிடுவதல்ல. ஆகவே உடனே ஊர்வலத்தைத் திருப்பு" என்று 'கட்டளை யிட்டார் இப்ராஹிம்.

இதைச் சொல்லிவிட்டு, அவர் எழுந்திருக்க முயன்றார். ஆனால் எழுந்திருக்க முடியவில்லை.

சமிக்ஞை காட்டியதுதான் தாமதம். பழக்கப்பட்ட படையைப் போல் உத்தரவு கிடைத்ததும் தொண்டர்கள் திரும்பி விட்டனர். கொடிக்கழிகள், தலைப்பாகைத் துணி, கைக்குட்டை முதலியவற்றைக் கொண்டு ஒரு 'ஸ்டிரெச்சர்' தயார் செய்யப் பட்டது. இப்ராஹிமைத் தூக்கி அதில் படுக்க வைத்தனர். பிறகு எல்லாருமே பின் திரும்பினர். ஆனால் அவர்கள் தோல்வியுற்றார்களா? அவர்கள் தோல்வியடைந்தார்கள் என்று திருப்திப் படுகிறவர்கள் திருப்திப் படட்டும். ஆனால் அவர்கள் உண்மையில் மாபெரும் புரட்சிகரமான வெற்றியடைந்தனர் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

'சில சூழ்நிலைகளின் காரணமாக சகோதரர்களாகிய நமக்குள்ளேயே அபிப்பிராய பேதம் வளர்ந்து இப்படிப் போர் மூண்டிருக்

லர்களும் அவனுக்கு அதிக மதிப்புக் கொடுத்து வந்தனர். ஆள் நல்ல வாட்ட சாட்டமானவன்; நல்ல சிவப்பு நிறம். நீல விழிகள்; செம்பட்டை மயிர். பார்ப்பதற்கு நல்ல தேஜஸ்வியாக இருந்தான். கோட்டும் தொப்பியும் அணிந்து கொண்டு விட்டால் அவனுக்குத் தலைகால் தெரியாது. தானும் இந்த நாட்டைச் சேர்ந்தவன்தான் என்பதையும் மறந்து, தன்னையும் ஆளுவோரின் இனத்தைச் சேர்ந்தவர்களில் ஒருவனாக எண்ணிக் கர்வம் கொள்ளுவான். ஆனால் இப்ராஹிமின் சொற்களில் தொனித்த திரஸ்காரம் ஒரு நிமிஷம் அவனையே திகைக்க வைத்து வெட்கமுறும்படி செய்து விட்டது. அவன் நிலைமை மிகவும் தர்ம சங்கடமானதாக இருந்தது. ஊர்வலத்துக்கு வழிவிட்டால், 'ஏன் வழிவிட்டாய்?' என்று கேள்வி பிறக்கக்கூடும்; அதற்குக் காரணம் காட்டியாக வேண்டும். வழி விடாமலிருந்தால் எத்தனை நேரம் அந்த ஊர்வலக் கூட்டம் அங்கேயே நிற்குமோ, தெரியாது.



இந்தச் சிந்தனையில் லயித்திருந்த அவன் குதிரையின்மீது டி. எஸ். பி. அப்பக்கம் வருவதைக் கவனித்துவிட்டான். 'இது யோசனைக்கு நேரமில்லை. சாமர்த்தியத்தைக் காட்ட வேண்டிய தருணம்' என்று முடிவுக்கு வந்தான். உடனே இடுப்பில் செருகியிருந்த தடியை எடுத்துக் கொண்டு, குதிரையைக் கூட்டத்தின்மீது ஏவினான். அவனைப் பார்த்ததும் மற்றவர்களும் தங்கள் தங்கள் குதிரைகளைக் கூட்டத்தின் நடுவே விட ஆரம்பித்து விட்டனர். இப்ராஹிம் இன்ஸ்பெக்டரின் குதிரைக் கெதிரே நின்று கொண்டிருந்தார். அவர் தலையில் மிகவும் பலமாகத் தடியடி விழவே, அவருக்குக் கண் பூச்சி பறந்தது. நிற்கமுடியாமல் தலையைப் பிடித்துக் கொண்டு அப்படியே கீழே உட்கார்ந்து விட்டார். அதே சமயம் இன்ஸ்பெக்டரின் குதிரை தன் இரண்டு முன்னங் கால்களைத் தூக்கியது. தரையில் உட்கார்ந்திருந்த இப்ராஹிம்மீது அது தன் கால்களை ஊன்றியும் விட்டது. கூட்டம் அதுவரை அமைதியாகத்தான் நின்று கொண்டிருந்தது. இப்ராஹிம் கீழே உருளுவதைக் கண்டு சிலர் அவரைத் தூக்குவதற்காகப் பாய்ந்தனர். ஆனால் யாரும் முன்னே செல்ல முடியவில்லை. போலீஸ் படை தயை தாட்சண்யமின்றித் தடியடிப் பிரயோகம் செய்து கொண்டிருந்தது. ஜனங்கள் தடியடியை மிகவும் தைரியமாக எதிர்த்து நின்றனர். ஹிம்சை உணர்ச்சியைக் காட்டாமல் இருக்கவேண்டும் என்ற அவர்கள் நோக்கம் நிமிஷத்துக்கு நிமிஷம் தளரத் தொடங்கிவிட்டது. அடியையும் அவமானத்தையும் பொறுக்கத்தான் வேண்டுமென்றால், சுவர்போல நின்று கொண்டிருக்கும் இந்தப் போலீஸ் படையைத் தாண்டிப்போக நாம் ஏன் முயற்சிக்கக் கூடாது? நகரத்திலுள்ள லட்சக் கணக்கான மக்களின் பார்வை நம்மீதே இருக்கிறதே! 'வெற்றிக் கொடியுடன் வந்த நாம் தோல்வியுற்றுத் திரும்புவோமாகில், எந்த வாயால் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபடுமாறு மக்களை அழைக்க முடியும்?' என்ற சிந்தனை அவர்கள் உள்ளத்தில் உணர்ச்சி பெற்று எழுந்தது. ஆனால் எவனுக்கும் தன் உயிரைக் காப்பாற்றிக் கொண்டு ஓடிவிடவேண்டும் என்ற எண்ணமே எழவில்லை. அது சோற்றுக்கு வீங்கின சோம்பேறிச் சாவடிகளின் கூட்டம் அல்லவே! அது சுதந்திரத்திற்காக உண்மையாகப் பாடுபடும் தொண்டர்கள்—சுதந்திர வெறியர்களின்—ஒன்று சேர்ந்த கூட்டமல்லவா? ஆகவே அக் கூட்டத்தினர் தங்கள் தங்கள் பொறுப்பை நன்கு உணர்ந்திருந்தனர். எத்தனையோ பேரின் மண்டை உடைந்து ரத்தம் வழிந்து கொண்டிருந்தது. எந்த

சேற்று முகம் தெரியாம லிருந்தவர்கள் தானே? மோட்டாரில் ஏறி உட்கார்ந்ததும் அவர்களுக்கு மண்டைக் கர்வம் எங்கிருந்து தான் வருகிறதோ? மனிதனை மனிதனாக நினைப்பதில்லை. ஜனங்களின் சுபாவமே இப்படித்தான். கொஞ்சம் தூக்கிவிட்டுப் பெருமை யளித்தால் அப்புறம் அவர்களுக்குத் தலைகால் தெரிவதே யில்லை. ஒற்றைத் துணியைச் சுற்றிக்கொண்டு, வெறுங் காலோடு, நம் நிலைமையைச் சீர்திருத்துவதற்காகத் தன் உயிரைக் கூட விடத் தயாரா யிருக்கிறாரே, அந்த ஒரு மகான் தான் நமக்குப் பெரிய மனிதன். அவரை விட்டால் நமக்கு வேறு கதி யில்லை. நமக்கு வேறு எந்தப் பெரிய மனிதனையும் லட்சியம் இல்லை. உண்மையைச் சொல்லப் போனால் நம்மைக் கெடுத்தவர்கள் 'பெரிய மனிதர்கள்' என்று சொல்லிக்கொண்டு திரிபவர்கள் தான். சர்க்கார் அவர்களுக்கு ஒரு நல்ல பதவி தருகிறேன் என்று சொல்லிவிட்டால் போதும், சர்க்காரைப் பற்றி வானளாவப் புகழ ஆரம்பித்து விடுவார்கள் நீங்கள் சொல்லும் இந்தப் பெரிய மனிதர்கள்!" என்றான்.

"புதிய இன்ஸ்பெக்டர் வந்திருக்கிறானே அவன் ரொம்பப் பொல்லாதவனாம். நாற்சந்திக்குப் போனதும் துப்பாக்கியைத் தூக்கிக்கொண்டு விடப்போகிறான். அப்புறம் பார்க்க வேணுமே, இவர்கள் ஓடுகிற ஓட்டத்தை! நல்ல வேடிக்கையாகத்தான் இருக்கும்!" என்றான் நினைதயாள்.

ஊர்வலம் சுதந்திர உணர்ச்சியில் மூழ்கி நாற்சந்து கூடுமிடத்தை அடைந்தது. போலீஸ் படை யொன்று வழி மறித்துக் கொண்டு நிற்பதையும் கண்டது.

அடுத்த நிமிஷம் இன்ஸ்பெக்டர் வீரபல்சிங் குதிரையை அந்த ஊர்வலத்தின் முன் கொண்டு வந்து நிறுத்தி "இனி மேலே போக உங்களுக்கு அனுமதி கிடையாது" என்றான்.

ஊர்வலத்தின் வயது முதிர்ந்த தலைவர் இப்ராஹிம் அலி முன்னே வந்து, "எந்த விதமான கலாட்டாவும் நடக்காது. நான் உங்களுக்கு உத்தரவாதம் அளிக்கிறேன். நாங்கள் கடைகளைக் கொள்ளையிடவோ, மோட்டார்களைத் தாக்கவோ புறப்படவில்லை. எங்கள் நோக்கம் இவற்றை யெல்லாம்விட எத்தனையோ மடங்கு உயர்ந்தது" என்றார்.

"ஊர்வலம் இதற்கு மேலே போகாமல் பார்த்துக் கொள்ளவேண்டும் என்று எனக்குக் கட்டளை பிறப்பிக்கப் பட்டிருக்கிறது" என்றான் வீரபல்சிங்.

"உங்கள் அதிகாரிகளைச் சற்றுக் கேட்டுப் பாருங்களேன்!"

"கேட்கவேண்டியது அனாவசியம்"

"அப்படியானால் நாங்கள் இங்கேயே உட்காருகிறோம். நீங்கள் இங்கிருந்து போன பிறகு நாங்கள் போகிறோம்."

"நீங்கள் இங்கே நின்று கூட்டம் போடவும் அனுமதி கிடையாது. நீங்கள் திரும்பிப் போக வேண்டியதுதான்" என்றான் வீரபல்சிங் அதிகாரம் தொனிக்கும் குரலில்.

இப்ராஹிம் அலி கம்பீரமாக, "நாங்கள் திரும்பப் போவதில்லை. உங்கள் யாருக்குமே எங்களைத் தடுக்க உரிமை கிடையாது. நீங்கள் பலவந்தமாக, உங்கள் போலீஸ்படை, கத்தி, துப்பாக்கி இவற்றின் உதவியைக் கொண்டு தடுக்க விரும்பினால், தாராளமாகத் தடுத்துக் கொள்ளுங்கள். ஆனால் நீங்கள் எங்களைத் திருப்பியனுப்ப முடியாது. தேசத்தை அடிமைத்தளையில் கட்டிவைக்கும் இம்மாதிரியான உத்தரவை நாங்கள் நிறைவேற்றி வைக்க மாட்டோம் என்று உங்களைப் போன்ற நம் நாட்டவர்கள் தைரியமாக மறுத்துச் சொல்லும் நாள் என்றைக்குத் தான் வரப்போகிறதோ?" என்றார்.

வீரபல்சிங் ஒரு பட்டதாரி. அவன் தந்தை போலீஸ் சூபரின்டென்டா யிருந்தவர். ஆகவே அவனுடைய ஒவ்வொரு நரம்பிலும் அதிகாரத் திமிர் நிறைந்திருந்தது. ஆபீ

புளிக்கு ஆபத்து!



"அம்மாமி! பானையில் இருக்கும் புளியை எல்லாம் எடுத்து ஏன் வெளியிலே போடறேள்?"

"எங்க ஆத்துக்காரரை யாரோ இன்னைக்குக் கச்சேரியிலே கடம் வாசிக்கக் கூப்பிட்டிருக்கிறார்களாம்!"



ஊர்வலம்

ஆசிரியர் ✿ பிரேம்சந்த்

மொழிபெயர்ப்பு ✿ அக்ஷயம் ✿

பூரண ஸ்வராஜ்ய ஊர்வலம் போய்க் கொண்டிருந்தது. வாலிபர்கள் சிலர், வயதானவர்கள் சிலர், சில சிறு பையன்கள் எல்லோரும் சின்னதும் பெரியதுமான கொடிகளை உயரத் தூக்கிப் பிடித்துக் கொண்டு 'வந்தே மாதரம்' என்று வானளாவக் கோஷித்துக்கொண்டு மால் ரோடு வழியாகச் சென்று கொண்டிருந்தனர். இரு புறங்களிலும் பார்ப்போரின் கூட்டம் சுவர் வைத்தது போல நின்று கொண்டிருந்தது. அக்கூட்டத்தினர் தங்களுக்கும் ஊர்வலத்துக்கும் யாதொரு சம்பந்தமில்லாதது போலவும், அதை ஒரு வேடிக்கையாகவும் அந்த வேடிக்கை பார்ப்பதுதான் தங்களுடைய வேலை போலவும் நின்று பார்த்துக் கொண்டிருந்தனர்.

சம்புநாத் கடையின் வெளிப்புறம் போட்டிருந்த பலகை மீது நின்று கொண்டு பக்கத்துக் கடை தீனதயாளிடம், "எல்லாப் பயல்களும் யமன் வாயில் விழப்போகிறார்கள். இன்னும் கொஞ்ச தூரம் சென்றால் போலீஸ் படை இவர்களை அடித்து விரட்டப் போகிறது" என்றான்.

"மகாத்மாஜிக்கு ஏன் தான் புத்தி இப்படிப் போகிறதோ, தெரியவில்லை. இம்மாதிரி ஊர்வலம் புறப்படுவதனால் ஸ்வராஜ்யம் கிடைத்து விடுவதென்றால், எத்தனையோ நாட்களுக்கு முந்திக் கிடைத்திருக்காதா? இந்தக் கூட்டத்தில் இருப்பவர்கள் தான் யார், பார்! சோதாப் பயல்கள், ஊர் சுற்றிகள், களவாடிகள், மண்டைக் கர்வம் பிடித்தவர்கள் இவர்களைத் தவிர யாராவது ஒரு பெரிய மனுஷ்யன் இருக்கிறானா? விரலை மடக்கு" என்றான் தீனதயாள்.


பக்கத்திலேயே செருப்பு விற்கும் மைக்கூ கையில் நிறைய செருப்புக்களையும் ஜோடுகளையும் வைத்துக் கொண்டு நின்று கொண்டிருந்தான். அந்த இரண்டு ஸேட்டுகளும் பேசினதைக் கேட்டுச் சிரித்தான் அவன்.

"ஏன் சிரித்தாய் மைக்கூ? அப்படி என்ன உனக்கு அளவற்ற ஆனந்தம்?" என்று கேட்டான் சம்புநாத்.

"ஒரு பெரிய மனுசன் கூட ஊர்வலத்தில் இல்லையென்று சொன்னீர்களே, அதைக் கேட்டுத்தான் சிரித்தேன். பெரிய மனுசர்கள் இந்தக் கூட்டத்துக்கு எதற்காக வரப்போகிறார்கள்? அவர்களுக்கு இந்த ராஜ்யத்திலே என்ன சுகம் இல்லை? பெரிய பெரிய மாளிகைகளிலும் பங்களாக்களிலும் இருக்கிறார்கள்; மோட்டார்களில் ஊர் சுற்றுகிறார்கள். பெரிய பெரிய துரைகளுடன் விருந்து சாப்பிடுகிறார்கள். அவர்களுக்கு என்ன கஷ்டம்? சோற்றுக்கு இல்லாமல் சாகிறவர்கள் நாங்கள்தானே! இந்த நேரத்தில் அவர்கள் பந்தாடப் போவார்கள்; தேநீர் விருந்துக்குப் போவார்கள்; இல்லாவிட்டால் ரேடியோ கேட்க 'பார்க்கு'க்குப் போவார்கள். போலீஸிடம் சவுக்கடி வாங்க அவர்கள் எதற்காக வரப்போகிறார்கள்? நீங்கள் நன்றாகச் சொன்னீர்கள்!" என்றான் மைக்கூ.

"இந்த விஷயங்கள் எல்லாம் உனக்கு என்ன தெரியும், மைக்கூ? நாலு பெரிய மனிதர்கள் கலந்து நடத்துகிற காரியத்திலேதான் கவர்மெண்டு கவனம் செலுத்தும். சோதாப் பயல்களும், ஊர் சுற்றிகளும் கூட்டுகிற கூட்டம் அதிகாரிகளின் கண்களிலே எங்கே படப்போகிறது?" என்றான் சம்புநாத்.

மைக்கூ அவனை ஒரு முறை ஏற இறங்கப் பார்த்தான். இந்த விஷயங்களைப் புரிந்து கொள்ளும் விஷயத்தில் நீ மட்டும் ஏக போகக் குத்தகை எடுத்துக் கொள்ளவில்லை என்று சொல்வது போலிருந்தது அவன் பார்த்த பார்வை. அவன் சற்று ஆத்திரம் தொனிக்கும் குரலில், "'பெரிய' மனிதர்களைப் பெரிய மனிதராக்குவதும், அழிப்பதும் நாம்தானே? வேறு யாராவது ஆகாயத்திலிருந்து குதித்து விடுகிறார்களோ? இன்றைக்குப் பெரிய மனிதர்கள் என்று சொல்லிக் கொள்கிறவர்கள் எல்லாம்



வளரும் தமிழ்

காந்தி அஞ்சலி

கவிச் சக்கரவர்த்தி பாரதியார் இறக்கு முன் சுமார் முப்பது வருஷத்துக்கு முன்னாலேயே காந்தி மகானுடைய பெருமையைத் தம்முடைய தீர்க்கதரிசனத்தின் மூலம் உணர்ந்து "வாழ்க! நீ எம்மான்!" என்று தொடங்கும் அற்புதமான கவிதைகளை இயற்றிவிட்டுப் போனார். பாரதியார் இது வரை உயிர்வாழ்ந்து, காந்திமகானுடைய சரித்திரப் புகழ்பெற்ற இயக்கங்களைப் பார்த்திருந்தாரானால் இன்னும் எத்தனையோ அருமையான பாக்களை இயற்றியிருப்பார். அந்த பாக்கியம் பாரதியாருக்குக் கிடைக்கவில்லை. நாமக்கல் கவிஞருக்குக் கிடைத்தது.

சென்னை அரசாங்க ஆஸ்தான கவிஞர் ஸ்ரீ ராமலிங்கம் பிள்ளைக்கு காந்திஜியிடம் உள்ள பக்தி கடவுளிடம் கூடக் கிடையாது என்று சொல்லலாம். ஆகவே அவர் காந்திஜியைப் பற்றிப் பாடியிருக்கும் கவிதைகளிலே உணர்ச்சி பொங்கித் ததும்புவதில் வியப்பு ஒன்றும் இல்லை.

உதாரணமாக கீழ்க்கண்ட கவிதையைப் பாருங்கள்.

"இடிஇடித்து மின்னல் மின்னி
இருள் கவிந்து எங்கணும்
கிடுகிடுத்து உலக மெங்கும்
கிலிபிடித்த வேளையில்
குடுகுடுத்த கிழவர் காந்தி
குமரர் நாணக் கூவினார்
படிதுடித்து உண்மை போற்றும்
தொண்டர் யாரும் கூடுவோம்!"

இந்தப் பாடலைப் படிக்கும்போது இடி இடித்து மின்னல் மின்னும் பயங்கரமான வேளையிலே காந்தி மகான் அஹிம்சா சங்க நாதத்தை எடுத்து முழக்குவது நம் காதில் விழுகிறது அல்லவா?

இத்தகைய பல அருமையான பாடல்கள் இந் நூலில் இருக்கின்றன. அரசாங்க ஆஸ்தான கவிஞர் ஸ்ரீ ராமலிங்கம் பிள்ளையின் இந்தக் கவிதைத் தொகுதியை இவ்வளவு அழகிய பிரசுரமாக வெளியிட்டிருக்கும் தமிழ்ப் பண்ணையானர்களைப் பாராட்டுகிறோம். விலை ரூ. 1—12—0; பிரசுரம்: தமிழ்ப் பண்ணை, தியாகராயநகர், சென்னை.

காந்திஜி திருவுருவப் படம்

கவிச் சக்கரவர்த்தி சுப்ரமண்ய பாரதியாருடைய உருவப்படத்தை அழகாக வெளியிட்டுப் புகழ்பெற்ற ஓவியர் ஸ்ரீ ஆர்யா, காந்தி மகானுடைய திருவுருவப் படத்தை இப்போது வெளியிட்டிருக்கிறார். படத்தில் காந்தி மகான் புன்னகை பொலிய அமர்ந்திருக்கும் காட்சி மனதைக் கவருவதாக இருக்கிறது. இது பிரிட்டனில் ஹாவட் அன் கோ என்னும் கம்பெனியாரால் அச்சடிக்கப் பட்டதாம். ஒவ்வொரு இல்லத்தையும் அலங்கரிக்கத்தக்க அழகிய படம். விலை அணா 8. விலாசம்: யுனைடெட் ஆர்ட்ஸ், லஸ் கார்னர், மயிலாப்பூர், சென்னை.

குகாலய வெளியீடுகள்

தஞ்சை, செங்காலிபுரம் குகாலய நிலையத்தார் வெளியிட்டிருக்கும் கீழ்க்கண்ட புத்தகங்கள் ஐந்தும் கிடைக்கப்பெற்றோம்.

1. தாஸனது ஆத்மாநுபவம் (முதல் பாகம்)
2. தாஸனது ஆத்மாநுபவம் (இரண்டாம் பாகம்)
3. காரத பக்தி சூத்ரம், பஜகோவிந்தம்.
4. ஓம் ஸ்ரீ சுப்ரமண்ய பிரசன்ன மாலா மந்திரம்.
5. குகாலயமும் அதன் கொள்கைகளும்

இந்த ஐந்தும் ஸ்ரீ குகதாஸ் இயற்றியவை.

பேறு எனக்கு என்றான் : பக்தியோடு உன்னை உணர்ந்து கொண்டு வாழ்வேனானால் அதுவே அரிய பாக்கியம்—என்றான் பிரகலாதன்.]

****

இவ்வாறு பக்தியிலேயே நின்ற பிரகலாதனைப் பார்த்ததும் நரசிம்ம மூர்த்திக்கு அபாரமான கருணை பிறந்துவிட்டது. சொல்லுகிறார் :

அன்னானை நோக்கி
 அருள்சுரந்த நெஞ்சினனாய்,—

'என்னான் நீ வல்லன் !'
 எனமகிழ்ந்த பேரீசன்,

'முன்னான பூதங்கள்
 யாவையும் முற்றிடினும்

எந்நாளும், உலவாய்நீ—
 என்போல் உளை' என்றான்.

[அன்னானை நோக்கி : பிரகலாதனைப் பார்த்து ; அருள் சுரந்த நெஞ்சினனாய் : கருணை சுரந்த உள்ளத்தன் ஆன நரசிம்ம மூர்த்தி : என்னான் நீ : எனக்கே சொந்தமானவன் நீ ; வல்லன் : நீ மகா சமர்த்தன் பேஷ் பேஷ் ; என மகிழ்ந்த பேரீசன் : என்று பிரகலாதனைப் பார்த்துச் சொல்லி மகிழ்ந்த நரசிம்ம மூர்த்தி : முன்னான பூதங்கள் : ஆதியில் என்னால் படைக்கப் பட்ட பஞ்ச பூதங்கள் எல்லாமே அழிந்து போனாலும் ; உலவாய் நீ : அழிவு என்பது இல்லாதவனாக நீ ; எந்நாளும் என் போல் உளை என்றான் : என்றென்றும் என் போல் நித்திய ஜீவியாய் வாழ்வாய் என்று வாழ்த்தினார் நரசிம்ம மூர்த்தி.]

விபீஷணன் இரணியனது கதையை இவ்வாறு முடித்துக் கொண்டு ராவணனுக்கு மேலும் சொல்லுகிறான் :

"ஆணவம், ஆங்காரம் எல்லாம் இந்தமாதிரி ஆக வேண்டியதுதான். எனக்கு தெய்வமாகிய ராவணனே ! ஏதோ சொல்ல வேண்டியதைச் சொல்லிவிட்டேன். பயன் ஏற்படுமா என்பதைப் பற்றி எனக்குக் கவலை இல்லை. ஆனாலும் யோசனை பண்ணாமல் நல்ல வார்த்தைகளைத் தள்ளி விடுவாயானால் கேடு நேருவது நிச்சயம்.

'ஈதாகும் முன்நிகழ்ந்த(து):
 எம்பெருமான் என்மாற்றம்

யாதானும் ஆக :
 நினையா(து) இகழ்தியேல்

தீதாய் விளைதல்தனி
 திண்ணம்' எனச் செப்பினான்,

மேதாவி கட்கெல்லாம்
 மேலாய மெய்ம்மையான்.

[நினையாது இகழ்தியேல் : யோசனை செய்யாமல் நான் சொன்ன வார்த்தையை இகழ்ந்திடுவாயானால் ; தீதாய் விளைதல் தனி திண்ணம் எனச் செப்பினான் : கேடாய் முடிதல் வெகு நிச்சயம் என்று சொன்னான் : மேதாவிகட் கெல்லாம் மேலாய மெய்ம்மையான் : அறிவாளிகளுக் கெல்லாம் மேலான ஞானி ஆகிய விபீஷணன்.]

இரணியன் கதையை இவ்வாறு முடித்தான் விபீஷணன்.



எசமானி:— இதற்கு முன்னால் யார் வீட்டில் சமையல் செய்தாய் ?

சமையற்காரன் — ராவ்பகதூர் கோவிந்தராஜய்யர் வீட்டில் வேலை பார்த்தேன், அம்மா !

எசமானி :—அவர்கள் இப்பொழுது எங்கே இருக்கிறார்கள் ?

சமையற்காரன் :—ஆஸ்பத்திரியில்.

எசமானி :— அடாடா ! இரண்டு பேருமா ஆஸ்பத்திரியில் இருக்கிறார்கள் ? என்ன உடம்பு ?

சமையற்காரன் :—உடம்புக்கு வேறு ஒன்றுமில்லை ; அஜீர்ணம்தான் !

கம்பர் தரும் காட்சி

டி. கே. சி

254. இதுதான் நான் சொல்லுவது!

பேரிதிகாசத்துக்குத் தக்கவாறு பேரண்டம் முழுதும் வியாபித்துள்ள நரசிம்ம மூர்த்தியை நமக்குக் காட்டி ஆகிவிட்டது.

இரணியன், தன்னுடைய ஆணவம் நிர்மூலம் ஆகவும், இறைவனுடைய தத்துவத்தில் ஒன்றாய்க் கலந்துவிடுகிறான்.

மூன்றாவதாக சிருஷ்டி தத்துவம் (பிரமன்) முழுதுமே இறைவனது முன்னிலையில் நின்று தன்னுடைய உண்மையான நிலையை வெகு ரஸமாய் எடுத்துச் சொல்கிறது. கடைசியாக பிரகலாதனைக்கொண்டு வந்து நிறுத்துகிறது இதிகாசம்.

பிரகலாதனைப் பார்த்து நரசிம்ம மூர்த்தி "உனக்கு என்ன வேண்டும்?" என்று கேட்கிறார். பிரகலாதன் சொல்லுகிறான் :

" இதோ என் முன்பு வந்து எனக்கு அளித்துள்ள பாக்கியத்தை என்ன என்று சொல்லுவேன். உன்னுடைய தெரிசனம்தான் கிடைத்து விட்டதே. இனிமேல் எனக்கு என்ன வேண்டியிருக்கிறது? ஆனாலும் ஒரு வேண்டுகோள்."

'முன்பு பெறப்பெற்ற
பேறு முடிவில்லை ;
பின்பு பெறும்பேறும்
உண்டோ ! பெறுகுவனேல்,
என்பு பெறாத
இழிபிறவி எய்திடினும்
அன்பு பெறுகை
அரும்பே(று) எனக்'கென்றான்

[முன்பு பெறப் பெற்ற பேறு முடிவில்லை : இதோ என் முன்பு வந்து உன்னுடைய பரிபூரணமான உருவத்தை எனக்குக் காட்டி அருளி விட்டாய்,—அப்படிப் பெறப் பெற்ற பாக்கியத்தை அளந்து சொல்ல முடியுமா; பின்பு பெறும் பேறும் உண்டோ : இனிமேல் அடையக்கூடிய பாக்கியம் ஒன்று இருக்கவா செய்கிறது : பெறுகுவனேல் : ஆனாலும் ஏதோ பெறுவதற்கு ஒன்று இருக்கிறதென்றால் இதுதான் அது : என்பு பெறாத இழி பிறவி எய்திடினும் : முதுகு எலும்பும் மற்ற எலும்புகளும் பிராணிகளுக்கு இருக்கின்றன. அவைகளி லெல்லாம் கீழான பிராணி புழு. அதற்கு எலும்பே கிடையாது. அத்தகைய புழு ஒன்றாய் நான் பிறக்க நேர்ந்தாலும் நேரட்டும், ஆனால் ; அன்பு, பெறுகை அரும்

படிப்பதற்கு இல்லை !



வந்தவர் :— இத்தனை புஸ்தகங்களும் படிப்பதற்கா வைத்துக் கொண்டிருக்கிறீர்கள் ?

பத்திராசிரியர் :—அழகா யிருக்கிறது ! இவ்வளவு புத்தகமும் படிக்க முடியுமா ? விமர்சனம் செய்ய வைத்திருக்கிறேன்!

காலக்ஷேபம்

சரிதான்!

கணவன் (மனைவியிடம்) :— அடியே! நம்முடைய வீட்டுக் கஷ்டம் தீர்ந்த மாதிரிதான்! அநேகமாக முக்கால் வாசி வீடு இடைந்து விட்டது. இன்னும் கால்வாசிதான் சந்தேகமாயிருக்கிறது......

மனைவி:—அதனால் என்ன? அந்த முக்கால்வாசி வீட்டில் இருந்து கொண்டு, அப்புறம் கால் வாசி வீட்டையும் பிடித்துக் கொண்டு விடலாமே!

★

புத்திசாலி:

ராமு:—என்டா, கிட்டு! உனக்கு சைக்கிள் விடத் தெரியுமா?

கிட்டு:—தெரியாதே!

ராமு:—அப்படியானால் இந்த சைக்கிளைக் கொஞ்சம் பார்த்துக் கொண்டிரு. நான் அந்த ஹோட்டலில் காப்பி சாப்பிட்டுவிட்டு ஒரு நிமிஷத்தில் வந்து விடுகிறேன்!

★

ஜாக்கிரதை!

புருஷன்:—நேற்று நான் 'நூறு வருஷம் ஜீவித்திருப்பது எப்படி?' என்ற புஸ்தகத்தைக் கொண்டு வந்து மேஜைமேல் வைத்திருந்தேனே, அது எங்கே?

மனைவி:—நன்றாயிருக்கு! அந்தப் புஸ்தகத்தைக் கண்ட இடத்திலே போட்டு உங்கள் அம்மா கண்ணிலே பட்டு விட்டால் என்ன செய்கிறது என்று என் பெட்டியிலே மறைவாய் வச்சிருக்கேன்!

★

பைத்தியம்!

முனிசிபல் சேர்மேன் (கம்பீரமாக எழுந்து நின்று):—இதுகாறும் நாம் நமது பைத்தியங்களை வெளியூர் ஆஸ்பத்திரிகளுக்கு அனுப்பி வந்தோம். அதனால் நமக்கு அதிகம் செலவாகி வந்தது. இவ் வருஷம் நமக்கு ஓர் அநுகூலம் ஏற்பட்டு விட்டது. நாம் நமக்கென்றே ஓர் ஆஸ்பத்திரி கட்டிக்கொண்டு விட்டோம்!

நல்ல ருசு!

டிக்கெட் கலெக்டர்:—எங்கே ஐயா, உமது டிக்கெட்? சீக்கிரம் எடும்?

பிரயாணி:—என்னுடைய டிக்கெட் பாக்கெட்டிலிருந்து கீழே எங்கேயோ விழுந்து விட்டதுங்க!

டிக்கெட் கலெக்டர்:—உம்முடைய டிக்கெட் கீழே விழுந்துவிட்டது என்பதற்கு என்ன அடையாளம்?

பிரயாணி:—என் பையில் இருக்குதா, பாருங்களேன்!

★

வந்த காரியம்!

மாமா:—என்டாப்பா, உன்னைப் பார்த்து ஐந்து வருஷங்களுக்கு மேல் ஆகிறதே! இப்போது என்ன காரியமாக ஊருக்கு வந்தாய்?


மருமான்:—சும்மா பட்டணத்து வேடிக்கைகளைப் பார்த்து விட்டுப் போகலாம் என்றுதான் வந்தேன். முதன் முதலில் உங்களைப் பார்க்கிறேன்!

★

உண்மை!

நண்பன்:—அடாடா! ராமசாமியா? நீ இன்னும் உயிரோடு இருக்கிறாயா?

ராமசாமி:—ஏன் அப்படிக் கேட்கிறாய்? நான் உயிரோடு இருப்பது உனக்குப் பிடிக்கவில்லையா, என்ன?



நண்பன்:—சேச்சே, அதற்குச் சொல்லவில்லை, அப்பா! நேற்று மத்தியானம் உன்னைப் பற்றிச் சிலர் ஒரேயடியாகப் புகழ ஆரம்பித்து விட்டார்கள்!

தகவல்களை அறியலானான் மாரிமுத்து. எண்ணங்களும் சூழ்நிலையும் அனுசரணையாகவே அமைந்தன. ஆனால்…?

செல்லம் சாவித்திரி கூறிய வார்த்தைகளைக் கேட்டுத் திகிலடைந்தாள். தன்னை எரித்து விடுபவள் போலப் பார்த்து நின்ற சாவித்திரியை ஆதரவுடன் நோக்கிய வண்ணம், "சாவித்திரி அக்கா, நீங்க தம்பியைக் கூட்டிக்கிட்டு எங்கே போகப் போறீங்க? ஒங்களைப் பற்றிச் சங்கதி தெரிஞ்சதும் மெனக்கட்டு அழைச்சு வந்து இங்கே சேர்த்துடவேணுமேன்னு கவலைப்பட்டேன். உங்களை என் உடன் பிறந்த அக்காளா எண்ணிக் கெஞ்சிக் கேட்டுக்கிறேன் — இங்கேயே நாம் ரெண்டு பேரும் சேர்ந்திருக்கலாம். 'அவரு' மனசை இனியும் சோதிக்கப்படாது. ரத்தினத்துக்கும் சொல்லுங்க…!" என்றாள் செல்லம்.

"சாவித்திரி, கடந்தது கண்ணீரோடு தொலையட்டும். ரத்தினத்தை முதலிலே கண்டதுமே எனக்குச் சம்சயம் தட்டுச்சு. நெத்தி மச்சம் கடைசியா என் சந்தேகத்தைப் போக்கிடிச்சி. அவன் என் மகன் என்கிறதைப் புரிஞ்சுகிட்டேன். ஆனாலும் எதுக்கும் காலமும் வேளையும் வர வேணுமா? கொஞ்ச நாள் முந்திதான் நான் உன்னைக் கல்யாணம் செஞ்சுகிட்ட ரகசியமே செல்லத்துக்குத் தெரியும். உன்னைக் கூட்டிவர அவளேதான் ஏற்பாடெல்லாம் செஞ்சாள். அவள் பேச்சுக்காகிலும் கொஞ்சம் காது கொடு!" என்று கெஞ்சினான் மாரிமுத்து.

சாவித்திரி — பெண்! இதயம் இளகினாள். கடந்ததை மறந்தாள் — மறக்க எத்தனித்தாள்.

மாரிமுத்து அப்போதுதான் புனர் ஜென்மம் பெற்றான். செல்லம் தன் ஆசை நிறைவேறிய பரவசத்தில் முறுவலித்து நின்றாள்.

இந்த விபரீதக் காட்சிகளை — மாற்றங்களைக் கண்ட ரத்தினத்துக்கு ஒன்றுமே புலப்படவில்லை. புருஷன்—மனைவி என்ற பந்தமே தன் அம்மாவின் மனசை இவ்விதம் மாற்றிவிட்டதென்பதை அவன் அறிய முடியுமா?

தன் மகனுடைய திகைப்பையும் வியப்பையும் அறிந்தவள்போல, "தம்பி, அப்பாவோடே இனி இங்கேயே இருந்துடலாம்" என்று கனிவுடன் சொல்லி அன்புடன் ரத்தினத்தைத் தடவிக் கொடுத்தாள் சாவித்திரி.

புயல் ஓய்ந்தது; இளந் தென்றல் இதமாகப் பண்ணிசைத்தது!

தான் மாரிமுத்து. 'முதலாளி ஐயா இன்னிக்கி கனகுஷியா இருக்காரே!' என்று ஊகித்த ரத்தினத்திற்கு, 'திடீரெ'ன்று அவருக்கு ஏற்பட்ட குஷிக்குக் காரணம் என்னவென்று விளங்கவில்லை.

"இன்னும் காலேஞ்க நாள் வாக்கில் ஊருக்குப் போயிட்டு வரலாம்" என்று மாரிமுத்து ரத்தினத்தினிடம் தன்னுடைய சம்மதத்தைத் தெரிவித்திருந்தான். அதில் அவனுக்குக் கொள்ளை சந்தோஷம். "அடுத்த ஒனமைக்குள்ளே அம்மாவைக் கண்டு பணத்தை நீட்டினதும் அதுக்கு எவ்வளவு சந்தோசம் உண்டாகும்!" என்று நினைத்துப் பார்த்த பையனுக்கு மகிழ்ச்சி இரட்டித்தது.

முதலாளியைப் போல அவனுக்கும் பாட்டு படிக்க வேண்டுமென்று தோன்றியது. பீரோவில் பத்திரமாக வைத்திருந்த சினிமா பாட்டுப் புத்தகத்தின் ஞாபகம் வரவே, அதை எடுத்துக்கொண்டு வருவதற்காகச் சென்றான். எடுத்த அவசரத்தில் பாட்டுப் புத்தகத்துடன் கூடவே சேர்ந்து ஒரு போட்டோவும் தரையில் விழுந்தது. ரத்தினம் குனிந்து படத்தை எடுத்துப் பார்த்தான். படத்தில் காணப்பட்ட தன் அம்மாவையும் அருகில் உட்கார்ந்திருந்த தன் முதலாளியின் உருவத்தையும் மாறி மாறிப் பார்த்தான். அவனுக்கு உலகமே சுழன்றது!

"அப்படியானா அம்மா பக்கத்திலே இருக்கும் முதலாளிதானா என் அப்பா?"

இந்த ஒரு கேள்வி பலமுறை அவன் இதய அடித்தளத்தில் எதிரொலித்தது. ரத்தினத்தின் பிஞ்சு மனம் அதைத் தாங்கவில்லை; குமுறியது. விதியின் விசித்திரம் இப்படி நிகழக்கூடுமென்பதை அவன் எவ்விதம் நினைத்திருப்பான்?

மீண்டும் அந்தப் புகைப்படத்தை அவன் விழி பிதுங்கப் பார்த்தான். சிறு பிள்ளையாக இருக்கையில் இதே போல வேறொரு படத்தைத் தன்னிடம் அவன் தாயார் காட்டியிருப்பதும் சட்டென்று ஞாபகம் வந்தது.

அதே சமயம், "அண்ணே, சாவித்திரி அம்மாளை அழைச்சிக்கிட்டு வந்தாச்சு. வெளியிலே வரவே மாட்டேனுட்டாங்க. அப்புறம் ரத்தினம் இங்கேதான் இருக்குன்னு சொன்னதும் மறுபேச்சுச் சொல்லாமே வந்துட்டாங்க!" என்று சொல்லிவிட்டு நகர்ந்தான் ஒருவன்.

தன் அம்மாவின் பெயரைக் கேட்டவுடன் ரத்தினம் திரும்பிப் பார்த்தான். அவனுக்கு அந்தக் காட்சி கனவு போலப் பட்டது. எதிரே நின்றுகொண்டிருந்த தன் அம்மாவைக் கண்ட மாத்திரத்தில் "அம்மா!" என்று கூவியவண்ணம் ஓடிப் போய்த் தன் தாயின் கால்களைக் கட்டிக்கொண்டான். தன் மகனை நடுங்கும் கரங்களால் வாரியணைத்து, "தம்பி, எதுக்கு அழுகறே? எழுந்திரு! நம்ம ரெண்டு பேரும் இப்பவே புறப்படணும். உன்னைப் பார்க்கணுமின்னுதான் இவ்வளவு தூரம் வந்தேன். இனி வேறு இடத்தைப் பிடிச்சு வயிற்றை வளர்த்துக்குவோம். மரம் வச்சவன் தண்ணி ஊத்த மாட்டானா?" என்றாள் சாவித்திரி.

அவள் குரலில் சோகம் கருகி கூட்டிற்று; புயல் வீசியது; குமுறியது!

இதைக் கேட்டதும் மாரிமுத்து நடுங்கிப் போனான். தன் முதல் மனைவியின் இருக்கும் இடம் தெரிந்து அவளை அழைத்து வர ஏற்பாடு செய்தவன் மாரிமுத்துதான். காரியமும் கைகூடிவிட்டது. தன் இரண்டாம் மனைவி செல்லத்தின் சம்மதத்தின் பேரில்தான் அவன் எல்லாவற்றையும் செய்தான். தன் கணவன் எப்படியேனும் எல்லாம் மனநிம்மதியுடன் இருக்க வேண்டுமென்பது செல்லத்தின் லட்சியம். சொல்லப் போனால் அவள் மூலமே ரத்தினத்தைப் பற்றிய சில



நீதிபதி:—முன்னொரு தடவை திருட்டுக் கேஸில் பிடிபட்டு வந்து சங்கடப்பட்டாயே? மறுபடியும் ஏன் திருடப் போனாய்?

கைதி:—வக்கீலுக்குப் பணம் கொடுக்க வேண்டியிருந்தது, ஐயா!

அவர்களுடைய இருண்ட வாழ்வில் விடிவெள்ளி போன்று ரத்தினம் வந்திருக்கிறானே என்ற பாசமா யிருக்குமோ?

"ரத்தினம், உன்னை வந்த நாள்தொட்டு ஒன்று கேட்கணுமின்னு இருந்தேன். உனக்கு அப்பா, அம்மா இருக்கிறார்களல்லவா?" என்று ஒரு நாள் கேட்டாள் செல்லம்.

இந்தக் கேள்வியால் ஒரு நிமிஷம் நிம்மதியடைந்தான் பையன். தன்னைப் பற்றி இவ்வளவேனும் அக்கறை கொண்டுள்ள அந்த 'அம்மா'விடம் அவனுக்கு என்றுமே மரியாதை. அடுத்த நிமிஷம் அவனுடைய பிஞ்சு மனத்தை ஆத்திரமும் அழுகையும் ஆக்கிரமித்துக் கொண்டன.

"அப்பா இல்லே. அம்மா மட்டுந்தான் ஊரிலே தனியா இருக்கு. வயத்துப் பாட்டுக்கு ஏதாச்சும் கைவேலே செஞ்சு பிழைச்சுக்கிடுது. விபரந் தெரியாத சின்னப் பிள்ளையா இருக்கிறப்பவே எங்க அப்பா — அப்பாவா அவன்! — ஊஹும், அம்மாவை நட்டாத்திலே விட்டுப்பூட்டு எங்கேயோ — யாரையோ ஒருத்தியை வேறே கல்யாணம் செய்துகிட்டு ஓடிப் பூடுச்சாம். இவ்வளவு வருசமா நாங்க ரெண்டு பேரும் செத்தோமோ பிழைச்சோமான்னு தெரிஞ்சிக்கக்கூட அவருக்கு மனசு இளகல்லே. ஆனா அம்மா, உங்களைப் பெத்த தாயா எண்ணிச் சொல்றேன் — எங்க அப்பனை மட்டும் ஒரு நாள் இல்லாட்டி ஒரு நாள் என்றைக்காச்சும் அடையாளந் தெரிஞ்சுக் கண்டுட்டேன்னா, அப்புறம் அவன் உசிரு அதோடே சரி...!"

முகம் சிவக்கப் பேசிய ரத்தினத்தின் கோபத்தைக் கண்ட செல்லம் மலைத்து நின்றாள்.

விதரணை புரிந்த பெரியவர் கணைப்போல ஆக்ரோஷமாகப் பேசிய பையனின் பயங்கரச் சொற்கள், அவன் வறுமையை எண்ணிப் பார்க்கும் நிலைக்குச் செல்வத்தை இட்டுச் சென்றதோ என்னவோ, விழி கலங்கினான் அவன்.

"தம்பி, கவலைப்படாதே! எல்லாத்துக்கும் கடவுள் நல்ல வழி விடுவாரு. உடம்பை வீணா அலட்டிக்காமல் தூங்கு!"

* * *

கடந்த இரண்டொரு நாளாக ரத்தினத்துக்கு எப்படியும் தன் அம்மாவைப் பார்த்து வரவேண்டுமென்ற ஆசை அவன் மனதை வெகுவாகப் பற்றிக் கொண்டது. ஒட்டி உலர்ந்த உடலுடன் சோகச் சித்திரமாக வறுமையின் திருமுன் நிற்கும் தாயின் முகம் அகக் கண்ணில் தோன்றியது. அவனுக்கு அழுகை யழுகையாக வந்தது. தான் மாத்திரம் வேளா வேளைக்குச் சாப்பிடுவது அவனுக்கு மனம் நிறையவில்லை. தன் உயிரைக் கொடுத்துத் தன்னை ஆளாக்கிய அம்மாவுக்குத் தன் கையால் சம்பாதித்து ஏதோ 'நாலு, ரெண்டு' கொடுக்கவேண்டுமென்பது அவன் எண்ணம் — கனவு!

ஒரு நாள் சாப்பிட்டுக் கொண்டிருக்கையில், சாப்பாடு போக ஏதாவது சம்பளம் 'கெருசிராக'ப் போட்டுத் தருவதாக முதலாளி பிரஸ்தாபித்ததைக் கேட்டதிலிருந்து ரத்தினத்துக்கு அளை கடந்த உற்சாகம் ஏற்பட்டது. கிடைக்கும் சம்பளத்தை அப்படியே தன் தாயாரிடம் கொண்டு போய்க் கொடுக்க வேண்டுமென்ற ஆதங்கத்தில் நாட்களை விரல் விட்டு எண்ணிக் கொண்டிருந்தான்.

பொழுது விடிந்து பொழுது போனால் தன்னிடம் முதலாளியும் அவருடைய மனைவியும் காட்டும் பரிவு — பாசம் இவற்றை எண்ணி ரத்தினத்தால் வியக்காமல் இருக்க முடியவில்லை. இப்படிப்பட்ட முதலாளியிடமே எப்பொழுதும் காலத்தைப் போக்கக் கடவுள் அனுக்கிரகம் செய்யவேண்டுமென வேண்டிக் கொள்வான்.

* * *

அன்று ஞாயிற்றுக்கிழமை; கடை கிடையாது; மத்தியான வேளை; கூடத்தில் திருவாசகம் படித்துக் கொண்டிருந்



இளந் தென்றல்

எஸ். ஆறுமுகம்

கண் கலங்க அந்தப் பையன் சொல்லி முடித்த விருத்தாந்தம் மாரிமுத்துவின் இதய ஆழத்தைத் தொட்டது போலும்; அடக்க ஒடுக்கமாக நின்று கொண்டிருந்த பையனைத் திரும்பவும் ஒருமுறை எடை போடும் பாவனையில் நிமிர்ந்து பார்த்தான். அவனுடைய திட்டம் ரத்தினத்திற்கு வயது பத்துக்குக் குறையாதென்பது; அதை ஒட்டிய உடலமைப்புதான். ஆனாலும் ஏழ்மையின் திரைமறைவில் புதைந்திருந்த கவர்ச்சி கனிந்த முகவிலாசம். நைந்துபோன கந்தை வேஷ்டியொன்றை உடுத்தியிருந்தான் அவன். களங்கமற்றுச் சுழன்ற விழிகளிலே துயரச் சாயல்; இடையிடையில் தோன்றிய சஞ்சலத்தை மாற்றவோ மறைக்கவோ இதழ்க் கோடியில் இழைய விட்டிருந்த புன்சிரிப்பு.

கண் இமைக்காமல் அந்தப் பையனையே பார்த்துக் கொண்டிருந்த மாரிமுத்துவின் கண்கள் கலங்க ஆரம்பித்தன. 'சடக்'கென்று தட்டில் மிருந்திருந்த 'பீடா' ஒன்றை எடுத்து வாயில் போட்டுக் கொண்டு நிலைமையைச் சமாளித்தான்.

"ஏய், ரத்தினம்!"

"ஐயா!"

"அப்படின்னு எந்தவிதமான அப்பனுக்கும் இல்லாம கடையிலே நடந்துக்கணும். சொல்றது தெரிஞ்சதா?"

"ஆகட்டுமுங்க."

அண்டி வந்தவனுக்கு அபயம் அளித்த பூரிப்பு மாரிமுத்துக்கு. தினம் தினம் ஒருவேளைச் சாப்பாட்டுக்குக்கூடத் திண்டாடிப் போன தனக்கு மனமிரங்கி ஆதரவு காட்டிய தன் முதலாளியை மனமாரப் போற்றினான் ரத்தினம்.

மாரிமுத்து வாயில் குதப்பியிருந்த எச்சிலை உமிழ்ந்துவிட்டு உள்ளே சென்றான் வியாபாரத்தைக் கவனிக்க. அதற்குள் முந்திக்கொண்டு சில்லறையை முதலாளியிடம் பதவிசாக நீட்டினான் பையன்.

"இதுக்கு முந்தியே பெட்டிக் கடை அனுபவங்கூட உண்டா, தம்பி?"

ரத்தினம் சிரித்தான்.

"பேச்சு ஞாபகத்திலே மறந்தேபோயிட்டேனே! பாவம், எப்போ சாப்பிட்டதோ? இன்னும் ஒரு மணி சாவகாசத்திலே வீட்டிலே போய்ச் சோறு சாப்பிடலாம். அதுக்குள்ளே இதுகளைச் சாப்பிடு!" என்று சொல்லி நாலைந்து மலைப் பழங்களைப் பிய்த்துக் கொடுத்து, அத்துடன் 'ஐஸ்' போட்டு ஒரு 'கிளாஸ்' சர்பத்தும் கலந்து கொடுத்தான் மாரிமுத்து.

ரத்தினத்தின் கண்களினின்றும் கண்ணீர் கசிந்தது.

* * *

மாரிமுத்து தன் மனைவி செல்லத்திடம் புதிதாகச் சேர்த்திருக்கும் பையனைப் பற்றி இரண்டொரு வார்த்தைகளில் விஷயத்தை விளக்கி வைத்தான். 'ஒண்டிக்கை'யாக எவ்வளவு நாள் கடையைக் கண்ணில் எண்ணெய் ஊற்றிக் கொண்டு கண்காணிக்க முடியும் என்று சதா எச்சரித்து வந்த செல்லத்துக்குப் புதிதாக ரத்தினத்தை வேலைக்குச் சேர்த்துக் கொண்டது எவ்வளவோ ஆறுதலாகப் பட்டது.

நாட்கள் காலச் சுழலில் தேய்ந்தன. 'பொடியன்' ரத்தினம் மீதிருக்கும் நல்ல அபிப்பிராயம் தம்பதிகள் இருவராலும் அதிகாரபூர்வமாக அங்கீகரிக்கப்பட்டது. அடுத்த சில நாட்கள் கழித்து மாரிமுத்து பெட்டிக் கடைச் சாவியையும் பையனிடமே ஒப்படைத்தான். ரத்தினம் 'கல்லா'வில் அமர்ந்து கொண்டான். அன்றாடம் வரவு செலவுக் கணக்கை முதலாளியிடம் சரி பார்த்து ஒப்படைக்க வேண்டியது அவன் பொறுப்பு.

ஏக தேசங்களில் கடையை 'செக்' செய்ய வந்து போவான் மாரிமுத்து. "பயல் ரொம்ப சூடிகை!" என்று தன் சகபாடிகள் ரத்தினத்தை உயர்த்திக் கூறும் போதெல்லாம் மாரிமுத்துவின் மனம் மகிழ்ச்சி யடையும்.

மாரிமுத்துவும் அவன் மனைவியுமாக இருந்த அந்தக் குடும்பத்தில் ரத்தினமும் ஒருவனாகவே கருதப்பட்டான். நாளாவட்டத்தில் இனமறியாப் பாசத்தியம் ரத்தினத்தின் மீது காந்தம்போல ஆரோகணித்திருப்பதை மாரிமுத்து நன்கு உணர்ந்திருந்தான். அதேமாதிரி செல்லத்துக்கும் பையன்மேல் அலாதியான வாஞ்சை. தன் வீட்டு வேலைக்காரப் பையன் என்ற நினைவே அவளுக்கு இல்லை. ஒருக்கால் பிள்ளைப் பேறில்லாத



தோட்டக்காரன் :— என்னடா பயலே! எங்கள் வீட்டு மரத்தின்மேல் ஏறி ஏன் பழம் திருடுகிறாய்?

பையன் :— நான் பழம் ஒன்றும் திருடவில்லை, ஐயா! உங்கள் வீட்டு நாய்க்கு இரண்டு காலால் நிற்கப் பழக்கிக் கொடுக்கிறேன்!

பொழுதே பாய்ந்து கொன்றிருப்பேன். நீ அறிவில்லாத வைக்கோல் பொம்மை தானே!" என்று கூறிப் புலி பயங்கரமாக உறுமிற்று. பொம்மை பயந்து போய் ஓடோடியும் சென்றது.

வழியில் ஒரு வாய்க்கால் குறுக்கிட்டது. பொம்மை அதைக் கடக்க நினைத்து வாய்க்காலில் காலை வைத்தது. அவ்வளவுதான்; அது தண்ணீரில் மிதக்க ஆரம்பித்தது. பாவம்! பொம்மை வாய்க்கால் தண்ணீரில் வெகு தூரம் மிதந்து சென்றது. பிறகு அது அதிர்ஷ்டவசமாக வாய்க்கால் கரை ஓரத்திலிருந்த ஒரு மாக்கிளையில் சிக்கிக் கொண்டது. உடனே பொம்மை மெதுவாக மரக் கிளையைப் பிடித்துக்கொண்டு கரையை அடைந்தது. தன் உடலிலுள்ள வைக்கோல் முழுவதும் நனைந்து கனத்துப் போகவே, பொம்மையினால் ஒரு அடிகூட நடக்க முடியவில்லை. தொப்பென்று கீழே விழுந்து அன்று இரவு முழுவதும் எழுந்திருக்க முடியாமல் மிகவும் வருத்தத்துடன் கரையிலேயே படுத்துக்கொண்டிருந்தது.

பொழுது விடிந்து வெய்யில் பொம்மைமீது பட்டதும் அதற்குள்ளிருந்த வைக்கோல் உலர்ந்துவிடவே, அது எழுந்து நடப்பது சாத்தியமாயிற்று.

அப்பொழுது சமீபத்தில் மேய்ந்து கொண்டிருந்த ஒரு மாடு பொம்மையை நெருங்கி, அதற்குள்ளிருந்த வைக்கோலைத் தின்ன ஆரம்பித்தது. பொம்மை பயந்து நடுங்கிற்று. அதற்கு ஒன்றுமே புரியவில்லை.

நல்ல வேளையாக அப்பொழுது பலத்த காற்று வீசி, பொம்மையை ஒரு கருமான் பட்டறைக்கு அருகில் கொண்டு வந்து போட்டது. கருமான் பட்டறையை முன்பின் பார்த்திராத அந்தப் பொம்மை அங்கு எரிந்து கொண்டிருந்த அடுப்பின் அருகில் நெருங்கவே, நெருப்பு பொம்மையின் கால்களிலுள்ள வைக்கோலைப் பற்றிக் கொண்டது. அங்கிருந்த சிறுவன் ஒருவன் ஓடோடியும் வந்து நெருப்பை அணைத்து, "சோளக் கொல்லை காக்கும் பொம்மைக்கு இங்கே என்ன வேலை?" என்றுசொல்லி, பொம்மையைத் தூக்கி வெளியில் போட்டான்.

உடனே பொம்மை வேகமாகத் தன் இருப்பிடத்திற்குப் போக ஆரம்பித்தது, அப்பொழுது இருட்டி விட்டது. தான் இருந்த வயலுக்கு அருகில் சென்றதும் பொம்மைக்குத் தூக்கி வாரிப் போட்டது. அதன் கண்களை அதனால் நம்பவே முடியவில்லை. ஏனென்றால் அந்தப் பொம்மை இருந்த அதே இடத்தில் வேறு ஒரு புதிய பொம்மை இருந்தது. அந்தப் புதிய பொம்மை பழைய பொம்மையைப் பார்த்து, "எட்டிப் போ! என்னிடம் நெருங்காதே! என் வயலில் உனக்கு என்ன வேலை?" என்றது. பழைய பொம்மை அழுது கொண்டே வயலுக்குச் சற்றுத் தூரத்திலிருந்த மேட்டுக்குப் போய்ப் படுத்துக் கொண்டது.

மறுநாள் தோட்டக்காரன் பழைய பொம்மையைப் பார்த்து மனமிரங்கி அதையும் புதிய பொம்மையின் பக்கத்தில் நிறுத்தி வைத்தான். அன்று முதல் பழைய பொம்மை அலுத்துக் கொள்வதேயில்லை. அது எப்போதும் போல் உற்சாகத்துடன் சோளக் கொல்லையைக் காத்து வந்தது.

சோளக் கொல்லைப் பொம்மை

ராஜி

சோளம் முதலிய தானிய வகைகள் போட்டிருக்கும் வயல்களில் மனிதனைப் போல ஒரு பொம்மையை வைக்கோலினால் செய்து வைப்பார்கள். அதற்குப் பழைய சட்டையும் தொப்பியும் போட்டு வைத்திருப்பார்கள். அதனால் அது பார்ப்பதற்கு மனிதனைப் போலத் தோன்றும். அந்தப் பொம்மையைக் காணும் பறவைகள் மனிதன் என்று பயந்து வயலில் இருக்கும் பயிரை நெருங்காமல் ஓடிவிடும். அந்த மாதிரிப் பொம்மை ஒன்று வெகு நாட்களாக ஒரு சோளக் கொல்லையில் இருந்தது.

ஒரு நாள் அந்தப் பொம்மைக்கு மிகவும் அலுப்பு உண்டாகிவிட்டது. "இரவும் பகலுமாக இந்த வயலுக்குக் காவலிருப்பதுதானா நம் வேலை? இந்த வயல்களின் சொந்தக்காரன் நம்மைக் கவனிப்பதே இல்லை. நமக்குப் பழைய சட்டையும் தொப்பியுமே போட்டிருக்கிறான். நாம் பார்ப்பதற்கு மனிதனைப்போல இல்லையா? இப்பொழுதே இவ்விடத்தை விட்டுக் கிளம்பி நாளை முழுவதும் இங்கு வராமல் இருப்போம். பறவைகள் பயிரை நன்றாய்ப் பாழாக்கட்டும்" என்று வெகு வேகமாக வயலை விட்டு வெளியேறியது. அப்போது பாதி ராத்திரி.



வெகு தூரம் நடந்த பிறகு அந்தப்பொம்மை சிரம பரிகாரம் செய்து கொள்ளலாம் என்று ஒரு மரத்தடியில் உட்கார்ந்தது. அம்மரத்துக் கிளையிலிருந்த ஆந்தை ஒன்று 'டுக், டுக், டுக்' என்று சத்தம் செய்து கொண்டிருந்தது. அந்தச் சத்தத்தைக் கேட்ட பொம்மைக்குக் கோபம் வந்தது. "ஏ, ஆந்தையே! என் அடிக்கடி சத்தம் போட்டு என்னைத் தொந்தரவு செய்கிறாய்? பேசாமல் தூங்குவதுதானே?" என்று கேட்டது.

உடனே ஆந்தைக்கும் கோபம் வந்துவிட்டது. சிறகைப் படபடவென்று அடித்துக் கொண்டு, "ஏ, பொம்மையே! நீ பார்ப்பதற்கு மனிதனைப் போல இருப்பதால் அல்லவா இறுமாப்பு அடைந்திருக்கிறாய்? இரவில் ஆந்தைகள் தூங்குவதை நீ எப்பொழுதாவது பார்த்திருக்கிறாயா? வைக்கோலினால் செய்யப்பட்ட பொம்மைதானே நீ! உனக்கு எங்கிருந்து புத்திவரும்?" என்றது. ஆந்தை சொல்லியதைக் கேட்டதும் பொம்மை அவமானம் அடைந்து அவ்விடத்தை விட்டு நகர்ந்தது.

பொம்மை கொஞ்ச தூரம் சென்றதும் புதரில் படுத்துக் கொண்டிருந்த ஒரு புலியைப் பார்த்தது. உடனே பொம்மை "நான் வயல்களில் அடிக்கடி பூனைகளைப் பார்த்திருக்கிறேன். ஆனால் இவ்வளவு பெரிய பூனையைப் பார்த்தது இல்லை" என்று சொல்லவே, புலிக்குக் கோபம் வந்தது. "ஏ, பொம்மையே! நீ யாரைப் பார்த்துப் பூனை என்கிறாய்? நானா பூனை? நான் பூனை அல்ல; புலி! தெரியுமா? நீ நிஜ மனிதனாக இருந்தால் உன் மீது இப்

ளுக்கு மிகவும் லஜ்ஜையாக இருந்தது. ஆகையால் தனக்கு ஆங்கிலம் கற்பிக்க வரும் சாரதா பாயுடன் தன் புருஷன் தாராளமாகச் சம்பாஷணை செய்வதைக் கண்டு அவளுக்கு அசூயை ஏற்பட்டது. பாடம் முடிந்தவுடன் அவளுடன் நாராயணன் உலாவப்போவது வழக்கமாயிற்று. இதைச் சில நாள் பார்த்திருக்கவே அவளுக்குத் துக்கமும் கவலையும் சகிக்க முடியாமல் போயிற்று. எது எப்படியானாலும் இதை இனி வளரவிடக் கூடாதென்று நிச்சயம் செய்தாள். தன்னுடைய நாணத்தைச் சிறிது சிறிதாக விட்டுவிட்டாள். அவனுடன் வெளியே போகவும் ஆரம்பித்தாள். இதைக் கண்டு நாராயணனுக்கு ஏற்பட்ட ஆனந்தத்திற்கு அளவில்லை. பெரிய பாவத்தில் மூழ்கி இருந்த ஆத்மாவை உத்தாரணம் செய்த மதகுருவைப்போல் அவன் தன்னைப் பாவித்துக் கொண்டான். கல்யாணியின் ஆசையைப் பூர்த்தி செய்யத் தனது ஆங்கில நண்பர்கள் வீட்டிற்கு அவளை அழைத்துப் போய் அவர்களுடைய 'லேடி'களோடு பரிச்சயம் பண்ணி வைத்தான். காலக்கிரமத்தில் அவர்களைப் போல் அங்கிகள் அணிந்து தலைமயிரைக் கொண்டை முடிச்சுப் போட்டுக் கொள்வதிலும் கல்யாணி தேர்ச்சி அடைந்தாள். இன்னும் சில மாத காலம் அவகாசம் கிடைத்திருந்தால் தான் தனியாகச் சமையல் செய்வதை விட்டுவிட்டுப் பூரண துரைசானியாகவும் அவள் பரிணமித்து இருப்பான்.

ஆனால் நாம் ஒன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைக்கிறது. ஒரு நாள் மாலை எட்டு மணிக்குக் கல்யாணி தன் கணவன் வரவை எதிர்பார்த்துக் கொண்டு பங்களா வாசலில் ஒரு சாய்ந்த நாற்காலியில் படுத்துக் கொண்டிருந்தாள். தன் பழைய மடத்தனத்தைப் பற்றி நினைக்க நினைக்க அவள் முகத்தில் புன்சிரிப்பு தோன்றிற்று. தன் தாய் தந்தையர்களின் குறுகிய வாழ்க்கையை நினைத்ததும் அந்தச் சிரிப்பு வருத்தமாக மாறியது. இப்படிப் பலவிதமாக யோசித்துக் கொண்டிருக்கையில் நாராயணன் வந்து அவள் பக்கத்தில் உட்கார்ந்தான். ஏதோ ஆழ்ந்த எண்ணத்தில் மூழ்கியவனாக அவன் காணப்பட்டான். தன்னுடைய பகற் கனவிலிருந்து விழித்துப் பக்கத்திலிருந்த அவனைப் பார்த்ததும் "ஏன் இப்படிப் பூனைபோல் தெரியாமல் வந்து உட்கார்ந்தீர்கள்?" என்று கேட்டாள் கல்யாணி.

"உன்னுடன் கொஞ்சம் பேசவேண்டியிருக்கிறது!" என்றான் காதலன் நாராயணன்.

"என்ன விஷயம்?" என்று கேட்டாள் காதலி கல்யாணி.

"நான் என் பட்லரை அனுப்பிவிட உத்தேசித்து விட்டேன். என் ஆங்கிலப் பழக்கங்களையும் விட்டுவிட்டு முன்னால் இருந்த பழக்க வழக்கங்களுக்குப் போகப் போகிறேன்!"

கல்யாணியின் மனம் திகில் அடைந்தது. இது என்ன புது விபத்து! இருந்தாலும் கூடிய வரையில் தன் மனதை அடக்கிக் கொண்டு, "ஏன், என்ன நடந்து விட்டது? எனக்கு ஒன்றும் புரியவில்லையே!" என்றாள்.

"சீமையிலிருந்து கொண்டு வந்த புது நாகரிகத்தில் இருந்த நம்பிக்கையை நான் இழந்து விட்டேன். சில வழக்கங்கள் அந் தேசத்திற்கே பொருந்தியவை. இந்த உடுப்பு, தொப்பி, கழுத்துப் பட்டை இவைகளை இந்த உஷ்ண தேசத்தில் அணிவது மூடத்தனமென்று தோன்றுகிறது. மற்ற வழக்கங்கள் அனாவசியமானவை. மாதம் எண்ணூறு ரூபாய் வந்தும் போதவில்லை. ஆகையால் ஆடம்பரமற்ற வாழ்க்கையை நான் விரும்புகிறேன். நீ இனி எனக்கும் சேர்த்துச் சமையல் செய்ய வேண்டும்" என்றான்.



கல்யாணி ஒன்றும் பேசவில்லை. "புருஷர்களுக்கும் தெய்வத்திற்கும் புத்தியில்லை. அவர்கள் இஷ்டப்படி நாம் ஆடவேண்டும். இந்த அநியாயத்தை யாரிடம் சொல்வது?" என்று எண்ணிக் கொண்டே தன்னுடைய அறைக்குப் போய் அவள் தன் முகத்தைக் கண்ணாடியில் நோக்கினாள். அடுத்த நிமிஷத்தில் அங்கிகளை எடுத்து விட்டுப் பழைய ரவிக்கையைப் போட்டுக் கொண்டு தன் தலை மயிரை முன்போல் முடிந்து கொண்டு திரும்பவும் கண்ணாடியில் தன்னை நோக்கினாள்.

சங்கராச்சாரியாரின் பாஷ்யத்தைப் படிக்காமலேயே மாயாவாதத்தின் உண்மை அவளுக்குப் பிரத்தியக்ஷமாக விளங்கிற்று.

விட வேண்டுமென்றும் உபதேசம் செய்து அனுப்பினான்.

3

இருவரும் சந்திரபுரத்துக்குக் காலை எட்டு மணிக்குப் போய்ச் சேர்ந்தார்கள். ஸ்டேஷனுக்குக் கார் வந்திருந்தது. நாராயணன் நேரில் வராததைப் பற்றிக் கல்யாணிக்குச் சிறிது வருத்தம். இருவரும் மௌனமாக அதில் ஏறிப் போனார்கள்.

கார் ஒரு பங்களாவுக்குள் போய் நின்றது. உடனே ஒரு துரை அவர்கள் முன்னால் வந்து நின்றார். இருவருக்கும் அடையாளம் புரியவில்லை. "ஓஹோ! அடியோடு மறந்து போய் விட்டீர்களா?" என்று சிரித்த பொழுதுதான் அறிந்து கொண்டார்கள். "சௌக்கியமாக வந்தீர்களா?" என்று கேட்டுக்கொண்டே நாராயணன் தன் பத்தினியின் கையைப் பிடித்துக் கீழே இறக்கி விட்டான். கல்யாணிக்குக் கூச்சத்தாலும், மனக் குழப்பத்தாலும் தன் காலடி கூடத் தெரியவில்லை. திடீரென்று உலகம் தலைகீழாகப் போய்விட்டதுபோல இருந்தது. ஜகன்னாதனுக்கும் மூளை சிறிது கலங்கிற்று. கனவோ என்று இரண்டு மூன்று தரம் கண்களைத் துடைத்துவிட்டுக் கொண்டான். ஆனால் ஒரு ஐ. ஸி. எஸ்.காரர் சாதாரண மனிதர்களைப்போல் இருப்பார் என்று நினைத்தது அறிவீனம் என்று எண்ணி அவன் ஒருவாறு தன் நினைவு பெற்றான்.

வீட்டிற்குள் போனதும் நாராயணன் அவர்களை உட்காரச் சொன்னான். கல்யாணி மட்டும் நின்றுகொண்டே இருந்தாள். அவள் பேரில் இரக்கங்கொண்டு பிரத்தியேகமாக ஒதுக்கப்பட்டிருந்த சமையல் அறைக்கு அவளை அழைத்துக் கொண்டு போய் விட்டுவிட்டு ஜகன்னாதன் திரும்பி வந்து உட்கார்ந்தான்.

"என்ன ஜகன்னாதா! இப்படிப் பைத்தியம் பிடித்தவன்போல் விழிக்காதே!" என்று சொல்லிவிட்டு, நாராயணன் "பையா! இருவருக்கும் காப்பி கொண்டு வா!" என்று ஒரு மணியை அடித்தான். உடனே ஒரு பட்லர், பீங்கான் கோப்பையில் காப்பி, சாஸர், ஸ்பூனுடன் காப்பி கொண்டுவந்து வைத்தான்.

ஜகன்னாதனுக்குத் திகில் பிடித்து விட்டது. என்ன செய்வதென்று புரியவில்லை. "காலேஜில் படித்தும் இன்னும் நீ நாகரிகத்தில் நிரக்ஷரகுக்ஷியாக இருக்கிறாயே!" என்று நாராயணன் கேலியாகச் சொல்லவே, ஜகன்னாதன் காப்பியை எடுத்துக் குடிக்கவாரம்பித்தான்.

அன்று கல்யாணி தனக்கும் ஜகன்னாதனுக்கும் தனியாகச் சமையல் செய்தாள். சாப்பிட்டு முடிந்தவுடன் ஜகன்னாதன் ஊருக்குக் கிளம்பி விட்டான்.

நாராயணன் தன் பிரசங்கத்தை மறுநாளே ஆரம்பிக்கத் தயங்கவில்லை. வர்ணாசிரம தர்மம் ஒரு மூடத்தனம். அதன் சம்பிரதாயம் கையாலாகாதவர்களின் அற்ப வாழ்க்கைக்கு ஒரு சாதனம். அதன் கொள்கைகளை நான் ஏற்றுக் கொள்ளவில்லை. அதன் பழக்கங்களையும் நான் அநுசரிக்கவில்லை. உதாரணமாக மாமிச போஜனம் பலத்திற்கு அவசியம். மிதமான மதுபானமும் சுகத்திற்கு இன்றியமையாதது. ஆனால் அதற்காக உன்னை நான் தொந்தரவு படுத்தப் போவதில்லை. இஷ்டப்படி இருக்கலாம்.

இந்தப் பிரசங்கத்தைக் கேட்டுக் கல்யாணி துக்கசாகரத்தில் ஆழ்ந்தாள். அந்த வீட்டில் இருப்பதே பெரிய குற்றமென்று கருதினாள். தினம் மூன்று முறை ஸ்நானம் செய்தபோதிலும் தனது அசுத்தம் போகவில்லை என்று நினைத்தாள். மனத்தைக் கழுவுவது எப்படி? ஒரு நாளாவது வேஷ்டி திருநாமத்துடன் நாராயணனைப் பழைய புருஷனாகக் கண்ணால் காண வேண்டுமென்று ஏக்கம் கொண்டாள். சிலவேளை தற்கொலை செய்து கொள்ளலாமா வென்று யோசித்தாள். ஆனால் பதினெட்டு வயதில் உயிரை விடுவது சுலபம் அல்ல. அவள் அங்கங்களில் யௌவனம் ததும்பி ஜ்வலித்தது. தான் சிலகாலம் அன்புடன் சேவை செய்தால் தன் பர்த்தாவின் மனத்தை மாற்றக் கூடாதா வென்று அவள் எண்ணினாள். என்ன துராசாரம் செய்தபோதிலும் தன்னுடைய கணவன் தன் பேரில் அன்பு பாராட்டத் தயாராக விருப்பதைக் கண்டாள். ஆகவே தன் ஆசாரத்தை விடாமலும் பல்லைக் கடித்துக் கொண்டு தன் மனவேதனையைப் புருஷனுக்குக் காட்டாமலும் சமாளித்து வந்தாள்.

இந்தச் சந்தர்ப்பத்தில் அவளுக்கு இன்னொரு கவலை ஏற்பட்டது. தன்னுடன் பிறந்து வளர்ந்து வந்த நாணத்தின் காரணமாக நாராயணன் இஷ்டப்படி குலாவிப் பேசுவதற்கும் மாலையில் உலாவுவதற்கும் அவளால் சாத்தியப்படவில்லை. அவன் பக்கத்தில் உட்காருவதற்குக்கூட அவ

காலைப் பார்த்து வெகு நாட்கள் ஆகி விட்டன. வெளித் தோற்றத்தின் மாறுதலை விட உள்ளத்தின் மாறுதல் பதின்மடங்கு அதிகமாக விருந்தது. இவ்விரண்டு வருஷங்களில் அவன் தன் தாய்நாட்டின் சமாஜத்தை முற்றிலும் வெறுத்தான். தனது பால்யத்தின் சிறுமையை நினைக்கும் பொழுதெல்லாம் சகிக்க முடியாத நாணமடைந்தான். மதம், ஆசாரம் எல்லாம் இவ்வுலக வாழ்க்கையின் இன்பத்தை யறியாத மூடர்களின் மூர்க்கத் தனம் என்று நினைத்தான். தனக்கு இவ்வித மூட சமூகத்தில் திரும்பி வந்து வாழ வேண்டும் என்று விதி இருக்கிறதே என்ற வருத்தம் அடிக்கடி உண்டாயிற்று. ஆயினும் மேல்நாட்டு வாழ்க்கையின் மேன்மையைத் தன்னுடைய நாட்டில் நிலைநிறுத்தத் தனக்குச் சந்தர்ப்பம் வாய்த்ததென்று எண்ணி ஒருவாறு ஆறுதல் அடைந்தான்.

இப் புனர்ஜன்மத்தில் கல்யாணியின் ஸ்தானம் அவனுக்குச் சரியாக விளங்கவில்லை. ஆனால் அவளுக்கு வயது பதினெட்டு. இரண்டு மூன்று வருஷத்தில் முற்றிலும் மாறிவிடக் கூடும். அழகிலோ எந்த நாட்டுப் பெண்ணுக்கும் குறைவில்லை. அவளைப் பழைய அநாகரிக வாழ்க்கையிலிருந்து உத்தாரணம் செய்வது தன் கடமை என்று அவன் எண்ணினான்.

சுந்தரபுரத்தில் ஸப்-கலெக்டராக நியமிக்கப்பட்டவுடனே ஒரு நல்ல நாயர் பையனை 'பட்லர்'ஆக நியமித்துக் கொண்டான். சாப்பிடுவதற்கு மேஜை, பீங்கான் பாத்திரங்கள் முதலிய நாகரிகத்திற்கு வேண்டிய சாமக்கிரியைகளெல்லாம் சீக்கிரத்தில் தயாராகி விட்டன. கல்யாணிக்கு மாத்திரம் தனியாக ஒரு சமையல் அறையும் சில பித்தளைப் பாத்திரங்களும் ஒதுக்கி வைக்கப்பட்டன. உடனே அவள் தன் பழைய வழக்கங்களை மறந்து விடுவது கஷ்டமென்பதை அவன் மறக்கவில்லை. இப்படி ஜாகை தயாரானவுடன், அந்த ஊர்ப் பெண் பாடசாலையில் உபாத்தியாயினியான சாந்தி பாய் என்னும் பெண்மணியைத் தன் துரைசானிக்கு ஆங்கிலம் கற்பிப்பதற்கு ஏற்பாடு செய்துவிட்டு 'உடனே புறப்பட்டு வரவும்' என்று தந்தி அடித்தான். இந்தத் தந்திக்காகக் கல்யாணி வீட்டில் எல்லோரும் ஒரு மாதமாகக் காத்துக் கொண்டிருந்தனர். நாராயணன் பம்பாயில் வந்து இறங்கினது முதற்கொண்டு கல்யாணியின் வீடு செத்த வீடு மாதிரி ஆகி விட்டது. ஒருவருக்கொருவர் கண்ணெடுத்துப் பார்க்க முடியவில்லை. நரசிம்மாச்சாரியார் தன் ஜன்மம் கஷ்டமாயிற்றென்று எண்ணினார். தன் பெண் போய்விடுவாள் என்ற துக்கமும், தன் பதியின் பேரில் கோபமும் சீதையம்மாளின் முகத்தில் மாறி மாறித் தாண்டவம் ஆடின. கல்யாணிக்கோ தன் பெற்றோரைப் பிரியும் விசனமும் தன் புருஷன் மனோ நிலையைப் பற்றிய சிந்தனையும் சேர்ந்து ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு யுகமாகக் கழிந்துகொண்டிருந்தது. ஜகன்னாதன் ஒருவனுக்கு மட்டும் அதிக துக்கமில்லை. ஒன்றிரண்டு வருஷங்களில் எல்லாம் சரிப்பட்டுவிடும் என்று நினைத்தான். பணத்தையும் செல்வாக்கையும் கிழ வைதிகர்கள் எவ்வளவு காலம் எதிர்க்க முடியும்?

கணக்கில் நிபுணன்



விருந்தாளி:—தயிர் வடை ரொம்ப நன்றாயிருக்கிறது! நான்பாட்டுக்குக் கணக்கில்லாமல் சாப்பிட்டு விட்டேன்...

வீட்டுக்காரர் மகன்:—இதோடு ஒன்பது தயிர் வடை, மாமா!

தந்தி கிடைத்ததும் நரசிம்மாச்சாரியார், ஜகன்னாதனைக் கூப்பிட்டுத் தன் சகோதரியை அழைத்துப் போய் நாராயணனிடம் விட்டுவிட்டு உடனே அடுத்த ரயிலில் வந்துவிட வேண்டும் என்று கட்டளையிட்டார். புறப்படும் காலத்தில் துக்கத்தைப் பாராட்டாமல் தம் புத்திரியைப் பிரியத்துடன் ஆசீர்வாதம் செய்து அனுப்பினார். சீதையம்மாளும் பழைய சம்பிரதாய ஆசாரங்களை விட்டுவிடக் கூடாதென்றும், நாராயணனையும் தன் வழிக்குக் கொண்டு வந்து

அன்பு முழுவதும் தாய் தந்தையர்களிடத்தே நிற்கின்றது. இக்காரணத்தால் இல்வாசி தன் குடும்பத்தில் காலூன்றி நிற்கும் வரை புகுந்த வீட்டில் ஆறு மாதமும், பிறந்த வீட்டில் ஆறு மாதமுமாகக் காலம் கழிப்பது வழக்கம். பதினாறு வயதில், ஒன்று தன் கணவனை விட்டு விட வேண்டும்; அல்லது தன் செல்வத் தந்தையைத் தியாகம் செய்ய வேண்டும் என்ற கடும் பிரச்னையைத் தீர்க்க அவளிடம் சக்தி ஏது? ஆகவே, இரு கொள்ளிக்கு நடுவில் அகப்பட்ட எறும்புபோல் கல்யாணி தவித்தாள்.

இத்தனைக்கும் நாராயணனுக்குத் தன் மாமனார் அபிப்பிராயம் தெரியாமல் இல்லை. ஆனால் அவரைப் போன்ற பழைய வைதிகர்களோடு பேசுவதில் லாபம் ஒன்றும் இல்லையென்றும் வருங்காலத்தில் தானாகவே வழிக்கு வருவார்கள் என்றும் எண்ணி அவன் சும்மா இருந்துவிட்டான். ஜகன்னாதனிடம் மட்டும் தன் ஏற்பாடுகளையும், மனோரதங்களையும் பற்றி ஓயாமல் பேசிக்கொண்டிருந்தான். அவனுக்கும் ஒரு நல்ல வேலை செய்து வைப்பதாக வாக்களித்தான். இப்படி நான்கு நாட்கள் இருந்துவிட்டு, கல்யாணியிடம் தான் திரும்பி வருவதற்குள் ஆங்கிலம் நன்றாகக் கற்றுத் தேர வேண்டும் என்று உபதேசித்துவிட்டுப் போய்விட்டான்.



காதலி :—நம் இருவருக்கும் கல்யாணம் ஆனதும் நீங்கள் கிளப்புக்குப் போவதை நிறுத்திவிட வேண்டும்.

காதலன் :—அப்படியே செய்தால் போச்சு! நாம் இருவரும் பேசிக்கொண்டிருப்பதை விடவா 'கிளப்' முக்கியம்?

காதலி :—அதற்காகச் சொல்லவில்லை; நான் லேடீஸ் கிளப்புக்குப் போகும்போது நீங்களும் வெளியே போய்விட்டால் வீட்டை யார் கவனித்துக்கொள்வது?

அந்த இரண்டு வருஷங்களும் எப்படிப் போயின வென்று கல்யாணிக்குத் தெரியவில்லை. உடலும் ஆத்மாவும் வெவ்வேறு பொருள்களால் ஆனது என்பதைத் தினந்தோறும் அவள் பிரத்தியக்ஷமாக உணர்ந்தாள். பதியின் கட்டளைப்படியே ஆங்கிலப் புஸ்தகத்தைப் பிரித்து வைத்துக் கொள்வாள். நாள் முழுவதும் பிரித்த பக்கம் பிரித்தபடி இருக்கும். 'லண்டனில் தன்னை மறந்து விடாமல் இருப்பாரா? அவ்விடம் மாமிசம் சாப்பிடாமல் இருப்பது துர்லபம் என்று சொல்லுகிறார்களே? மற்றத் தோழர்கள் குடிக்கும்பொழுது அப் பழக்கம் அவரையும் பிடித்துக் கொள்ளாதா'? என்றெல்லாம் எண்ணுவாள். சீமையில் ஸ்திரீகளுக்குள்ள சுதந்திரத்தை நினைத்து நடுங்குவாள். இவ்வளவு அபாயங்களுக்கு உள்ளாவதற்குப் பதிலாகப் பழைய அறுபது ரூபாய் வேலையில் இருப்பதேமேல் என்று சில சமயம் அவளுக்குத் தோன்றும்.

புருஷன் வீட்டிற்குப் போன பிறகு பெண்ணையும், மனைவியையும் கண்ணால் கூடப் பார்ப்பதில்லை என்று நரசிம்மாச்சாரியார் நிச்சயம் செய்து கொண்டார். மதத்தைக் கெடுத்து ஆத்மாவை இழக்க எப்படிச் சம்மதிப்பது? மற்றவர்கள் எப்படிச் செய்தாலென்ன? ச்ருதிஸ்மிருதிகளில் தெளிவாகச் சொல்லியிருக்கும் விதிகளால் தடுக்கப்பட்டவைகளைச் செய்தால் ஆத்மநாசம் நிச்சயம் என்று அவர் எண்ணினார்.

“மனிதனுடைய ஆத்மா நித்தியம்; அவன் தேகம் ஒவ்வொரு க்ஷணமும் மாறிக் கொண்டே வரும்” என்பார்கள் வேதாந்திகள். “தேகத்தின் அமைப்பே ‘நான்’ என்ற உணர்ச்சிக்கு ஆதாரம். அந்தராத்மா ஓயாமல் மாறிக் கொண்டே இருக்கும்” என்பார்கள் சார்வாகர்கள். இவ்விரு கக்ஷிகளையும் சீமையிலிருந்து திரும்பி வரும் பொழுது பொய்யாக்கிவிட்டான் நாராயணன். அவன் தேகத்தின் தோற்றம் முற்றிலும் மாறிவிட்டது. தேகம் முன்னைவிட வெளுத்துப் புஷ்டியடைந்திருந்தது. கண்களில் பழைய சாந்தி ஒளி மாறி ஒருவித சஞ்சலப் பிரகாசம் தோன்றியிருந்தது. தலையில் கிராப். 'சாக்ஸ்' இல்லாமல் அவன் தன்

ஜகன்னாதன் தன் புஸ்தகத்தை வைத்து விட்டு எழுந்து வந்து, "இனி அவர் அபிப்பிராயம் தெரிவதென்ன? இரண்டு வருஷம் சிறைக்குப் போய் இருந்துவிட்டு வந்து கலெக்டர் வேலை பார்க்க வேண்டியது தான்!" என்றான்.

"சிறைக்குப் போனால் என்ன? இந்த நாளில் யார்தான் போகவில்லை? திரும்பி வந்த பிறகு ராமேச்வரத்திற்குப் போய்ப் பிராயச்சித்தம் செய்துவிடலாம். வேண்டுமானால் மடத்து ஸ்வாமிகளிடம் ஒரு ஸ்ரீமுகம் வாங்கி நூறு பிராமணர்களுக்குத் ததியாராதனம் செய்துவிடலாம்" என்றாள் சீதையம்மாள்.

இதைக் கேட்டு ஸ்வாமிகளுக்குக் கோபம் தாங்க முடியவில்லை. "சீ, போ! போய் உன் வேலையைப் பார்! எனக்குத் தர்மோபதேசம் செய்ய வந்த லக்ஷணத்தைப் பார்!" என்று சொல்லி விட்டுத் தன் புத்திரியை நோக்கி, "நீ இவன் சொல்வதைக் கேட்காதே! இந்தத் தேசத்திலேயே ஒரு வேலை பார்க்கச் சொல். இல்லாவிட்டால் உன்ன வேலையே போதும்" என்றார்.

"ஐ. ஸி. எஸ். பாஸ் செய்துவிட்டு அறுபது ரூபாய் குமாஸ்தாவாக இருப்பதா? நல்ல யோசனைதான்!" என்றான் குமாரன்.

"குலம் கோத்திரம் வேண்டுமானால் அப்படித்தான் செய்ய வேண்டும். சிறைக்குப் போனால் அன்றோடு என் சம்பந்தம் விட்டுப் போகும்" என்றார் பிதா.

"நாங்கள் இப்பொழுது ஒன்றும் சாபமிட வேண்டாம். தானாக வந்த லக்ஷ்மியைக் காலால் உதைத்துத் தள்ளலாமா?" என்று சிறினான் சகதர்மிணி.

இருவருக்கும் நடுவில் கல்யாணியின் மனம் உடைந்தது. "நீ ஒன்றும் பேசாதே, அம்மா!" என்று சொல்லி விட்டு, "நீங்கள் அப்படிச் சொன்னால் நான் என்ன செய்வேன்? அப்பா! இதற்கு நீங்கள்தான் ஒரு வழி கண்டு பிடிக்க வேண்டும். இந்த அறுபது ரூபாய் வேலை கிடைப்பதற்கு என்ன பாடு பட்டார் என்று உங்களுக்கே தெரியும்" என்று கண்ணும் கண்ணீருமாகத் தன் பிதாவை நோக்கினாள்.

"உன்னுடைய நன்மையைப் பற்றி எனக்கு மட்டும் கவலையில்லையா? நீங்கள் எல்லோரும் அற்ப லௌகிக சுகத்தை விரும்பி மதி மயங்கி இருக்கிறீர்கள். நம் குலத்தின் பெருமையை மறந்து விட்டீர்களா? நாம் நேரில் வேதாந்த தேசிகன் வம்சத்தில் வந்தவர்கள். அற்ப ஐசுவரியத்திற்கு அதைத் தூஷிக்க நான் எப்பொழுதும் சம்மதிக்கமாட்டேன். பரிணாமம் இப்படியாகுமென்று நான் கனவிலும் நினைக்கவில்லை. நீ உன் கணவனிடம் சிறைக்குப் போகும் உத்தேசத்தை விட்டுவிடும்படி சொல்லு! அவர் சம்மதிக்காவிட்டால் நடக்கிறது நடக்கட்டும். எல்லாம் நாராயணன் லீலை! எனக்கு இப்பொழுது கொஞ்சம் களைப்பாக இருக்கிறது. நீங்கள் எல்லோரும் உங்கள் காரியங்களைப் பாருங்கள்!" என்று சொல்லி விட்டுக் கண் அசந்து விட்டார்.



நாராயணன்

2

ஒரு பாலைப் பாலைத் தயிராக மாற்ற ஒரு துளி மோர் போதும். அன்று முதல் கல்யாணியின் மனம் கலங்கிப் போயிற்று. நிகழ் காலத்தில் அவள் வசிக்கவில்லை; வருங்காலத்தில் நடக்கப்போவதைப் பற்றியே பகலும் இரவும் கனவு கண்ட வண்ணமாக இருந்தாள். நீதியில் கூறிய படி நாராயணன் வந்தான். வழக்கத்தைவிட அவன் அவள் மீது அதிகப் பிரியமாகவே இருந்தான். ஆயினும் அவன் மனம் முழுவதும் சிறைக்குப் புறப்படுவதிலும் அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதிலுமே ஈடுபட்டிருந்தது. அவனிடம் தன் தந்தையின் தீர்மானத்தைப் பற்றி எப்படிச் சொல்லுவது? ஹிந்து சமூகத்தில் பிறந்து வளர்ந்த பெண்ணுக்கு இப்பேர்ப்பட்ட தர்ம சங்கடத்தில் தனது கடமையை நிர்ணயிப்பது மிகவும் கடினம். பதியே தெய்வமென்று சாஸ்திரம் கூறுகின்றது. ஆனால் தன் பதியை இச்சித்து வரிக்கும் வழக்கமின்மையால், புருஷன் வீட்டுக்குப் போகும் வரை பெண்ணின்

னார் கொஞ்ச காலம் காலையில் அரைமணி வேதாத்தியயனம் செய்து வைத்து வந்தார். ஆனால் பள்ளிக்கூடத்துப் பையன்களெல்லாம் அவனைப் பார்த்ததும் கழுதை போல் கத்தினார்கள். சீதையம்மாளுக்கு இது பிடிக்கவில்லை. வேதாத்தியயனம் தானாகவே நின்று விட்டது. ஜகன்னாதனுக்குத் தன் பிதாவிடம் கொஞ்சம் பயமும் இருந்தது. ஹோட்டலில் வெங்காய பக்கோடா சாப்பிட்டு விட்டால் வீட்டிற்கு வரும் வழியிலுள்ள குளத்தில் பத்து நிமிஷம் வாயைக் கழுவுவான். அப்படியும் வெங்காய வாசனை போகவில்லை என்ற சந்தேகம் தீருவதில்லை.

• • •

நாராயணன் நரசிம்மாச்சாரியாருடைய தூரபந்து. தாய் தந்தையர்கள் பால்யத்தில் இறந்துபோய் விட்டனர். ஒரு மாமாவின் ஆதரவில் படித்து வந்தான். சொத்து இல்லாத போதிலும் படிப்பில் முன்னணியில் இருந்ததால் அவனைக் கல்யாணிக்காக வரித்தார்கள். பட்டாச்சாரியாருடன் சம்பந்தம் செய்துகொள்ளும் கௌரவம் கிடைத்ததே என்று அவன் மாமாவும் அதற்குச் சம்மதித்தார். கல்யாணியின் அழகைப் பார்த்ததும் நாராயணனும் சொக்கிவிட்டான். இவ்வாறு சர்வ சம்மதத்துடன் இருவருக்கும் விவாகம் நிறைவேறியது. தன்னுடைய புத்திக் கூர்மையினாலோ, அல்லது கல்யாணியினுடைய அதிர்ஷ்டத்தினாலோ ஒருவிதத் தடையுமின்றி நாராயணன் பி. ஏ., ஆனர்ஸ் பரீக்ஷையில் மாகாணத்திலேயே முதன்மையாகத் தேறினான். அதற்குப் பிறகு சில மாதங்கள் அவன் யோகத்தில் தடை உண்டாயிற்று. சீதையம்மாள் கல்யாணியின் ஜாதகத்தை ஜோசியர்களிடம் காண்பித்ததில் ஆறு மாதங்களுக்குக் கிரகங்களின் பீடை இருக்குமென்றும் பிறகு சுக்ரதசை வந்து முன்போல் அதிர்ஷ்டம் திரும்புமென்றும் கூறினார்கள். அப்படியே நடந்தது. ஆறு மாதம் அலைந்து ஒவ்வொரு ஆபீசுக்கும் மனுச் செய்ததின் பலனாகச் சென்னை ராஜாங்கத்தின் கணக்கு இலாகாவில் நாராயணனுக்கு மாதம் அறுபது ரூபாய் சம்பளத்தில் வேலை கிடைத்தது. மறு வருஷத்தில் சுக்கிரன் உச்சத்திற்கு வரவே அவன் ஐ. ஸி. எஸ். பரீக்ஷையில் தேறினான்.



கல்யாணி

தன் மகளுக்குக் கிட்டிய பாக்கியத்தை அறிந்த நரசிம்மாச்சாரியார் ஒன்றும் சொல்லவில்லை. வழக்கம்போல் பூஜையைச் செய்து முடித்தார். சாப்பிடும்பொழுது ஏதாவது சொல்வாரென்று கல்யாணி நினைத்தாள்; வாய் திறக்கவில்லை. அவருடைய மௌனத்தைக் கண்டு கல்யாணியின் மனத்தில் கவலை தோன்றிற்று. நாராயணன் ஐ. ஸி. எஸ். பரீக்ஷைக்குப் போனபொழுதே ஊரெல்லாம் அவனைப் பற்றிப் பேசத் தொடங்கி விட்டார்கள். இந்த வம்பை நரசிம்மாச்சாரியார் பொருட்படுத்தவில்லை. கிடைத்த உத்தியோகத்தை வைத்துக்கொண்டு நாராயணன் சந்தோஷமாக இருக்க வேண்டும் என்று அவர் விரும்பினார். ஆனால் பரீக்ஷைக்குப் போவதை ஏன் தடுக்க வேண்டும்? அதில் தேறுவது சந்தேகம். அப்படி ஒரு வேளை தேறினால் இந்தத் தேசத்திலேயே வேறு ஒரு பெரிய வேலை கிடைக்கலாம். பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று இருந்து விட்டார்.

நரசிம்மாச்சாரியார் பூஜை செய்துவிட்டுக் கூடத்திலிருந்த ஒரு பலகையின்பேரில் படுத்துக் கொண்டார். கல்யாணி அவருக்கு அருகில் போய்க் கீழே உட்கார்ந்தாள். சீதையம்மாளும் அங்கு வந்து பக்கத்தில் உள்ள தூணில் சாய்ந்து நின்றுகொண்டிருந்தாள். ஜகன்னாதன் ஏதோ படித்துக்கொண்டிருந்தான். சிறிது நேரம் ஒருவரும் பேசவில்லை. சீதையம்மாள் ஆத்திரத்துடன், "தங்கள் சமாசாரம் கேட்கவில்லையா? ஒரு வார்த்தை சொல்வீர்களா என்று குழந்தை அப்பொழுது முதல் உங்கள் முகத்தையே பார்த்துக் கொண்டிருக்கிறாளே!" என்றாள்.

"நான் என்ன சொல்லமுடியும்? மாப்பிள்ளையின் அபிப்பிராயத்தை முதலில் அறியவேண்டும்" என்று நரசிம்ம பட்டாச்சாரியார் சொன்னார்.

காலவிபரீதம்

கனம் க. சந்தானம்

ஜகன்னாதன் தந்தியைப் பெற்றுக் கொண்டு உள்ளே பாய்ந்து வந்து, "கல்யாணி! அத்திம்பேருக்கு ஐ. ஸி. எஸ். பாஸ் ஆகிவிட்டது. மூன்று நாளில் இங்கு வருகிறார்!" என்றான். கல்யாணிக்கு ஆனந்தத்தால் நாவெழவில்லை. கண்ணீருடன் தன் தாயை நோக்கினாள். சீதையம்மாளுக்கு உண்டான சந்தோஷம் அவளுடைய பெண்ணின் சந்தோஷத்துக்குக் குறைந்துவிடவில்லை. அவள் கண்முன் உட்கார்ந்திருக்கும் கல்யாணி மறைந்து விட்டாள்; இரண்டு வருஷத்திற்குப் பிறகு இருக்கப்போகும் மகள் தோன்றினாள். வைரத் தோடு, வைர மூக்குத்தி, வைர அட்டிகை, சரிகை போட்ட பங்களூர் பட்டுப் புடவை. மோட்டார் கார், வீட்டில் பரிசாரகன் — இன்னும் தன் யௌவனத்தில் அவ்வப்போது தோன்றிய ஆசைகளையெல்லாம் கல்யாணி அனுபவிப்பாள் என்று எண்ணினாள். அவள் மாமா சென்னை வக்கீல் ராமானுஜாச்சாரியாரின் பெண் ரங்கநாயகியின் நினைவு வந்தது. அவள் கல்யாணியின் அழகில் கால்வாசிகூட இல்லை. அவள் சீரையும் சிறப்பையும் கண்டு மோகிக்காதவர் யார்? இப்பேர்ப்பட்ட எண்ணங்கள் அவள் மனத்தை இடைவிடாமல் நிரப்பின. ஆனால் வாய்விட்டு ஒன்றும் சொல்லவில்லை. சம்பிரதாயப்படி "எல்லாம் ஸ்ரீ நாராயணன் கிருபை. நீயும் ஜகன்னாதனும் அவன் பிச்சை. நீங்கள் எப்படியாவது நன்றாக இருக்கவேண்டும்" என்றாள்.

"பேசாமல் இரு, அம்மா! அப்பா ஆராதனை செய்கிறார்" என்றாள் கல்யாணி.



பாட்டாச்சாரியார்

நரசிம்ம பாட்டாச்சாரியார் பெருமாள் மேடையில் உட்கார்ந்து திருவாராதனம் செய்து கொண்டிருந்தார். ஜில்லா முழுவதும் அவர் கீர்த்தி பரவி இருந்தது. பன்னிரு நாமம், ஆராதனம், வைசுவேதனம் இல்லாமல் சாப்பிடமாட்டார். பிறர் கிரகத்தில் உண்பதுமில்லை. யஜுர்வேதம் முழுவதும், கனம் ஜடையுடன் சொல்லக்கூடியவர். நாலாயிரப் பிரபந்தம் நாவின் நுனியில் குடியிருந்தது. சொற்ப சொத்திலிருந்து கிடைக்கும் வரும்படியைக் கொண்டு திருப்தியுடன் கும்பகோணத்திற்கு மூன்று மைல்களுக்கு அப்பால் காவிரி தீரத்தில் உள்ள சாந்தி அக்கிரகாரத்தில் வசித்து வந்தார். சீதையம்மாள் சதி என்பதில் குறைவில்லை. ஆனால் எல்லாம் நாராயணார்ப்பணம் என்று சொல்லிவிட்டால் வெண்கலப் பானை எப்படி கொதிக்கும்? வைதிகமாக இருந்தாலென்ன! அவருக்கிருக்கும் படிப்புக்கு மாணவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்தோ, கும்பகோணத்தில் தினம் ஒரு மணி ராமாயணம் சொல்லியோ மாதம் முப்பது, நாற்பது ரூபாய் எளிதில் சம்பாதிக்கலாம். மடம் கிருஷ்ணமாச்சாரியார் இவரை விட வைதிகத்தில் என்ன குறைந்தவர்? அவர் ஊரையெல்லாம் அரித்துக் கொட்டவில்லையா? இந் நாட்களில் பணம் இல்லாமல் என்ன காரியம் நடக்கும்? கல்யாணிக்கு ஒரு காப்புச் செய்ய விதியில்லை. ஜகன்னாதன் கிழிந்த சட்டையைப் போட்டுக் கொண்டு பள்ளிக்கூடம் போகவேண்டியிருக்கிறது. இவ்வாறு வருத்தப்பட்ட போதிலும் தான் உசித பத்தினி என்ற ஹோதாவில் அவள் பர்த்தாவுக்கு வேண்டிய சிசுருஷைகளைச் செய்து வந்தாள்.

ஆனால் இரண்டு விஷயங்களில் அவள் விட்டுக் கொடுக்கவில்லை. ஜகன்னாதனும் வைதிகப் பிச்சுவாய்ப் போய்விடக்கூடாது. இங்கிலீஷ் படிப்பு படித்து நல்ல உத்தியோகம் செய்ய வேண்டும். அப்படியே கல்யாணிக்கும் உத்தியோகம் செய்யக்கூடியவனாகப் பார்த்துக் கல்யாணம் செய்ய வேண்டும். இந்த இரண்டு மனோரதங்களும் பூரணமாக நிறைவேறின. ஜகன்னாதனுக்கு உபநயனம் ஆன பிறகு தகப்ப

இந்திய ரயில்வேக்கள்

தேசத்தின் வளர்ச்சிக்கான தேசியச் சொத்து

வியாபாரிகளுக்கு ரயில்வேயின் வேண்டுகோள்

வியாபாரிகளே, உங்களுக்குச் சேவை செய்ய எங்களுக்கு உதவுங்கள்.

- உங்களது சாமான்களை சரிவர பாக் செய்யாவிடில் களவுக்கும், சாமான்கள் வீணாவதற்கும் பிறரைக் குறை கூறுவதில் பயனில்லை.
- பாக்கேஜுகள் மீது விலாசங்களை சரிவர எழுதாவிட்டால், அவைகள் வேறு இடத்துக்கு அனுப்பப்பட்டு தவறுதலானவர்களிடம் டெலிவரி செய்ய நேரிடும்.
- ஒவ்வொரு சாமான் மேலேயும் பளிச்சென்று தெரியக்கூடிய "குறி" இருக்க வேண்டும். பழைய "குறி"களை தெரியாதபடி நன்றாக அடித்துவிட வேண்டும்.
- தற்போது அமுலிலிருந்துவரும் சில விதிகளை யொட்டி சாமான்களை அனுப்ப வாகன்கள் அளிக்கப்படுகின்றன. அதற்கான சலுகை வாரியாக ரிஜிஸ்தர் அந்தந்த ஸ்டேஷனில் எழுதப்பட்டு வருகிறது.
- முக்கியமாக வேண்டிய சாதனங்கள் போதாமையால் சலுகை வாரியாக சாமான்களை அனுப்ப இந்திய ரயில்வேக்கள் கடமைப் பட்டிருக்கின்றன.
- இப்படியும் சலுகை அளிக்க வேண்டியிராத சாமான்கள் அனுப்பப்பட்டு வருகின்றன. இந்த சந்தர்ப்பத்தில் ஒவ்வொருவரையும் திருப்தி செய்வித்தல் முடியாத காரியம்.
- ரயில்வேக்கள் தேசத்தின் தொழிற் ஸ்தாபனம். சாமான்களை மற்ற இடங்களுக்கு அனுப்ப முடிந்தவரை சேவை செய்து வருகிறதே தவிர, அனுப்ப ஏற்றுக் கொள்ள வேண்டாமென்ற எண்ணம் இல்லை.
- ஒவ்வொரு குட்ஸ் ஷெட் நோட்டீஸ் போர்டிலும் சாமான்கள் அனுப்ப வேண்டியதற்கான கட்டுப்பாடுகள் ஜாபிதா ஒட்டப்பட்டுள்ளது.
- உங்களுக்கு வேண்டியதை எழுதி அதற்கு நேரில் கையெழுத்திட்டு உங்களுக்கு இடத்தை ஊர்ஜிதம் செய்து கொள்ளுங்கள்.
- எழுதியதில் ஏதாவது மாறுதல் செய்ய வேண்டுமாயின் புதியதாக எழுதி புதிய வரிசையில் சேருங்கள்.
- வாகன்கள் தேவையுள்ளவர்கள் ஜாபிதா கொண்ட ரிஜிஸ்டர் வேலை நேரத்தின் போது ஒவ்வொருவரும் பார்வையிடலாம்.
- குட்ஸ் ஷெட்டிலுள்ள நோட்டீஸ் போர்டில் அந்தந்த நாளுக்கு எந்தவிதமாக வரிசையில் சாமான்களை ஏற்ற வேண்டுமெனவும் அதனோடு அமுலிலிருக்கும் கட்டுப்பாடுகளும் கொடுக்கப்படும்.
- வாகன்கள் பெரிய உத்தியோகஸ்தர்களால்தான் சலுகை பிரகாரம் அளிக்கப் படுகிறது. அந்தந்த ஊரிலுள்ள ரயில்வே சிப்பந்திகள் அந்த உத்யோகஸ்தரின் உத்தரவுப்படிதான் நடக்கின்றனர்.
- உங்களுக்காக தனி சலுகை காட்டி ஒரு காரியத்தைச் செய்ய லஞ்சம் கொடுத்து சிப்பந்திகளைத் தூண்டாதீர்கள். அவரால் கவனிக்கப்பட வேண்டியவர் நீங்கள் ஒருவர்தான் என எண்ணாதீர்கள்.
- ஏதோ அவசரத்துக்காக உண்டான ஏற்பாடுகளை ரயில்வேயினால் செய்ய இயலுமே தவிர சகலவிதத்திலும் பூரண திருப்தியளிக்கும் வகையில் ஏற்பாட்டைச் செய்ய நீங்கள்தான் ரயில்வேக்கு உதவ வேண்டும்.
- தங்களுடைய பதவிக்குக் கேடு விளைவித்துக் கொள்ளாமலோ அல்லது பிறருடைய நலனைப் பாதிக்காமலோ சிப்பந்திகளால் உங்களுக்கு ஒன்றும் உதவி யளிக்க முடியாது.
- வாகன்கள் கோடவுன்கள் அல்ல. அன்றாடம் ஏற்றி இறக்கப்படும் சாமான்களுக்கே குட்ஸ் ஷெட்டிலுள்ள இடம் தேவையாயுள்ளது.
- ஆகவே சாமான்கள் வந்தவுடன் அவைகளை டெலிவரி எடுத்துக் கொண்டு, சாமான்கள் வீணாவதையும் திருட்டுப் போவதையும் தடுங்கள்.
- ரயில்வேக்கள் நமது தேசத்தின் சொத்து. உங்களுக்கும் அதில் பங்கு உண்டு. வீணான புகார்களால் பிரயோஜனமுமில்லை.
- எல்லா புகார்களும் நன்கு கவனிக்கப்படுகின்றன. சரிவர கவனித்து புகார்களை விசாரணை செய்வதில்லை என்ற பழைய கால எண்ணம் வேண்டாம்.
- உங்களுடைய புகார்கள் என்னவென்று சுருக்கமாகவும் சாக்ஷியின் பெயரும் குறித்து அனுப்பவும். ரயில்வேக்கள் புகார்களை நன்கு விசாரணை செய்ய அது மிக்க உதவியாக இருக்கும்.
- ரயில்வேயில் உத்தியோகம் பார்ப்பவர்கள் வேறு யாவரும் இல்லை. நம்மைப் போல் அவரும் ஒரு இந்தியர்தான். இந்திய ரயில்வேயின் சொந்தக்காரர்களாகிய நம்மில் அவரும் ஒருவர்.

எம். எஸ். எம். & எஸ். ஐ. ஆர்.

பப்ளிக் ரிலேஷன்ஸ் ஆபீஸரால் வெளியிடப்பட்டது.



துணிகளை அடித்துத் துவைக்காமலே வெண்மையாகச் சலவை செய்கிறது

R. 105–172 TM

கவர்ன்மெண்ட் ஆப் இந்தியா

தாழ்த்தப்பட்ட வகுப்பு மற்றும் இதர முன்னேற்ற மடையாத வகுப்பு மாணவர்களுக்கான

ஸ்காலர்ஷிப்

1949 - 50

1949–50க்கு ஸ்காலர்ஷிப் வழங்க இந்திய அரசாங்கத்தாரால் தாழ்த்தப்பட்ட வகுப்பு, பழங்குடி மக்கள், மலை ஜாதியினர் மற்றும் இதர முன்னேற்ற மடையாத வகுப்பு மாணவர்களிடமிருந்து அதற்கென குறிப்பிட்ட அப்ளிகேஷன் பாரத்தில் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழே குறிப்பிட்டுள்ள வரிசைப்படி இந்தியாவில் அங்கீகரிக்கப்பட்டு மெட்ரிக்குலேஷன் பரீக்ஷைக்குமேல் கல்வி போதிக்கும் எந்த கலாசாலையிலும் இந்த ஸ்காலர்ஷிப் சலுகையை உபயோகப்படுத்திக் கொள்ளலாம்.

1. மருந்து மற்றும் நர்ஸிங் உள்பட இதர வைத்திய பாடங்கள்.
2. எஞ்ஜினீரிங், கட்டிடக் கலை.
3. வனவளர்ப்பு உள்பட விவசாயம் மற்றும் மிருக வைத்தியம்.
4. டெக்னலஜி.
5. விஞ்ஞானம்.
6. கல்வி, சமூக சேவை.
7. வர்த்தகம்.
8. சட்டம்.
9. கலை, சமுதாய விஞ்ஞானம், உயர்தரக் கலைகள் மற்றும் நாஸ்நிலையப் பாதுகாப்பு.

1948-49ம் வருஷத்துக்கு ஸ்காலர்ஷிப் பெற்ற மாணவர்கள் 1949-50 வருஷத்துக்கும் புதுப்பிக்க விரும்பினால் அதற்கான பாரத்தில் மனுச்செய்து புதுப்பித்துக்கொள்ள வேண்டும். ஏற்கெனவே சென்ற வருஷம் மனுச்செய்து தேர்ந்தெடுக்கப்படாத மாணவர்கள் இந்த வருஷத்து ஸ்காலர்ஷிப் பெற விரும்பினால் மீண்டும் புதிதாக விண்ணப்பித்துக்கொள்ள வேண்டும்.


விண்ணப்ப பாரங்களும், மற்றும் ஸ்காலர்ஷிப் வழங்குவதற்கான சட்ட திட்டங்களும், இலவசமாக கீழ்க்கண்டவரிடம் கிடைக்கும் :—

செக்ரடரி, (தாழ்த்தப்பட்ட வகுப்பு மற்றும் முன்னேற்ற மடையாத ஜாதிகளுக்கான ஸ்காலர்ஷிப் போர்டு) கல்விஸ்தாபன இலாகா, புது டெல்லி-3.

மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசி தேதி 31–7–1949. தங்கள் சொந்த நன்மையை உத்தேசித்து மனுச் செய்து கொள்பவர்கள் வெகு சீக்கிரமாகத் தங்கள் விண்ணப்பங்களை அனுப்பக் கோரப்படுகிறார்கள். ஜூலை 31–7–1949-க்குள் எப்படியும் மனுக்கள் அனுப்பப்படல் வேண்டும்.

A. C. 32

ஆ! என்ன குஷி!



புதுமை உணர்ச்சிக்கும் சரும ஆரோக்யத்திற்கும் மலபார் லிம்டா சோப்புதான் சிறந்தது!

சுத்தமான வேப்பெண்ணை சேர்க்கப்பட்டது!

FAS-4-61.

VEGETABLE SOAP WORKS, CALICUT.

PROPRIETORS: **SAIT N.P. & CO. LTD.**

CALICUT-BOMBAY-2-MADRAS-1.

திறப்பு விழா

'ஸ்ரீ நடராஜ விலாஸ் ஜுவெல்லரி ஹால்'

சிதம்பரம்

•

கடைத்தெருவில் புதுப்பிக்கப் பட்டிருக்கும் ஷை ஜுவெல்லரி ஹாலை டாக்டர் எஸ். நடராஜ ஜடாவல்லபர் அவர்கள் 1949-ளு ஜூன்மீ 1௳ புதன்கிழமை காலை 9 மணிக்குமேல் 10 மணிக்குள் திறந்து வைக்க இசைந்துள்ளார்கள். அன்பர்கள் அனைவரும் தவறாது விஜயம் செய்து சிறப்பிக்க வேணுமாய்க் கோருகிறேன்.

•

செ. ரெத்தினசாமி செட்டியார்

தங்க நகை & வெள்ளிப்பாத்திர வியாபாரம்

சிதம்பரம்

கல்கி பொருளடக்கம்

மலர் 8 இதழ் 44 | மே 29 | விரோதி ௵ வைகாசி 16௳

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும் சம்பவங்களும் கற்பனையே.

சமுதாயப் பொறுப்புணர்ச்சி மிகவும் அவசியம்

★

கூட்டு வாழ்க்கைக்கு சமுதாயப் பொறுப்புணர்ச்சி வேண்டும். தேசத்தின் சமூக வளர்ச்சிக்கு ரயில்வேக்கள் வேண்டும். வசதிகள் குறைவாக இருப்பினும், சென்ற யுத்தத்தில் அளவுக்கு மிஞ்சி உபயோகிக்கப்பட்டும் இதுவரை போதிய மராமத்து இல்லாதிருந்தும்கூட, நம் நாட்டின் ரயில்வேக்கள் யுத்தத்திற்கு முன்னைவிட தற்போது மூன்று மடங்கு அதிக பிரயாணிகளை ஏற்றிச் செல்லுகின்றன. சாமான்களின் போக்குவரத்தும் அதிகரித்திருக்கின்றது. ஆனால் ரயில் பெட்டிகளின் எண்ணிக்கையோ யுத்தத்திற்கு முன்னைவிட அதிகரிக்கவில்லை. மிகவும் அவசரமாகச் செய்ய வேண்டிய சீரமைப்புத் திட்டங்களைத் துரிதமாக நிறைவேற்றுவது சாத்தியப்படவில்லை. குறைந்த வசதிகளைக் கொண்டு செய்யப்படும் வேலைகளினால் அதிருப்தியைத் தரக்கூடிய அசௌகரியங்கள் உண்டாகின்றன. ஆகையால் ரயில்வேக்களின் தற்போதைய நிலையைச் சரிவர உணராமல் குறைபாடுகளைப் பற்றியே சிலர் பேசுகிறார்கள்.

டிக்கெட் இல்லாமல் பிரயாணம் செய்வது அதிகரித்திருக்கிறது. இதனால் ரயில்வேக்களுக்கு ஏராளமான நஷ்டம். இடத்திற்கு மிஞ்சின கூட்டம். சுதந்திர இந்தியாவில் சட்டத்தை அலக்ஷியம் செய்யும் சுபாவம்.

படியில் நின்று பிரயாணம் செய்தல் மிகவும் அபாயகரமானது. சில சமயங்களில் ஆபத்தான விளைவுகளும் ஏற்படுகின்றன. எச்சரிக்கைக்குப் பிறகும் இவ்விதம் பிரயாணம் செய்பவர்கள் தண்டிக்கப்படுவார்கள்.

ரயில்வே வண்டிகளில் களவு, சேதம்: பல்பு முதலிய சாமான்கள் அகற்றப் படுகின்றன. மெத்தைகள் கிழிக்கப்படுகின்றன. இத்தகைய நாச வேலைகளால் அசௌகரியங்களும் புகார்களும் அதிகரிக்கின்றன. நகரச் சுற்றுப்புற வண்டிகளின் நிலையோ மிகவும் மோசம்.

லஞ்சம்: இதில் இருவர் ஈடுபடுகின்றனர். ஒருவர் கொடுப்பவர், மற்றொருவர் வாங்குபவர். லஞ்சம் வாங்குபவர் மீது ரயில்வேக்கள் தீவிர நடவடிக்கைகள் எடுக்கின்றன. ஆனால், லஞ்சம் கொடுப்பவருக்கு யார் புத்தி சொல்வது?

பொதுஜனத் தொடர்பு அதிகாரி, எம். எஸ். எம். சீ எஸ். ஐ. ரயில்வேக்கள், சென்னை - 2

கல்கி

மலர் 8 | தமிழ்த் திருநாடு தன்னைப்பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 44

என்ன சேதி?

மனச்சாட்சி

இந்திய வானில் என்றும் மறையாத ஜோதியாக விளங்கும் மதன்மோகன் மாளவியா ஒரு சமயம் வெளியூருக்குப் போவதற்காக ரயில்வே ஸ்டேஷனுக்குச் சென்றார். அங்கு வண்டி புறப்படும் தறுவாயில் இருந்தது. எனவே நேரம் இல்லாததால் மாளவியாஜி டிக்கெட் வாங்காமலே வண்டியில் ஏறிக் குறிப்பிட்ட இடத்தை அடைந்தார். அந்தப் பெரியார் மற்றொரு தடவை அதே இடத்துக்குச் செல்ல நேர்ந்தபோது, இரண்டு டிக்கெட்டுகளை வாங்கி ஒன்றைக் கிழித்து எறிந்துவிட்டு, மற்றொன்றை மாத்திரம் வைத்துக் கொண்டார். பாரத அன்னையின் அருந்தவப் புதல்வர்களில் ஒருவரான மாளவியா, மனச்சாட்சிக்கு விரோதமாக எந்தக் காரியமும் செய்யக்கூடாது என்ற வைராக்கியம் உடையவராதலால், முதல் தடவை டிக்கெட் இராமல் சென்றதை மறு தடவை இரண்டு டிக்கெட்டுகள் வாங்கியதன் மூலம் ஈடு செய்தார்! ஒவ்வொருவரும் மாளவியாஜியைப் பின்பற்றி மனச்சாட்சியின்படி நடக்க முற்படுவாராயின், சமுதாயம் எவ்வளவு சிறப்புடனும் சுபிட்சத்துடனும் விளங்கும்!


ஆனால், இன்று நாம் காண்பதென்ன? டிக்கெட் இல்லாமல் பிரயாணம்செய்வோரால் இந்திய ரயில்வேக்களுக்கு மிகுந்த கஷ்டம் ஏற்படுகிறது. டிக்கெட் இல்லாத பிரயாணத்தை ஒரு சாமர்த்தியமான காரியம் என்பதாகக் கூடச் சிலர் கருதுகிறார்கள். அத்தகையோருக்கும் மனச்சாட்சி என்ற வஸ்துவுக்கும் சம்பந்தமே இருப்பதாகத் தெரியவில்லை!

இவ்விஷயமாக இந்த இதழில் வெளியாகியுள்ள விளம்பரத்தை, எத்தனையோ ரயில்வே விளம்பரங்களில் இதுவும் ஒன்று என்று அலட்சியம் செய்யாமல், எல்லோரும் சிரத்தையுடன் கவனித்து, அதன்படி அனுஷ்டிக்கவும் கோருகிறோம்.

யாருக்கு நஷ்டம்?

1947-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 15-ந் தேதிக்குப் பின் இந்தியாவில் நிலைமை அடியோடு மாறிவிட்டதென்பதை இன்னும்கூடப் பலர் உணர்ந்து கொள்ளவில்லை. அதற்கு முன் இங்கு ஆட்சி நடத்திய பிரிட்டிஷ் சர்க்காருக்கும், அன்னியர்களின் ஆதிக்கத்திலிருந்த ரயில்வேக்களுக்கும் விரோதமாகச் செய்யும் ஒவ்வொரு காரியமும் தேசத் தொண்டாகக் கருதப்பட்டது. ஆனால், இப்போதோ ஜனங்களுடைய சர்க்காரின் ஆட்சி நடைபெறுகின்றது. ரயில்வேக்கள் ஜனங்களுடைய சொத்தாகிவிட்டன. எனவே, இப்போது டிக்கெட் வாங்காமல் பிரயாணம் செய்வோர் தங்களுடைய சுயநலம் காரணமாகப் பொது ஜனங்களுக்கு நஷ்டத்தை உண்டு பண்ணுகிறார்கள்; தேசத்தை மோசம் செய்கிறார்கள். ரயில்வேக்களின் வருமானம் குறைந்தால், பின்னர் அதைச் சமாளிப்பதற்காக டிக்கெட் கட்டணங்களை உயர்த்த நேரிடும். அதனால் இறுதியில் கஷ்டம் அடைவோர் பொது ஜனங்கள்தான்.

பத்து வருஷங்களுக்கு முன் இந்தியாவில் எத்தனை எஞ்ஜின்களும் வண்டிகளும் இருந்தனவோ, அவைகளைக் காட்டிலும் அதிகமாக இப்போது எதுவுமில்லை. ஆனால் பிரயாணிகள், சாமான்களின் போக்கு வரவு முன்னரைக் காட்டிலும் இப்போது இரட்டிப் பாகிவிட்டது. இந்த நிலையில் டிக்கெட் இல்லாமல் பிரயாணம் செய்வோரின் தொகையும் அதிகமாகி விட்டால் என்ன செய்வது? எனவே, ஜனங்களின் சொத்தான ரயில்வேக்களின் எதிர்கால க்ஷேமத்தை நாடுவோர், டிக்கெட் இல்லாமல் பிரயாணம் செய்தல், ரயில்வேக்களுக்குச் சொந்தமான சாமான்களை மறைத்தல், லஞ்சம் கொடுத்தல் முதலிய இன்னும் பல்வேறு விபரீதங்களையும் ஒழிக்கும் விஷயத்தில் ரயில்வே



ஆயிரம் பெண் குழந்தைகள் படிக்கும் திருவல்லிக்கேணி தேசியப் பெண்கள் பாடசாலையின் புதிய கட்டிடம் பூர்த்தியாகும் தருவாயில் இருக்கிறது.

ஜூன் மாதம் 14-ந் தேதி சென்னைக் கவர்னரின் தலைமையில் பவநகர் மகாராணி அவர்கள் கட்டிடத்தைத் திறந்து வைக்கிறார்கள்.

''கல்கி'' ஆசிரியரின் குமாரி செள. ஆனந்தியின் திருமணத்தின்போது மேற்படி பெண் பாடசாலைக் கட்டிட நிதிக்கு ரூபாய் ஐம்பது சம்பாவனை அளிக்கப்பட்டது.

இந்தப் புனித கைங்கரியம் பூர்த்தியாவதற்குப் பொருளுதவி செய்யும்படி நேயர்களைக் கேட்டுக் கொள்ளுகிறோம். பொருளுதவி அனுப்பவேண்டிய விலாசம்:—ஸ்ரீ என். கே. திருமலாச்சாரியார், நிர்வாகஸ்தர், தேசியப் பெண்கள் பாடசாலை, திருவல்லிக்கேணி.

அதிகாரிகளுடன் ஒத்துழைக்க வேண்டியது அவசியம். டிக்கெட்டுகள் வாங்கும் போது ஒருவரை யொருவர் இடித்துத் தள்ளி அநாகரிகமாக நடந்து கொள்ளக் கூடாது. பெண்களும் குழந்தைகளும் வயோதிகர்களும்கூட யாதொரு கஷ்டமுமின்றிச் சுலபமாக டிக்கெட் வாங்குவது சாத்தியமாகும்படி ''க்யூ'' வில் நிற்கும் வழக்கத்தை எல்லோரும் தங்களுடைய கடமையாகக் கருதவேண்டும்.


ஆசிரியர்களின் தொண்டு

திரைகடலின் அலைகள் ஓய்ந்தாலும் ஓயலாம்; ஆனால், ஆரம்ப ஆசிரியர்களுடைய வாழ்க்கைக் கடலின் அலைகளுக்கு ஒரு காலத்திலும் ஓய்வு இராது என்று தோன்றுகிறது! உபாத்திமைத் தொழிலின் உயர்வு வானத்தை முட்டுகிறது; எனினும் அவர்கள் பெறும் ஊதியமோ பாதாளத்தைத் தட்டுகிறது! எனவே, அவர்கள் கூடும் ஒவ்வொரு மகாநாட்டிலும் ''சம்பளம் போதவில்லை'' ''குறைந்த சம்பளமும் காலத்தில் கிடைப்பதில்லை'' என்ற பல்லவியை அடிப்படையாகக் கொண்டே தீர்மானங்கள் நிறைவேறுவது வழக்கம். ஆனால், சமீபத்தில பழனியில் நடந்த தமிழ்நாடு முனிசிபல் ஆசிரியர்களின் இரண்டாவது மகாநாட்டிலே எல்லா ஆசிரியர்களும் ஏகோபித்து ஒரு பிரதிக்ஞை செய்து கொண்டனர்.

அந்தப் பிரதிக்ஞை ஆசிரியர்களின் சம்பளத்தைப் பற்றியதல்ல; சம்பள உயர்வுக்காக வேலை நிறுத்தம் செய்வதைக் குறிப்பது மல்ல. ''தமிழ் நாட்டிலுள்ள ஒவ்வொரு முனிசிபல் ஆரம்ப ஆசிரியரும் இந்த ஆண்டு முடிவதற்குள்ளாக, குறைந்த பட்சம் எழுதப் படிக்கத் தெரியாத ஒரு முதியோரையாவது எழுதப் படிக்கச் செய்யவேண்டும்'' என்பதே பிரதிக்ஞையாகும். தமிழ்நாடு முனிசிபல் ஆரம்ப ஆசிரியர் மத்திய சங்கத் தலைவர் ஸ்ரீ சி. கோவிந்தசாமி பிள்ளை கொண்டு வந்த மேற்படி தீர்மானம் மகாநாட்டில் ஏகமனதாக நிறைவேறியது.

மகாநாட்டின் தலைவரும் சென்னை மாஜி மேயருமான ஸ்ரீ எம். ராதாகிருஷ்ணப் பிள்ளை, மகாநாட்டின் திறப்பாளரும் தற்போதைய சென்னை மேயருமான ஸ்ரீ. எஸ். ராமசாமி நாயுடு இவர்களுடைய முன்னிலையில் அங்கு கூடியிருந்த ஆசிரியர்கள் யாவரும் ஏகோபித்து எழுந்து நின்று மேலே குறிப்பிட்டவாறு பிரமாணம் எடுத்துக் கொண்ட காட்சியைக் கற்பனை செய்வோர் மனம் உருகாமல் இருக்க முடியாது. ஊதியம் குன்றினும் உயர்ந்த தொண்டு புரிவதில் உற்சாகம் குன்றாது என்பதை மேற்படி ஆசிரியர்கள் காட்டியிருக்கிறார்கள்!

இந்தியாவின் எதிர்காலக் கல்வித் திட்டத்தில் முதியோர் கல்வியும் ஒரு முக்கியமான அம்சம். எனவே, அவ்விஷயமாகத் தமிழ்நாடு முனிசிபல் ஆரம்ப ஆசிரியர்கள் செய்து கொண்டுள்ள பிரதிக்ஞை பரிபூரண வெற்றி பெறுமாக!


எந்தக் காரியத்திலும் குற்றம் கண்டுபிடிக்கும் மாமியாரைப் போல் டி. கிருஷ்ணமாசாரி எல்லாக் காங்கிரஸ் வாதிகள் மீதும் சீறி விழுந்தார்!
காங்கிரஸ் மந்திரிஸபைத் தாங்கிநின்று பண்டித நேரு கச்சை கட்டிக் கொண்டு பேசினார்.
பேச்சைக் காட்டிலும் சக்தி பொருந்திய மௌனத்தை சர்தார் பட்டேல் கடைப் பிடித்தார்.
மந்திரிகளும் காங்கிரஸ் ஊழியர்-களும் சம அந்தஸ்து உடையவர்கள் என்பதை பாபு ராஜேந்திரப் பிரசாத் நிரூபிக்க முயன்றார்.
பல அங்கத்தினரும் புகார் சொல்ல முன் வந்தார்கள். "ஏக காலத்தில் எல்லோரும் எழுந்து பேசினால் நான் என்ன செய்வேன்?" என்று டாக்டர் பட்டாபி பரிதவித்தார்.
'படார்' என்று ஒரு பலூன் வெடி வெடித்த சத்தம் கேட்டது; அது பிரகாசம் கொண்டு வந்த பலூன் என்று தெரிந்தது.

மூன்று ஸ்தாபனங்கள்

சுதந்திர இந்தியாவில் வலிமை வாய்ந்த மூன்று ஸ்தாபனங்கள் இருக்கின்றன. இந்தியா முன்னேற்ற மடைவதோ வீழ்ச்சி யுறுவதோ அந்த ஸ்தாபனங்களின் நடவடிக்கைகளைப் பொறுத்தது என்று சொல்வது மிகையாகாது. அந்த மூன்று ஸ்தாபனங்களில் முதலாவது, அரசாங்கம்; இரண்டாவது, காங்கிரஸ்; மூன்றுவது பத்திரிகைகள்.

நிகழும் மே மாதத்தில் மேற்படி மூன்று ஸ்தாபனங்களும் ஒன்றுக்கொன்று அனுசரிக்க வேண்டிய கொள்கைகளைப் பற்றி நாடெங்கும் விவாதங்கள் நடந்தன. பெங்களூரில் நடந்த அகில இந்தியப் பத்திரிகாசிரியர் மகாநாட்டில் பத்திரிகைச் சுதந்திரம் விவாதிக்கப்பட்டது. காங்கிரஸ் மந்திரி சபைகள் விஷயமாகப் பத்திரிகைகள் அனுசரிக்க வேண்டிய கொள்கை விவாதிக்கப் பட்டது.

டேராடூனில் நடந்த அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் காங்கிரஸ் மந்திரிசபைகளுக்கும் காங்கிரஸ் கமிட்டிகளுக்கும் இருக்க வேண்டிய தொடர்பைக் குறித்து ஆலோசிக்கப் பட்டது.

இவை யெல்லாம் மிகவும் முக்கியமான விவாதங்கள், ஆலோசனைகள் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

* * *

சில தினங்களுக்கு முன் லாகூரிலிருந்து ஒரு விசித்திரமான செய்தி வந்தது. அதைக் கேட்டுப் பத்திரிகை உலகம் திடுக்கிட்டுப் போயிற்று.

அந் நகரில் உள்ள "சிவில் அண்ட் மிலிடரி கெஜட்" என்ற பிரபல பத்திரிகையின் புது டில்லி நிருபர் "காஷ்மீர் சம்பந்தமாக இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் ஒரு சமரசம் ஏற்பட்டிருக்கிறது என்று இங்கிலாந்திலிருந்து கிடைத்துள்ள செய்திகள் கூறுகின்றன. சர்வஜன வாக்கு எடுக்கும் முறை கைவிடப் பட்டிருக்கிறது என்றும், காஷ்மீர் பிரிவினையை அடிப்படையாகக் கொண்டே சமரசம் நடைபெறும் என்றும் செய்திகள் கூறுகின்றன" என்று ஒரு ஹேஷ்யச் செய்தி அனுப்பியிருந்தார்.

அந்தச் செய்தி அப் பத்திரிகையில் வெளியானதும், வகுப்பு வெறியில் மூழ்கிக் கிடக்கும் பாகிஸ்தான் பத்திரிகைகள் பாகிஸ்தானுக்கே ஆபத்து வந்து விட்டது போல் கூக்குரலிட்டன.

எதிர்பாராத அத்தகைய எதிர்ப்பைக் கண்டதும் "சிவில் அண்ட் மிலிடரி கெஜட்" தன்னுடைய புது டில்லி நிருபரை வேலையிலிருந்து நீக்கியதுடன், அத்தகைய செய்தியைப் பிரசுரித்ததற்காகப் பத்திரிகையின் மூலம் பகிரங்கமாக மன்னிப்புக் கோரியது.

சிறிதும் தயக்கமோ தாமதமோ இல்லாமல் அந்தப் பத்திரிகை மன்னிப்புக் கோரியதால், அவ் விஷயம் அத்துடன் முடிந்துவிட்டதாகக் கருதவேண்டும் என்று மேற்கு பஞ்சாப் பத்திரிகாசிரியர்கள் சங்க ஆலோசனைக் கமிட்டி அபிப்பிராயப்பட்டது.

ஆனால், பாகிஸ்தான் சர்க்கார் அந்தச் சங்கத்தின் ஆலோசனையைக் கேட்கவில்லை. "சிவில் அண்ட் மிலிடரி கெஜட்" பத்திரிகை மூன்று மாத காலத்துக்கு வெளிவரக் கூடாது என்று தடுத்து விட்டார்கள்.

இவ்வாறாக அங்கு பத்திரிகைச் சுதந்திரம் கொலை செய்யப்பட்டது!

பாகிஸ்தான் சர்க்காரின் மேற்படி செய்கையுடன் இந்திய சர்க்காரின் செய்கையை ஒப்பிட்டுப் பார்ப்போம்.

பத்திரிகைச் சுதந்திரத்தை துஷ்பிரயோகம் செய்து பத்திரிகை உலகத்துக்கே கெட்ட பெயரை உண்டாக்கும் பத்திரிகைகள் விஷயத்தில்கூட இந்திய சர்க்காரும் மாகாண சர்க்கார்களும் கடுமையான நடவடிக்கைகளைக் கைக்கொள்ள விரும்பவில்லை.

கோடிக்கணக்கான ஜனங்கள் போற்றும் பூஜிக்கத் தகுந்த அரும்பெருந் தலைவர்களைப் பற்றி இல்லாத பொய் அவதூறுகளை யெல்லாம் எழுதவும் இந்தியாவிலுள்ள பத்திரிகைகள் சுதந்திரம் பெற்றிருக்கின்றன.

ஆகவே இந்தியப் பத்திரிகைகள் நியாயமான அளவுக்குக் கொஞ்சம் அதிகமாகவே சுதந்திரம் பெற்றிருக்கின்றன என்று கூறுவது மிகையாகாதல்லவா?

இந்த விஷயத்தைத்தான், பெங்களூரில் கூடிய அகில இந்தியப் பத்திரிகாசிரியர் மகாநாட்டை ஆரம்பித்து வைத்த கவர்னர் ஜெனரல் ராஜாஜி குறிப்பிட்டார். இந்தியாவில் பத்திரிகைகளுக்குப் பூரண சுதந்திரம் அளிக்கப்

பட்டிருக்கிறது என்பதை ராஜாஜி உதாரணங்களுடன் எடுத்துக் காட்டினர்.

ஆனால் சர்க்காரை நடத்தும் மந்திரிமார்கள் தாங்கள் செய்ததே சரி, தாங்கள் வைத்ததே சட்டம் என்று இறுமாந்து விடக்கூடாதல்லவா?

மகாநாட்டின் தலைவரும் "சுதேசமித்திரன்" ஆசிரியருமான ஸ்ரீ சி. ஆர். ஸ்ரீனிவாசன் இந்த விஷயத்தை எடுத்துச் சொன்னர்.

"கலகமும் குழப்பமும் செய்வோரை அடக்கவும், அமைதியையும் ஒழுங்கையும் நிலைநிறுத்தவும், தேசத்தின் பொருளாதார நிலையை உத்தாரணம் செய்யவும் சர்க்கார் கைக் கொள்ளும் சகல முயற்சிகளையும் நாங்கள் ஆதரிப்போம் என்பது நிச்சயம். எனினும், தாங்கள் என்ன செய்தாலும் தங்களுக்குப் பத்திரிகைகளின் ஆதரவு கிடைக்கும் என்று சர்க்கார் நினைத்துவிடக் கூடாது" என்று அவர் பத்திரிகைகளின் கடமையைச் சுட்டிக் காட்டினர்.

• • •

பாரத நாட்டு மக்கள் இழந்த சுதந்திரத்தைப் பெற்றுச் சுபிட்சத்துடனும் க்ஷேமமாகவும் வாழ வழி வகை செய்ய வேண்டும் என்பதற்காகவே இந்தியாவில் காங்கிரஸ் மகாசபை தோன்றியது. காங்கிரஸ் தலைவர்கள் எத்தனையோ அரும்பெரும் தியாகங்களைச் செய்தனர். அதன் பயனாக இந்தியா சுதந்திரம் அடைந்தது.

இந்தியாவின் மத்திய அரசாங்கத்திலும் மாகாண அரசாங்கங்களிலும் இப்போது மந்திரிகளாயமர்ந்து ஆட்சி செலுத்துகிறவர்கள் பெரும்பாலும் காங்கிரஸ்வாதிகளேயாவர். காங்கிரஸ் ஸ்தாபனத்தினால் சர்க்காரை நடத்தும்படி அனுப்பப் பட்டவர்கள். எற்கெனவே காங்கிரஸ் கமிட்டிகளில் முக்கிய நிர்வாக பதவிகளை வகித்தவர்கள்.

ஆயினும் தேசத்தின் பொது நடைமுறையில் காங்கிரஸ் ஸ்தாபனங்களுக்கும் காங்கிரஸ் மந்திரி சபைகளுக்கும் அடிக்கடி முரண்பாடுகள் ஏற்பட்டு வருவதைப் பார்க்கிறோம்.

மந்திரி சபையில் இல்லாத காங்கிரஸ்வாதிகள் மந்திரிகளின் காரியங்களைக் குறை கூறுகிறார்கள். மந்திரிகளோ மற்ற காங்கிரஸ் வாதிகள் சரிவரத் தங்கள் கடமையைச் செய்வதில்லையென்று புகார் சொல்லுகிறார்கள். இந்த விஷயங்கள் எல்லாம் டேராடூனில் நடந்த அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் பகிரங்கத்திலும், அந்தரங்கத்திலும் அலசி ஆராயப்பட்டன.



மந்திரிகள்மீது சுமத்தப்படும் லஞ்சக் குற்றங்கள் மிகைப் படுத்தப்பட்டவை என்று ஜவாஹர்லால்ஜி வற்புறுத்திக் கூறியதாகத் தெரிகிறது. இது உண்மை என்பதில் சந்தேகமில்லை. எனினும் காங்கிரஸ் ஸ்தாபனத்தின் பேரால் மந்திரி பதவி வகிப்பவர்கள் தங்கள் பேரில் எந்த விதமான பொய்ப் புகார்கள் கிளம்புவதற்குக் கூட இடமில்லாமல் சர்வ ஜாக்கிரதையாக நடந்துகொள்ள வேண்டியது அவசியமாகும்.

மந்திரி சபைக்கு வெளியில் உள்ள காங்கிரஸ் வாதிகளும் தாங்கள் உத்தியோகம் வகிக்கவில்லை யென்பதற்காகப் பொறுப்பில்லாத குற்றச் சாட்டுகளைச் சுமத்திக் கொண்டிருக்கக் கூடாது. அப்படிச் செய்வது தேசத்துக்கே கேடு செய்வதாகும்.

இந்தியாவில் சர்க்கார், காங்கிரஸ், பத்திரிகைகள் இந்த மூன்று ஸ்தாபனங்களின் நோக்கமும் இப்போது ஒன்றாகியிருக்கிறது.

சுதந்திர இந்தியா சீரும் சிறப்புமுற்று விளங்க வேண்டும்; இந்திய மகாஜனங்கள் வாழையடி வாழையாக சுபிட்சத்துடன் வாழ வேண்டும்;— இவைதான் அந்த மூன்று ஸ்தாபனங்களின் ஏகோபித்த நோக்கமும்!

எனினும், மனித தத்துவம் தவறுக்கு அப்பாற்பட்ட தல்ல. சர்க்காரையும், காங்கிரசையும், பத்திரிகைகளையும் நடத்துவோர் மனிதர்களே. எனவே, சர்க்கார் தவறு செய்தால் காங்கிரசும், காங்கிரஸ் தவறு செய்தால் பத்திரிகைகளும் எடுத்துக் காட்டி, பரஸ்பரம் நேரான வழியைப் பின்பற்றும்படி செய்து கொள்ள வேண்டும்.

பாரத நாட்டு மக்களின் எதிர்காலச் சிறப்பும் சுபிட்ச வாழ்வும் சர்க்கார், காங்கிரஸ், பத்திரிகைகள் இந்த மூன்று ஸ்தாபனங்களின் ஒத்துழைப்பையே பொறுத்திருக்கின்றன.

தீரர் தக்கின் நூ

1947-ம் வருஷம் ஜூலை மாதம் 20-ம் தேதி ஒரு பயங்கரமான சம்பவம் - நாகரிக உலகம், திடுதிடுக்குப் போகத் தக்க ஒரு சம்பவம் - பர்மாவில் நிகழ்ந்தது.

பர்மாவுக்கு விடுதலை வாங்கிக் கொடுத்த வீர இளஞ் சிங்கம் ஜெனரல் அவுங்ஸானும் அவருடைய மந்திரிகள் எட்டுப் பேரும் பட்டப்பகலில் சர்க்கார் மாளிகையில் படுகொலை செய்யப்பட்டார்கள். பர்மா மந்திரி சபையின் அந்தரங்க மந்திராலோசனை நடந்து கொண்டிருந்த சமயத்தில் இந்த விபரீதச் சம்பவம் நிகழ்ந்தது.

அவுங்ஸான் முதலியவர்களைக் கொன்ற குற்றத்துக்காக நடந்த வழக்கில் மாஜி பர்மாப் பிரதம மந்திரியும் பர்மியத் தலைவர்களில் ஒருவராக விளங்கியவருமான யூ ஸா மரண தண்டனை அடைந்தார்.

மற்றொரு மாஜி பிரதம மந்திரியும் பிரபல தலைவருமாகிய பா மா படுகொலைக்கோ மரண தண்டனைக்கோ ஆளாகாமல் இயற்கையாகவே செத்துப் போனார்.

இவ்விதமாக, ஒன்றிரண்டு வருஷங்களுக்குள்ளாக பர்மா அரசியலில் பிரபலமாக விளங்கிய மாபெரும் தலைவர்கள் எல்லோரும் ஒருவர் பின்னொருவராக மறைந்து விட்டார்கள். நல்ல வேளையாக, பர்மாத் தலைவர்களில் ஒரே ஒருவர் மாத்திரம் தப்பிப் பிழைத்தார்; இன்னும் பிழைத்திருக்கிறார். அவர்தான் தீரர் தக்கின் நூ.

* * *

ஸ்வர்ணபூமி என்றும் போக பூமி என்றும் புகழப்பட்டு வந்தது பர்மா நாடாகும். நெல்லும் கரும்பும் தேக்கும் எண்ணெயும் பூவும் கனியும் குலுங்கும் மரகதக் கற்பகவனம் பர்மா தேசம். இத்தகைய அழகிய தேசம் அந்நிய நாட்டாருக்கு அடிமையாகி நெடுங் காலம் அன்னிய ஆட்சியில் இருந்தது. ஏறக்குறைய நூறு வருஷ காலம் அடிமையாக இருந்தது பிறகு சென்ற 1947-ம் வருஷத்தில் பர்மா பூரண சுதந்திரம் அடைந்தது. முப்பத்தைந்து வயதுகூட நிரம்பாத தேசபக்த இளைஞர் ஜெனரல் அவுங்ஸான் தமது வீரத்தினாலும் இராஜ தந்திர நடவடிக்கைகளினாலும் பர்மா நாட்டுக்குப் பூரண சுதந்திரம் வாங்கிக் கொடுத்தார்.



"அச்சா! சபாஷ்! பர்மாவே! உன் அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம்!" என்று நாம் பர்மாவைப் பார்த்துச் சந்தோஷப்பட்டோம். ஆனால் அந்தச் சந்தோஷம் நிலைக்கவில்லை.

இந்தியாவில் பாகிஸ்தான் பிரிவினைக் கிளர்ச்சி தீவிரமாக இருந்த சமயம் அவுங்ஸான் இந்த நாட்டுக்கு வந்தார். இந்தியாவின் நிலைமையைப் பார்த்துவிட்டுத் திரும்பிப் போய், "இந்தியாவின் எதிர்காலத்தைப் பற்றி எனக்கு அவ்வளவாக நம்பிக்கை இல்லை. அங்கே கலகமும் குழப்பமும் இருந்துகொண்டேயிருக்கும். அமைதி ஏற்படப் பல வருஷமாகும்" என்று சொன்னார். இதை அவர் சொல்லிக் கொஞ்ச காலத்துக்குள்ளாகத்தான் பர்மாவில் அந்த பயங்கரச் சம்பவம் நிகழ்ந்தது. அவுங்ஸானும் அவருடைய சகாக்களில் பெரும்பாலோரும் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். அதையடுத்து பர்மாவில் உள்நாட்டுக் கலகம் ஆரம்பமாயிற்று. — ஆம், அவுங்ஸான் சொன்னது போல இந்தியாவில் உள்நாட்டுக் கலகம் ஆரம்பமாகாமல் பர்மாவில் ஆரம்பமாயிற்று.

முதலில் கம்யூனிஸ்ட்கள் மாத்திரம் அந்தக் கலகத்தை நடத்தி வந்தார்கள். பிறகு, கரேன்கள் என்னும் மலைச் சாதியார் ஒரு தனிக் கலகத்தை ஆரம்பித்தார்கள். இரண்டு விதக் கலகங்களும் வளர்ந்து வந்தன. சில காலமாகப் பர்மாவில் உள்நாட்டு யுத்தம் என்று சொல்லக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதுவரை ஏறக்குறைய முப்பதினாயிரம் பேர் யுத்தத்தில் உயிர் துறந்து விட்டார்களாம். இந்த உள்நாட்டு யுத்தப் பெருந் தீயிலிருந்து பர்மா தப்பிப் பிழைக்குமா என்று சந்தேகப்படும்படியான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஏறக்குறைய தென் பர்மாவில் பெரும் பகுதி கலகக்காரர்கள் வசம் இருக்கிறது. ரங்கூன் நகரைச் சுற்றியுள்ள சிற்சில பகுதிகளையும் கலகக்காரர்கள் கைப்பற்றிக் கொண்டிருக்கிறார்களாம். துப்பாக்கி எடுத்தவர்கள் எல்லாம் தனி ராஜ்யம் கேட்கத் தொடங்கி



திருமணத்தில் திருமாங்கல்யதாரணம் நடக்கும் சமயத்தில் மாப்பிள்ளை போட்டோவுக்குப் 'போஸ்' பண்ணினதின் பலனாகத் தாலி புரோகிதரின் கழுத்தில் ஏறுகிறது!

விட்டார்கள். வட பர்மாவுக்கும் தென் பர்மாவுக்குமிடையே போக்குவரத்துகூட நின்றுவிட்டதாம். அறுவடையான நெல்லை வெளியே அனுப்புவதற்குக் கூட சர்க்காரால் முடியவில்லையாம். அரசாங்கப் பொக்கிஷம் அடியோடு காலியாகி விட்டதாம்.

இத்தனைக்கும் மத்தியில் கொஞ்சங்கூடக் கலங்காமல் ஒரு நிர் பர்மா அரசாங்கத்தை நடத்தி வருவதென்றால், அதுவும் நமது அட்டைப் படத்திலே காணப்படுவதுபோல சிரித்துக்கொண்டே அவர் அரசாங்கத்தை நடத்தி வருவதென்றால் அது ரொம்பவும் ஆச்சரியம் அல்லவா? தற்போது பர்மியப் பிரதம மந்திரியாக இருக்கும் தக்கின் நு பலவிதத்திலும் அதிர்ஷ்டசாலி. காலஞ்சென்ற வீரத் தியாகி அவுங்ஸானின் உற்ற நண்பர் அவர். அவுங்ஸானும் தக்கின் நுவும் ஒன்றாகப் படித்தவர்கள். அவுங்ஸான் படுகொலை நடந்த காலத்தில் அவர் பர்மா அரசியல் நிர்ணய சபையின் தலைவராயிருந்தார். அவுங்ஸான் மரணத்துக்குப் பின் பிரதம மந்திரியாகி இன்று வரை உயிரோடிருந்து அப்பதவியை வகித்து வருகிறார்!

அண்டை நாடாகிய பர்மாவில் நடக்கும் இந்தப் பயங்கரமான உள்நாட்டு யுத்தத்தை நிறுத்துவதைப் பற்றி யோசிப்பதற்காக நம்முடைய பிரதம மந்திரி பண்டித ஜவாஹர்லால்ஜி சென்ற பிப்ரவரி மாதம் புதுடில்லியில் ஒரு மகாநாடு கூட்டினார். அதில் பிரிட்டன், ஆஸ்திரேலியா, சிலோன் முதலிய நாடுகள் கலந்து கொண்டன. அந்த மகாநாட்டில் பர்மாவில் உள்நாட்டு யுத்தத்தை நிறுத்தி அமைதியை ஏற்படுத்தும் பொருட்டுச் சமரசத் தூது அனுப்புவதென்று முடிவு செய்யப்பட்டது. இந்த முடிவை அறிந்தபோது தக்கின் நு என்ன சொன்னார் தெரியுமா? "உங்களுடைய சமரசத் தூது இங்கே வேண்டாம். பர்மா உள்நாட்டுக் கலகத்தை எங்களாலேயே அடக்கிவிட முடியும்!" என்றார். எப்படிப்பட்ட நெருக்கடி ஏற்பட்டாலும் பர்மாவின் சுதந்திரம் சிறிதேனும் பாதிக்கப்படுவதைத் தக்கின் நு விரும்பவில்லை.

ஆனால் பிரிட்டன், இந்தியா முதலிய தேசங்களிலிருந்து தக்கின் நு வேறுவித உதவிகளைக் கோருகிறார். பொருள் உதவியும் ஆயுத உதவியும் கேட்கிறார். இதற்காகச் சமீபத்தில் புதுடில்லிக்கு அவர் விஜயம் செய்திருந்தார். அப்போது எடுத்த படம் தான் நமது அட்டையை அலங்கரிக்கிறது.

இயற்கை வனப்புக்கும் வளத்துக்கும் அழகிய பௌத்த ஆலயங்களுக்கும் பெயர் பெற்ற பர்மா நாட்டில் உள்நாட்டுக் குழப்பங்களும் கலகங்களும் அடங்கி அமைதி நிலவவேண்டும் என்று விரும்புகிறோம்.

பர்மாவுக்கு இப்போது நேர்ந்திருக்கும் கதி எந்த நாளிலும் இந்தியாவுக்கு நேராமல் அருள் புரியுமாறு இறைவனை இறைஞ்சுகிறோம். அதன்பொருட்டு ராஜாஜி, ஜவாஹர்லால்ஜி, சர்தார்ஜி முதலிய நம் தலைவர்களுக்குத் தீர்க்காயுளைத் தரவேண்டும் என்று பிரார்த்திக்கிறோம். —எம். கல். எஸ்.

மாந்தருக்குள் ஒரு தெய்வம்

கல்கி

7. எதிர்பாராத வெற்றி

சம்பாரான் குடியானவர்களுடைய குறைகளை விசாரித்துத் தெரிந்து கொள்வதற்கு முன்னால் தோட்ட முதலாளிகளையும் சர்க்கார் அதிகாரிகளையும் காந்திஜி சந்தித்துத் தாம் செய்யப் போகும் வேலையைப் பற்றி அறிவித்துவிட விரும்பினார். பீஹார் மாகாணத்தில் ஒவ்வொரு ஜில்லாவுக்கும் ஒரு கலெக்டரும் மூன்று அல்லது நாலு ஜில்லாக்களுக்கு ஒரு கமிஷனரும் உண்டு. கமிஷனர் ஆதிக்கம் வகிக்கும் பிரதேசத்துக்கு டிவிஷன் என்று பெயர். சம்பாரான், திர்ஹுத் டிவிஷனில் இருந்தது. மகாத்மா திர்ஹுத் கமிஷனரைச் சந்திக்க விரும்புவதாகக் கடிதம் எழுதினார். அம்மாதிரியே சம்பாரான் தோட்டக்காரர் சங்கத்தின் காரியதரிசிக்கும் எழுதி அனுப்பினார்.

தோட்டக்காரர் சங்கத்தின் காரியதரிசி தமது மனக் கருத்தைக் காந்திஜியிடம் உள்ளபடி வெளியிட்டார். "நீர் யார், ஐயா, இங்கு வந்து விசாரணை செய்வதற்கு? நீர் இந்த ஜில்லாக்காரரா? இந்த மாகாணத்தைச் சேர்ந்தவரா? தோட்ட முதலாளிகளுக்கும் குடியானவர்களுக்கும் மத்தியில் வந்து குறுக்கிடுவதற்கு உமக்கு என்ன உரிமை? யார் அதிகாரம் கொடுத்தது? பேசாமல் வந்த வழியே திரும்பிப் போய்ச் சேரும்; சொந்தக் காரியம் இருந்தால் போய்ப் பாரும். அப்படி ஏதாவது சொல்லிக் கொள்ள விரும்பினால் காகிதத்தில் எழுதித் தபாலில் அனுப்பும். நீர் சொல்லும் எந்த விஷயத்தையும் இப்போது நான் கேட்கத் தயாராயில்லை!" என்றார்.

பிறகு காந்திஜி திர்ஹுத் டிவிஷன் கமிஷனரைப் பார்க்கப் போனார். அந்த நாளில் இந்தியாவில் அதிகார வர்க்கத்தின் அமுல் பிரமாதம். ஒவ்வொரு ஜில்லா கலெக்டரும் தம்மை அந்த ஜில்லாவின் ஏகசக்ராதிபதியாகவே நினைத்துக் கொள்வார். நாலு கலெக்டருக்கு மேற்பட்ட கமிஷனரைப் பற்றிக் கேட்க வேண்டுமா? காந்திஜியை அவர் அதட்டவும் மிரட்டவும் தொடங்கினார். "திர்ஹுத் டிவிஷனை விட்டு உடனே வெளியேறிப் போய்விடும். அதுதான் உமக்கு நல்லது. வெளியேறாவிட்டால் அதன் பலனை அநுபவிக்க நேரிடும்!" என்று கமிஷனர் எச்சரிக்கை செய்தார்.

மகாத்மா காந்தி திரும்பி வந்து விரஜ கிஷோர் பாபு முதலிய நண்பர்களிடம் நிலைமையை எடுத்துரைத்தார். "தோட்டக்கார முதலாளிகள் வெகு கோபமாயிருக்கிறார்கள். கமிஷனர் துரையோ அவர்களைக் காட்டிலும் கடுமையாயிருக்கிறார். ஆகையால் விசாரணை ஆரம்பிப்பதற்கு முன்னாலேயே என்னைக் கைது செய்து சிறைக்கு அனுப்பினாலும் அனுப்பி விடுவார்கள். எதற்கும் நாம் தயாராக இருக்க வேண்டும். நான் கைது செய்யப்படுவதாயிருந்தால் மோதிஹாரியிலாவது பெட்டியாவிலாவது கைது செய்யப்படுவது நல்லது" என்று காந்திஜி கூறினார்.

மோதிஹாரி, திர்ஹுத் டிவிஷனின் தலைநகரம். பெட்டியா, இராஜ குமார் சுக்லாவின் கிராமத்துக்கு அருகில் இருந்த பட்டணம். அந்தப் பிரதேசத்திலேதான் குடியானவர்கள் அதிகக் கஷ்டப் பட்டுக்கொண்டிருந்தார்கள். ஆகையினாலேயே மகாத்மா அங்கே சென்று தாம் கைதியாகவேண்டும் என்று விரும்பினார்.

உடனே காந்திஜியும் அவருடைய தோழர்களும் புறப்பட்டு மோதிஹாரி பட்டணத்தை அடைந்தார்கள். அங்கே பாபு கோரக் பிரஸாத் என்பவர் வீட்டில் தங்கி

னார்கள். மோத்தி ஹாரிக்கு ஐந்து மைல் தூரத்தில் ஒரு கிராமத்தில் ஏழைக் குடியான வன் ஒருவன் துன்புறுத்தப்பட்டதாக அன்று செய்தி வந்தது. மறுநாள் காலையில் மேற்படி கிராமத்துக்கு மகாத்மாவும் பாபு தாரா கிதர் பிரஸாத் என்பவரும் யானைமீது ஏறிக் கிளம்பினார்கள். நம்முடைய நாட்டில் மாட்டு வண்டிப் பிரயாணம் எவ்வளவு சாதாரணமோ அப்படி சம்பாரானில் யானைப் பிரயாணம் சர்வ சாதாரணமாகும்.

காந்திஜி ஏறியிருந்த யானை இரண்டரை மைல் தூரம் போவதற்குள் பின்னால் ஒரு குதிரை வண்டி வந்து யானையைப் பிடித்தது. அந்த வண்டியில் போலீஸ் சேவகன் ஒருவன் இருந்தான். அவன் மகாத்மாவிடம் "போலீஸ் சூபரிண்டெண்ட் துரை தம்முடைய வந்தனத்தை உங்களுக்குத் தெரிவிக்கச் சொன்னார்!" என்றான். இதன் கருத்து என்னவென்பது காந்திஜிக்குத் தெரிந்து விட்டது. ஆகவே தாரா கிதர்பாபுவிடம் "நீங்கள் மேலே போங்கள்!" என்று சொல்லிவிட்டுக் காந்திஜி போலீஸ் தூதன் கொண்டுவந்த வண்டியில் ஏறிக்கொண்டார். வண்டி நகரத் தொடங்கியதும் போலீஸ் தூதன் ஓர் உத்தரவை மகாத்மாவிடம் கொடுத்தான். அதில், "சம்பாரான் ஜில்லாவை விட்டு உடனே வெளியேறவும்" என்று எழுதியிருந்தது.

மகாத்மா இறங்கியிருந்த வீடு போய்ச் சேர்ந்ததும் போலீஸ் சேவகன் உத்தரவைப் பெற்றுக் கொண்டதற்குக் கையொப்பம் கேட்டான். மகாத்மா "ஆகட்டும்; கையொப்பம் தருகிறேன்" என்றார். உடனே ஒரு காகிதத்தில் "உத்தரவைப் பெற்றுக் கொண்டேன். ஆனால் நான் தொடங்கியுள்ள ஆராய்ச்சி முடியும் வரையில் சம்பாரானை விட்டுப் போகும் உத்தேசம் இல்லை" என்று எழுதிக் கையொப்பம் இட்டுக் கொடுத்தார்.

சிறிது நேரத்துக்கெல்லாம் இன்னொரு உத்தரவு வந்தது. அதில் "144-வது பிரிவின்படி போட்ட உத்தரவுக்குக் கீழ்ப்படியாத குற்றத்துக்காக நாளைக்கு மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் விசாரணைக்கு வந்து சேரவும்" என்று கண்டிருந்தது.

அன்று இரவெல்லாம் காந்திஜியும் அவருடைய சகாக்களும் தூங்கவேயில்லை. மறுநாள் என்ன நடக்கும் என்பது பற்றியும், காந்திஜி சிறைப்பட்ட பின்னர் என்னசெய்ய வேண்டும் என்பது பற்றியும் பேசிக் கொண்டிருந்தார்கள். காந்திஜி தாம் எழுதவேண்டிய கடிதங்களையெல்லாம் எழுதி முடித்தார்.

மறுநாள் மோத்தி ஹாரி நகரம் கண்ட காட்சியைப்போல் அதற்குமுன் எந்த நாளிலும் கண்டதில்லை என்று அந்த நகர் வாசிகள் சொன்னார்கள். மகாத்மாவைப் பற்றியோ அவர் தென்னாப்பிரிக்காவில் நடத்திய சத்தியப் போராட்டத்தைப் பற்றியோ அந்த இமயமலை அடிவாரப் பிரதேசத்தில் அதிகம் பேருக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. இந்த நாளிலேபோல அப்போது பத்திரிகைகளின் செல்வாக்கும் அதிகம் இல்லை. எனினும் மகாத்மா காந்தி வந்தது, அவருக்கு 144-வது உத்தரவு வழங்கப்பட்டது, அதற்கு அவர் கீழ்ப்படிய மறுத்தது ஆகிய செய்திகள் நகரிலும் சுற்று வட்டாரத்திலும் இரவுக்கிரவே பரவி விட்டன. காலையிலே பார்த்தால் பாபு கோரக் பிரஸாத் வீட்டைச் சுற்றிலும் ஜனங்கள் ஆயிரக்கணக்கிலே கூடியிருந்தார்கள்!

இந்தியாவில் பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர்கள் ஓர் உத்தரவு போடுவது, அதற்குக் கீழ்ப்படிய மாட்டேன் என்று ஓர் இந்தியர் மறுதளிப்பது,—என்பது அதுவரை என்றும் நடவா நிகழ்ச்சிகள் ஆகும். ஆகையால் அந்த நிகழ்ச்சிகள் மக்களின் உள்ளத்தைக் கவர்ந்ததிலும், அத்தகைய அதிசய மனிதரைப் பார்க்க ஜனங்கள் திரண்டு வந்ததிலும் வியப்பு ஒன்றும் இல்லையல்லவா?

சம்பாரானில் மட்டுமல்ல; இந்தியா தேசம் முழுவதிலுமே அச்செய்தி பரவியபோது மக்கள் சொல்ல முடியாத கிளர்ச்சியை அடைந்தார்கள். மேலே என்ன நடக்கப் போகிறது என்பதை ஆவலுடன் எதிர் நோக்கிக் கொண்டிருந்தார்கள்.

* * *

மகாத்மா கோர்ட்டுக்குப் போகவேண்டிய நேரம் நெருங்கிற்று. ஜனக்கூட்டம் நிமிஷத்துக்கு நிமிஷம் அதிகமாயிற்று. காந்திஜி கோர்ட்டுக்குப் போகப் புறப்பட்ட போது வீதியெல்லாம் ஜனசமுத்திரமாயிருந்தது. கோர்ட்டைச் சுற்றிலும் அப்படியே பெருங் கூட்டம்.

இந்தச் சமயத்தில் மக்கள் திரண்டு எழுந்து வந்து தம்மிடம் காட்டிய அன்பைக் குறித்து மகாத்மா கூறுகிறார்:—

"சம்பாரானில் என்னை யாருக்கும் தெரியாது. சம்பாரான் குடியானவர்களோ கல்வி அறிவு இல்லாதவர்கள். சம்பாரான் கங்கை நதிக்கு வெகு தூரம் வடக்கே நேபாளத்

துக்கு அருகில் இமயமலை அடிவாரத்தில் இருக்கிறது. இந்தியாவின் மற்றப் பகுதிகளுக்கும் அதற்கும் தொடர்பே இல்லை. அந்தப் பிரதேசத்தில் காங்கிரஸைப் பற்றி யாருக்கும் தெரியாது. காங்கிரஸின் பெயரைக் கேள்விப்பட்டிருந்த சிலரும் அதில் சேரப் பயந்திருந்தார்கள். இரகசியமாகவோ பகிரங்கமாகவோ வேலை செய்து எங்கள் வருகைக்கு முன் ஏற்பாடுகள் செய்து வைக்கத் தூதர்கள் யாரையும் நாங்கள் அனுப்பிவைக்கவில்லை. எனினும், சம்பாரான் குடியானவர்கள் என்னை நெடுங்கால நண்பனைப்போல் வரவேற்றார்கள். இந்தக் குடியானவர்களின் சந்திப்பில் நான் ஆண்டவனையும் அஹிம்சையையும் சத்தியத்தையும் நேருக்கு நேர் தரிசித்தேன். இந்த சத்திய தரிசனம் பெறுவதற்கு என்னை உரியவனாக்கியது எது? ஜனங்களிடம் நான் கொண்டிருந்த அன்பேயல்லாமல் வேறு எதுவும் சொல்வதற்கில்லை. சம்பாரனில் அந்த தினம் என் வாழ்நாளிலேயே என்றும் மறக்க வொண்ணாத தினமாகும். சட்டப்படி விசாரணைக்கு உள்ளானவன் நான் என்றாலும் உண்மையில் அரசாங்கமே அப்போது குற்றவாளியின் கூண்டில் ஏறி நின்றதாகத் தோன்றியது. கமிஷனர் எனக்கு விரித்த வலையில் என்னை அவர் பிடிக்கவில்லை. அந்த வலையில் அரசாங்கத்தையே விழும்படி செய்தார்!”

• • •

கோர்ட்டில் விசாரணை ஆரம்பமாயிற்று. ஆனால் சர்க்கார் தரப்பில் அரசாங்க வக்கீலுக்கும் மாஜிஸ்ட்ரேட்டுக்கும் மற்ற உத்தியோகஸ்தர்களுக்கும் இன்னது செய்வதென்றே தெரியவில்லை. வழக்கைத் தள்ளிப்போடும்படி சர்க்கார் வக்கீல் மாஜிஸ்ட்ரேட்டைக் கேட்டுக் கொண்டார். ஆனால் காந்திஜி குறுக்கிட்டு, “உத்தரவை மீறிய குற்றத்தை நான் ஒப்புக்கொள்ளப் போகிறேன். ஆகையால் வழக்கைத் தள்ளி வைக்க யாதொரு முகாந்திரமும் இல்லை!” என்று சொன்னார். பிறகு தாம் எழுதிக் கொண்டு வந்திருந்த வாக்குமூலத்தைப் படித்தார். அதன் சாராம்சமாவது :—

“அதிகாரிகள் 144-வது பிரிவின்படி போட்ட உத்தரவை நான் மீறி நடப்பதாக வெளிப்படையாகத் தோன்றும். இந்த நடவடிக்கையை நான் மேற்கொண்டதின் காரணத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஜீவகாருண்யத் தொண்டு செய்யும் நோக்கத்துடன் நான் இந்தப் பிரதேசத்துக்கு வந்தேன். இங்குள்ள குடியானவர்கள் தங்களை அவுரித்தோட்ட முதலாளிகள் கொடுமைப் படுத்துவதாகவும் நான் வந்து உதவி செய்யவேண்டும் என்றும் என்னை அழைத்தார்கள். ஆனால் உண்மை நிலையை நேரில் கண்டு அறிவதற்கு முன்னால் நான் எதுவும் செய்ய முடியாது என்று சொன்னேன். ஆகையால் அவுரித் தோட்ட முதலாளிகள், சர்க்கார் அதிகாரிகள் இவர்களுடைய ஒத்துழைப்புடன் நிலைமையை ஆராய்ந்து தெரிந்துகொள்ள எண்ணி வந்தேன். வேறு நோக்கம் எதுவும் எனக்குக் கிடையாது. என்னுடைய வருகையினால் பொது அமைதிக்குப் பங்கமும் உயிர்ச் சேதமும் நேரிடலாம் என்று உத்தரவில் கண்டிருக்கிறது. இதை நான் நம்ப முடியவில்லை. இத்தகைய காரியங்களில் நான் அதிக அனுபவமுள்ளவன். ஆனால் அதிகாரிகளோ வேறு விதமாக எண்ணுகிறார்கள். அவர்களுக்குக் கிடைத்திருக்கும் தகவல்களை ஆதாரமாகக் கொண்டே அவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும். நான் சட்டத்திற்கு அடங்கிய பிரஜை. ஆகையால் உத்தரவைப் பெற்றவுடனே அதற்குக் கீழ்ப்படிய வேண்டும் என்றுதான் எண்ணினேன். ஆனால் அவ்விதம் செய்தால் நான் என்னுடைய கடமையில் தவறியதாகும் என மனச்சாட்சி அறிவுறுத்தியது. நான் யாருடைய நலத்தை முன்னிட்டு இங்கு வந்தேனோ அவர்களைக் கைவிட்டுப் போவதாகவே முடியும். ஆகையால் நானாக இங்கிருந்து போகக் கூடாது என்ற முடிவுக்கு வந்தேன். என் மனச்சாட்சி ஒரு விதமாகவும் சர்க்கார் அதிகாரிகளின் முடிவு வேறு விதமாகவும் கட்டளையிடும் போது சர்க்கார் அதிகாரிகளின் உத்தரவை நிறைவேற்றும் பொறுப்பை அவர்களுக்கே விட்டு விடுவதுதான் நியாயமாகும். தற்போது இந்தியாவில் உள்ள அரசியல் அமைப்பின் கீழ் இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கைக்கொள்ளக்கூடிய வழி இது ஒன்று தான். உத்தரவுக்குக் கீழ்ப்படிய மறுத்து விட்டு அதற்குரிய தண்டனையை மனப்பூர்வமாக ஏற்று அனுபவிக்கத் தயாராயிருக்கிறேன். எனக்கு விதிக்கப்படப் போகும் தண்டனையை எவ்வகையிலும் குறைத்துக் கொள்ள நான் விரும்பவில்லை. சட்டம், அரசாங்க அதிகாரம் இவற்றின்மேல் மதிப்புக் குறைவினால் நான் இந்த உத்தரவை மீறவில்லை. சட்டங்களுக்கெல்லாம் மேற்பட்ட மனச்சாட்சி என்னும் சட்டத்துக்குக் கீழ்ப்படியும் பொருட்டே இந்த 144-வது உத்தரவை மீறத் துணிந்தேன்.

இத்தகைய வாக்குமூலம் காந்திஜி கொடுத்த பிறகு விசாரணையைத் தள்ளிப் போடுவதற்குக் காரணம் ஒன்றும் இல்லை அல்லவா? மாஜிஸ்ட்ரேட்டும் அரசாங்க வக்கீலும் திடுக்கிட்டுப் போனார்கள். இந்த மாதிரி ஒரு அநுபவம் இதற்கு முன் அவர்களுக்கு ஏற்பட்டதே யில்லை. ஆகையால் இன்னது செய்வது என்றும் அவர்களுக்குத் தெரியவில்லை. மாஜிஸ்ட்ரேட் பிற்பாடு தீர்ப்புக் கூறுவதாகச் சொல்லி, அதற்காக ஒரு தேதியும் குறிப்பிட்டார். பின்னர், கோர்ட்டு கலைந்தது.

நடந்ததை யெல்லாம் தெரிவித்து இராஜப் பிரதிநிதிக்கும், பண்டித மாளவியாவுக்கும், பாட்னா நண்பர்களுக்கும் மகாத்மா காந்தி தந்தி கொடுத்தார்.

மகாத்மா தந்தி கொடுப்பதற்கு முன்னாலேயே அவர்களுக்குச் செய்தி போய் விட்டது. இந்தியா தேசமெங்கும் அந்தச் செய்தி பரவிவிட்டது. தேசத்தில் அரசியல் அறிவு பெற்றவர்கள் எல்லாரும் அடுத்தபடி என்ன செய்தி வருகிறதோ என்று ஆவலுடன் எதிர்பார்க்கலானார்கள்.

பிரிட்டிஷ் அதிகாரி போட்ட உத்தரவைத் தனி மனிதர் ஒருவர் மீறியிருக்கிறார். மீறிய தோடல்லாமல் அதைக் கோர்ட்டில் பகிரங்கமாக ஒப்புக் கொண்டு தண்டனை கொடுக்கும் படியும் கேட்டிருக்கிறார்! இந்த மாதிரி அதிசயத்தை இதற்கு முன்னால் கண்டதும் இல்லை; கேட்டதும் இல்லை. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்கு நேர்ந்த இந்த அவமதிப்பைப் பிரிட்டிஷ் அதிகார வர்க்கத்தார் எப்படிச் சமாளிக்கப் போகிறார்கள்? பிரிட்டிஷ் சிங்கம் என்ன செய்யப் போகிறது?

பிரிட்டிஷ் சிங்கம் கர்ஜனை புரிந்தது. ஆனால் அது போர் கர்ஜனை அல்ல; வாலைச் சுருட்டிக் கொண்டு குகைக்குத் திரும்பிச் செல்லும் கர்ஜனை. கத்தியோ துப்பாக்கியோ ஆள் பலமோ பண பலமோ ஆயுத பலமோ,—ஒன்றும் இல்லாத மனிதரின் ஆத்ம சக்திக்கு முன்னால் பிரிட்டிஷ் அதிகார வர்க்கம் தலை வணங்கிற்று!

வைஸ்ராய் செம்ஸ்போர்டு தமது நிர்வாக சபை அங்கத்தினருடன் கலந்தாலோசித்து பீஹார் லெப்டினன்ட் கவர்னருக்குச் செய்தி அனுப்பினர். லெப்டினன்ட் கவர்னர் திர்ஹூத் டிவிஷன் கமிஷனருக்கு ஆக்ஞை அனுப்பினர். கமிஷனர் மாஜிஸ்ட்ரேட்டுக்குச் செய்தி அனுப்பினர்.

தீர்ப்புக் கூறுவதற்காகக் குறிப்பிட்ட நாள் வருவதற்கு முன்னதாகவே மாஜிஸ்ட்ரேட்டிடமிருந்து மகாத்மாவுக்குச் செய்தி வந்தது. "லெப்டினன்ட் கவர்னர் வழக்கை வாபஸ் பெற்றுக் கொள்ளும்படி உத்தரவு அனுப்பியிருக்கிறார். அதன்படி வழக்கு வாபஸ் பெறப்பட்டது" என்று மாஜிஸ்ட்ரேட் தெரிவித்திருந்தார்.

சம்பரான் ஜில்லா கலெக்டரிடமிருந்து காந்திஜிக்கு ஒரு கடிதம் வந்தது. "அவுரித் தோட்டங்களில் குடியானவர்களின் நிலைமையைப் பற்றி நீங்கள் உத்தேசித்திருக்கும் விசாரணையைத் தடையின்றி நடத்தலாம். அதற்கு வேண்டிய எல்லா உதவியும் செய்யத் தயாராயிருக்கிறேன்" என்று கலெக்டர் ஹெகாக் எழுதியிருந்தார்.

இவ்வாறு காந்தி மகான் இந்தியாவில் முதன் முதலாகத் தொடங்கிய சாத்வீகச் சட்டமறுப்பு அதிசீக்கிரத்தில் மகத்தான வெற்றியாக முடிந்தது.

அரசாங்க அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் மகாத்மாஜி சம்பரான் குடியானவர்களின் நிலைமை பற்றிய விசாரணையைச் சாங்கோபாங்கமாக நடத்தினார். இதன் பலனாக அக்குடியானவர்களின் குறைகள் பெரும்பாலும் நிவர்த்தியாயின.




ஆனந்தி ◇ ராமச்சந்திரன் திருமணம்




"இன்று போல் என்றும் இருங்கள்!" என்று ராஜாஜி கூறிய ஆசி புது மணம் புரியும் எல்லாத் தம்பதிகளுக்கும் உரியது.

★








மேலே: கவர்னர் நம் பத்திகளுக்கு வரவேற்பு.


★

நடுப்படத்தில் நடுவில் வீற்றிருப்பவர் ராஜாஜியின் புதல்வி ஸ்ரீமதி நாமகிரி.

★

ரஸிகாமணியின் ஆனந்தம்.





அலை ஓசை

கல்கி

பத்தொன்பதாம் அத்தியாயம்

"பாம்புக்கு வார்த்த பால்"

பட்டாபிராமனுடைய மாமியாரின் மனோரதம் வீண் போகவில்லை. தேவபட்டணத்து முனிசிபல் சேர்மன் பதவிக்கு நடந்த தேர்தலிலும் பட்டாபிராமனுக்கே வெற்றி கிடைத்தது. அந்த வெற்றி தனியாக வரவில்லை. இடி, மின்னல், பெருமழை, பிரளயம் இவற்றுடன் சேர்ந்து வந்தது.

சீதாவுக்கு ஏற்பட்ட மனச் சோர்வு இரண்டு மூன்று தினங்களிலேயே மறைந்து போய்விட்டது. சரஸ்வதி அம்மாள் அடிக்கடி முணுமுணுத்ததைப் பொருட்படுத்தாமல் பட்டாபிராமனும் லலிதாவும் சீதாவை உற்சாகப்படுத்துவதில் முனைந்தார்கள். முதல் தேர்தலில் ஏற்பட்ட வெற்றிக்காக நடந்த உபசார விருந்துகளுக்கும் வாழ்த்துக் கூட்டங்களுக்கும் சீதாவையும் தவறாமல் உடன் அழைத்துப் போனார்கள். சென்ற இடங்களில் எல்லாம் சீதா தன்னுடைய கலகலப்பான சுபாவத்தினாலும் சாதுர்யமான பேச்சுக்களினாலும் அனைவரையும் குதூகலத்தில் ஆழ்த்தி வந்தாள். எதிரிமனப்பான்மை கொண்டவர்கள் சிலரும் பொறாமைக்காரர்களும் தங்களுக்குள் ஏதோ அப்படி, இப்படி என்று பேசிக் கொண்டது உண்மைதான். ஆனால் அது ஒன்றும் பட்டாபிராமன் காது வரையில் வந்து எட்டவில்லை.

நாளாக ஆக, பட்டாபிராமனுக்குச் சேர்மன் பதவி நிச்சயம் என்று ஏற்பட்டது. சேர்மன் தேர்தல் தினம் நெருங்க நெருங்க, பட்டாபி, லலிதா, சீதா,—இவர்களின் உற்சாகமும் உச்சத்தை அடைந்து வந்தது.

ஆனால் குறிப்பிட்ட தேதிக்குச் சரியாக இரண்டு நாள் இருக்கும்போது லலிதாவின் தலையில் இடி விழுந்தது போன்ற ஒரு திடுக்கிடும் சம்பவம் ஏற்பட்டு விட்டது.

அன்று காலையில் பட்டாபிராமன் வெளியிலே போயிருந்தான். சீதா தன்னுடைய மாடி அறையில் ஏதோ கடிதம் எழுதிக் கொண்டிருந்தாள்.

அச்சமயம் தபால்கள் வந்தன. லலிதா தபால்களை வாங்கிக் கொண்டு வந்து பட்டாபிராமனுடைய மேஜையின் மேல் வைத்தாள். பிறகு தனக்கு ஏதாவது கடிதம் உண்டா என்று பார்ப்பதற்கு அசிரத்தையாகத் தபால்களைப் புரட்டினாள். அவளுடைய பெயருக்கு ஒரு கடிதம் இருந்தது. சாதாரணமாய், விலாசத்தைப் பார்த்ததும் யாரிடமிருந்து கடிதம் வந்திருக்கிறதென்று அவளுக்குத் தெரிந்துவிடுவதுண்டு. ஏனெனில் அவள் பெயருக்குக் கடிதம் எழுதக் கூடியவர்கள் வெகு சிலர்தான். சூரியா ஒருவன். சீதா டில்லியிலிருந்தபோது அடிக்கடி எழுதுவாள். கல்கத்தாவிலிருந்து சித்ரா எழுதுவாள். இன்னும் இரண்டொருவர்தான். ஆனால் இந்தக் கடிதத்தின் மேல் விலாசத்திலிருந்து அதை எழுதியது யார் என்று தெரியவில்லை. ஆகையால் வழக்கத்தைக் காட்டிலும் சிறிது ஆர்வத்துடனேயே உறையை உடைத்தாள். ஏனோ தெரியவில்லை; அவளுடைய நெஞ்சம் கொஞ்சம் பலமாகவே அடித்துக் கொண்டது.

உறைக்குள்ளே கடிதம் ஒன்றுமில்லை. அதற்குப் பதிலாக அச்சடித்த பத்திரிகைத் துண்டு ஒன்று இருந்தது. லலிதா திரும்பவும் உறைக்குள் பார்த்தாள். மடித்திருந்த பத்திரிகைத் துண்டைப் பிரித்து அதற்குள் ஏதாவது கடிதம் இருக்கிறதோ என்று பார்த்தாள். தவறிக் கீழே விழுந்திருக்கிறதோ என்று பார்த்தாள். இல்லையென்பதாக நிச்சயமாயிற்று. யாரோ தவறுதலாகக் கடிதத்தை

வைப்பதற்குப் பதில் இந்தப் பத்திரிகையை வைத்து விட்டாற்போலிருக்கிறது. அப்படி வைத்தது யாராக இருக்கும் என்று எண்ணிக்கொண்டே அச்சுத் தாளைப் பார்த்தாள். அதில் கொட்டை எழுத்தில் போட்டிருந்த ஒரு தலைப்பு அவளுடைய கண்ணையும் கவனத்தையும் கவர்ந்தது. "பட்டாபிராமன் லீலைகள்" என்ற அந்தத் தலைப்பைப் பார்த்ததும் அவளுடைய மனம் பதறியது; உடம்பு நடுங்கியது. இரண்டு வரி படித்ததும் பதறலும் நடுக்கமும் அதிகமாயின. அதற்கு மேல் அங்கே யிருந்து படிக்கக் கூடாது என்று தோன்றியது. ஒரு வேளை பட்டாபிராமன் அங்கு வந்து விட்டால்? அல்லது சீதாதான் வந்து விட்டால்? அவர்களுடைய கண்ணிலே இது படக் கூடாது! நிச்சயமாய்க் கூடாது! ஆகையால் அந்தப் பத்திரிகைத் துண்டை எடுத்துக்கொண்டு தன் அறைக்குள் ஓடிச் சென்று கதவையும் தாள் போட்டுக் கொண்டாள். ஜன்னல் ஓரமாக நின்று படித்தாள். பாதிக்கு மேல் படிக்க முடியவில்லை. கண்களில் கொதிக்கும் வெந்நீரைப் போன்ற உஷ்ணத்துடன் கரகர வென்று ஜலம் கொட்டத் தொடங்கிக் கண்களை அடியோடு மறைத்து விட்டது. அடிவயிற்றிலிருந்து வெப்பமான புகை போல ஏதோ கிளம்பி மாரை அடைத்துக்கொண்டு மேலேறி மூச்சுத் திணறும்படி செய்து தலைக்குள்ளே பிரவேசித்தது. தலை கிறுகிறு வென்று சுழலத் தொடங்கியது. மயக்கம் வந்து கீழே தள்ளி விடுமோ என்று தோன்றியது. அந்த நிலைமையில் லலிதா ஆச்சரியமான மனோதிடத்துடன் அந்தப் பத்திரிகைத் துண்டைத் தன் பெட்டிக்குள்ளே வைத்துப் பூட்டினாள். பிறகு கட்டிலின் மேலே மெத்தையின் மீது தொப்பென்று விழுந்தாள். சிறிது நேரம் கண்ணீர் ஆறாகப் பெருகிக் கொண்டிருந்து, கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து நின்றது. மனமும் தெளிவடைந்தது. "சீச்சீ! யாரோ அயோக்கியன், பொறாமைக்காரன், எதையோ கன்னாபின்னா வென்று எழுதி அச்சுப் போட்டு விட்டதற்காக நம்முடைய மனதை நாம் பதற விட்டு விடலாமா?" என்று எண்ணி மனதைத் திடப்படுத்திக் கொண்டாள். பிறகு எழுந்து கண்களையும் முகத்தையும் நன்றாகத் துடைத்துக்கொண்டு நிலைக்கண்ணாடியில் பார்த்து நெற்றிப் பொட்டையும் சரிப்படுத்திக் கொண்டு அறையை விட்டு வெளியேறினாள். "அம்மா! சமையல் ஆகிவிட்டதா? அவர் வரும் நேரமாகி விட்டதே!" என்று கேட்டுக் கொண்டு சமையல் அறைக்குச் சென்ற லலிதாவின் முகத்திலோ குரலிலோ சற்றுமுன் அவள் அநுபவித்த கொடிய வேதனைக்கு அடையாளம் கொஞ்சம் கூட இருக்கவில்லை.

இப்படி லலிதாவுக்கு நரக வேதனை அளித்த விஷயம் என்னவென்றால்:

கொஞ்ச காலமாகத் தேவபட்டணத்தில் 'மஞ்சள் பத்திரிகை' ஒன்று நடமாடிக் கொண்டிருந்தது. அதில் அந்த ஊர்ப் பிரமுகர்களுடைய சொந்த வாழ்க்கையில் உள்ள ஊழல்களையெல்லாம் வெளிப்படுத்துகிறது என்னும் வியாஜத்தில் சொல்லவும் எழுதவும் தகாத ஆபாச விஷயங்களையெல்லாம் எழுதித் தள்ளிக் கொண்டிருந்தார்கள். அந்த ஆபாசப் பத்திரிகை பெரும்பாலும் இரகசியமாகப் பரவிக் கொண்டிருந்தது. நல்ல மனிதர்கள், நாகரிகமான மனிதர்கள் அதை வாங்குவதற்கும் படிப்பதற்கும் லஜ்ஜைப்பட்டார்கள். ஆயினும் பலருடைய மனதில் தங்களைப் பற்றி ஏதாவது அவதூறு வந்திருக்கிறதோ என்ற பீதி குடிகொண்டிருந்தது. சிலர் அந்த ஆபாசப் பத்திரிகையை இரகசியமாக வாங்கிப் படிப்பதும், மற்றவர்களைப் பற்றிக் கேவலமாக எழுதியிருப்பதைப் படித்துச் சந்தோஷப்படுவதும், தங்களைப் பற்றி எழுதியிருப்பதைப் படித்துவிட்டு அவஸ்தைப்படுவதும், அதை வேறு யாரும் படிக்காமலிருக்க வேண்டுமே என்று கவலைப்படுவதுமாயிருந்தார்கள்.

இந்த முட்டாள்தனப் படுகுழியில் விழாதிருந்தவர்களில் பட்டாபிராமன் ஒருவன். அந்தப் பத்திரிகையை அவன் பார்த்ததுமில்லை; படித்ததுமில்லை. யாராவது அதைப் பற்றிப் பிரஸ்தாபித்தாலும் உடனே அவன் தன்னுடைய அருவருப்பை வெளியிட்டு அந்தப் பேச்சை அடக்கி விடுவான்.

ஆகவே பட்டாபிராமனுடைய வீட்டுக்குள்ளே அந்த மஞ்சள் பத்திரிகை அதுவரையில் பிரவேசியாமலிருந்ததில் ஆச்சரியம் இல்லையல்லவா?

அந்தமாதிரி ஒரு ஆபாச பயங்கரப் பத்திரிகை நடந்து வருகிறதென்று லலிதா பராபரியாகக் கேள்விப்பட்டிருந்தாள். அவளுக்குத் தெரிந்த இரண்டொரு மனிதர்களைப் பற்றி அதில் கேவலமாக எழுதியிருந்ததென்பதும் அவள் காதில் விழுந்திருந்தது. அதையெல்லாம் கேட்டபோது, 'இப்படியும் ஒரு பத்திரிகையா? இப்படியும் எழுதுவதுண்டா?' என்று அவள் ஆச்சரியப்பட்டதுண்டு. ஆனால் இப்போது அந்தப் பத்திரிகையிலிருந்து வெட்டி எடுத்த துண்டைத் தானே படித்துப் பார்க்க நேர்ந்தபோது அவள் ஆச்சரியப்பட முடியவில்லை. ஆச்சரியத்துக்குப் பதிலாக ஆத்திரமும் துயரமும் அளவில்லாத குரோதமும் பொங்கி எழுந்து அவளைத் திக்குமுக்காடும்படி செய்தன.

கர்ம சிரத்தையாக யாரோ வெட்டி எடுத்து அவளுக்கு அனுப்பியிருந்த பத்திரிகைப் பகுதியில் பட்டாபிராமனும் சீதாவும் காதலர்கள் என்றும், சீதாவை வீட்டில் வைத்துக் கொண்டிருக்கும் லலிதா ஒரு முழு மூடம் என்றும், இப்பேர்ப்பட்ட ஒழுக்கத்திற் சிறந்த பட்டாபிராமனைத்தான் தேவபட்டணத்து மகாஜனங்கள் நகரசபைத் தலைவராகப் பெறும் பாக்கியத்தை அடையப் போகிறார்கள் என்றும் எழுதியிருந்தது. கட்டுரையில் பாதிவரையில் இந்த அருமையான விஷயங்கள் இருந்தன. அதற்கு மேலே படிக்க முடியாமல் லலிதா நிறுத்தி விட்டாள். ஆனால் அந்த ஆபாசக் குப்பையை உடனே தீயில் போட்டுக் கொளுத்தாமல் பெட்டிக்குள் பூட்டி வைத்த காரணம் என்ன? அவளுடைய அந்தரங்கத்துக்கும் அவளைப் படைத்த கடவுளுக்குந்தான் தெரியும்!

பத்திரிகையைப் படித்த உடனே ஏற்பட்ட முதல் அதிர்ச்சிக்கும் வேதனைக்கும் பிறகு லலிதாவின் பேச்சும் நடவடிக்கையும் முன்னைக்காட்டிலும் அதிக உற்சாகமயமாயிருந்தன. அத்தகைய பயங்கரமான ஒரு விஷயத்தைப் படித்த பிறகும் தான் அதைப் பற்றிப் பிரஸ்தாபிக்காமல் முன்மாதிரியே நடந்து கொள்கிறோம் என்னும் எண்ணம் அவளுக்கு எக்களிப்பை ஊட்டியது. அவளுடைய நடத்தையில் காணப்பட்ட அதிகப்படி குதூகலத்தைத் தேர்தல் தினம் நெருங்கியதால் ஏற்பட்டது என்பதாகவே மற்றவர்கள் எண்ணினார்கள்.

ஆனால் யாரேனும் கூர்ந்து கவனித்திருக்கும் பட்சத்தில் லலிதா வெளிக்கு எவ்வளவு குதூகலத்தைக் காட்டினாலும் அவளுடைய மனதில் ஏதோ ஒரு வேதனை அரித்துக் கொண்டிருக்கிறது என்பதை அறிந்திருப்பார்கள். அதோடு சீதாவின் விஷயத்தில் அவள் நடந்து கொண்டதிலும் ஒரு மாறுதல் இருப்பதைக் கண்டிருப்பார்கள்.

இந்த நிலைமையில் சேர்மன் தேர்தல் நாளும் வந்தது. தேர்தலும் நடந்தது. பட்டாபிராமன் மகத்தான வெற்றியை அடைந்தான். அது காரணமாக மறுதடவை தேவபட்டணம் அல்லோல கல்லோலப்பட்டது. பொதுஜன வெற்றிக் கொண்டாட்டங்கள் எல்லாம் முடிந்த பிறகு முக்கியமான நண்பர்கள் பட்டாபியின் வீட்டுக்கு வந்து வெகு நேரம் இருந்து பேசிக் கொண்டிருந்து விட்டுப் போனார்கள். இன்றைக்கும் ஸ்ரீமதி சீதா தேவி வெற்றிக் கொண்டாட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. நண்பர்கள் கூட்டத்தின் நடுவே லலிதாவும் அன்றைக்கு வரவில்லை. இதைப்பற்றி ஒரு நண்பர் பிரஸ்தாபித்தபோது இன்னொருவர் அவர் தோளைத் தொட்டுத் தன்னுடைய மூக்கின் பேரில் விரலை வைத்து எச்சரித்தார். "நீச மனிதர்களின் அவதூறுகளையெல்லாம் நாம் பொருட்படுத்தக் கூடாது. பொருட்படுத்தினால் அந்த நீசர்களுக்குத்தான் கௌரவம் கொடுத்ததாக முடியும். இந்த விஷயத்தை வீட்டுப் பெண்களுக்கும் சொல்லி வைக்க வேண்டும்!" என்று மற்றொரு நண்பர் கூறினார். இதெல்லாம் பட்டாபிராமனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. "எதைப் பற்றிப் பேசுகிறீர்கள்?" என்று பட்டாபிராமன் கேட்டதற்கு, "அந்த 'அல்கா' விஷயங்கள் இந்தச் சந்தோஷ சமயத்தில் என்னத்திற்கு?" என்று இன்னொருவர் சொல்லி முடித்து விட்டார். சிறிது நேரத்திற் கெல்

லாம் பட்டாபிராமனைத் தனியே விட்டுவிட்டுச் சிநேகிதர்கள் தத்தர் வீடு போய்ச் சேர்ந்தார்கள்.

நண்பர்கள் இருக்கும்போதே பட்டாபிராமனின் எண்ணம் அடிக்கடி லலிதா— சீதாவின் பேரில் சென்று கொண்டிருந்தது. இரண்டு பேருக்கும் இன்றைக்கு என்ன வந்து விட்டது என்று ஆச்சரியப் பட்டான். நண்பர்கள் போன பிறகு "லலிதா!" "லலிதா!" என்று கூப்பிட்டான். அதற்குப் பிறகு லலிதா "சாப்பிடப் போகலாமா?" என்று கேட்டுக் கொண்டே அறைக்குள் வந்தாள்.

அவசரமாகக் கண்ணைத் துடைத்துக் கொண்டு வந்தவளின் முகம் போல அவள் முகம் காணப்பட்டது. "இது என்ன? முகம் ஏன் அழுது வடிகிறது? நான் ஜயித்து விட்டேனே என்று ஒரு குரல் அழுதாயா, என்ன!" என்று பட்டாபிராமன் காரமாகக் கேட்டான்.

"நான் ஒன்றும் அழவில்லை. என் முகத்தைப் பார்த்தால் உங்களுக்கு ஒரு வேளை அழுது வடிகிறாப்போல் தான் இருக்கும்!" என்று லலிதாவும் குரோதமாகப் பதில் சொன்னாள்.

"உங்கள் எல்லாருக்கும் இன்றைக்கு என்ன வந்து விட்டது?" என்று பட்டாபிராமன் கேட்டான்.

"உங்கள் எல்லாருக்கும் என்று யாரைச் சொல்கிறீர்கள்? என் ஒருத்தி விஷயந்தான் எனக்குத் தெரியும்!" என்றாள் லலிதா.

"யாரைப் பற்றிக் கேட்கிறேன் என்று உனக்குத் தெரியவில்லையா? உன் அருமைத் தோழி சீதாவைப் பற்றித்தான் கேட்கிறேன்."

"அவள் என் அருமைத் தோழி இல்லை. ஒரு வேளை உங்கள் ......"

"யாருடைய தோழியாயிருந்தாலும் இருக்கட்டும். அவளுக்கு என்ன வந்து விட்டது? அன்றைக்கு நான் ஜயத்துடன் வந்தபோதும் மச்சிற்குப் போய்க் குப்புறப் படுத்துக் கொண்டிருந்தாள். இன்றைக்கும் அப்படியே செய்கிறாளே? காரணம் என்ன?" என்றான் பட்டாபிராமன்.

"அவள் சமாசாரம் எனக்குத் தெரியாது. நீங்களே கேட்டுக் கொள்ள வேண்டியதுதான்" என்றாள் லலிதா.

"உனக்கும் இன்றைக்கு உடம்பு சரியில்லைபோலிருக்கிறது. ஒரு வேளை உன் அம்மாவுக்கு ஏதாவது தெரியுமா என்று கேள். இன்றைக்கு ஏதாவது பலமாகச் சீதாவை மண்டகப்படி செய்தாளோ, என்னமோ?"

"என் அம்மாவின் தலையை எதற்காக உருட்டுகிறீர்கள்? அவள் ஒருவரையும் ஒரு வார்த்தையும் சொல்லவில்லை. நாளைக்கே அவளை ஊருக்குப் போய்விடச் சொல்கிறேன். நானும் வேணுமானாலும் போய்விடுகிறேன். எந்த நாய் இந்த வீட்டில் இருக்க வேண்டுமோ, இருக்கட்டும்."

பட்டாபிராமன் லலிதாவை எரித்து விடுகிறவனைப் போல் பார்த்தான். அடுத்த நிமிஷம் 'இந்த அசட்டுச் சண்டையை வளர்த்துவதில் பிரயோஜன மில்லை' என்று தீர்மானித்தவனாய்ச் சமையலறையை நோக்கி நடந்தான். சில நாளாக அவனுடைய மனதில் ஒரு சந்தேகம் தோன்றிக்கொண்டிருந்தது. தன் மாமியார் சீதாவைப் பற்றி அடிக்கடி நிந்தனை பேசி நிஷ்டூரம் சொல்கிறாள் என்றும் அதற்கு லலிதாவும் இடங் கொடுத்து வருகிறாள் என்றும் ஐயங்கொள்ள ஏதுக்கள் இருந்தன. அந்தச் சந்தேகம் இப்போது உறுதிப் பட்டது. நேற்று வரையில் நல்ல உற்சாகத்துடனிருந்தவள் இன்றைக்கு மச்சிலிருந்து கீழே இறங்காமல் இருக்கும் காரணம் என்ன? சீதாவின் காது கேட்கத் தன் மாமியார் ஏதோ நிந்தைமொழி சொல்லியிருக்க வேண்டும். அதைக் குறித்துச் சீதா லலிதாவைக் கேட்டிருக்கலாம். லலிதா தன் தாயாருக்குப் பரிந்து பேசியிருக்கலாம். சீதா மனம் நொந்து போயிருக்கிறாள். — வேறு காரணம் ஒன்றும் இருப்பதற்கில்லை. உண்மை அப்படியிருப்பதினால்தான் லலிதாகூட இன்றைக்குச் சீதாவைப் பற்றிக் கடுமொழி பேசுகிறாள். ஐயோ! பாவம்! அநாதை சீதா இவர்களுடைய வாயில் அகப்பட்டுக் கொண்டிருக்கிறாள். மாமியார் ஒரு ராட்சஸி என்பதில் சந்தேகம் இல்லை. தன்னிடம் அவள் பயபக்தியுடன் இருப்பதாக நடிப்பதெல்லாம் வெறும் பாசாங்கு. ராட்சஸியின் பெண்ணிடம் ராட்சஸ குணம் இல்லாமற் போகுமோ? தாடகையும் சூர்ப்பனகை

யும் போன்ற இரண்டு ராட்சஸிகளி டம் அகப்பட்டுக் கொண்டு பேதை சீதா தவிக்கிறாள்! அடாடா! அவளு டைய தலைவிதியை என்னவென்று சொல்லுவது? அங்கே தாலிகட்டிய புருஷன்தான் பரம மூட்டாளா யிருக்கிறான், பெண்டாட்டியைத் திண் டாட விட்டுவிட்டுக் கெட்டலைகிறான் என்றால், தஞ்சம் புகவந்த இடத்தி லும் சீதாவுக்கு இந்தக் கதியா நேர வேண்டும்? அதிலும் தனக்கு அவ ளால் ஏற்பட்டிருக்கும் நன்மைகளை யெல்லாம் உத்தேசிக்கும்போது, தன் னுடைய சொந்த வீட்டில் அவளுக்கு அவமதிப்பும் மனத்துயரமும் ஏற்பட லாமா? கடவுளுக்கு அடுக்குமா?

இப்படியெல்லாம் எண்ணமிட்டுக் கொண்டே பட்டாபிராமன் சாப்பிட்டு முடித்தான். லலிதாவுடன் ஒரு வார்த் தையும் பேசவில்லை. சாப்பிட்டான தும் படுக்கை அறைக்குள் சென்று கட்டிலின்மீது விரித்திருந்த படுக்கை யில் படுத்துக் கொண்டான்.

சிறிது நேரத்துக்கெல்லாம் லலிதா வந்து சேர்ந்தாள். அவள் வந்ததையே கவனியாதிருந்தவன் போலிருந்தான் பட்டாபிராமன். ஐந்து நிமிஷம் சும்மா இருந்து பார்த்து விட்டு, "ஏன்னா? என் பேரில் ஏதாவது கோபமா?" என்று லலிதா கேட்டாள்.

"கோபம் என்ன வந்தது, கோபம்!" என்றான் பட்டாபிராமன்.

"கோபம் இல்லாததற்கு அடை யாளமா இப்படி வெடுக்கென்று பேசுகிறீர்கள்?"

"முட்டாள்கள் நிறைந்த இந்த வீட் டில் வேறு எப்படிப் பேசுவது?" என் றான் பட்டாபிராமன்.

லலிதா சற்று நேரம் சும்மா இருந்து விட்டு, "ஏன்னா? இன்று நடந்த சேர்மன் எலெக்ஷனில் உங்களுக்கு எவ்வளவு வோட்டு? எதிரிக்கு எவ் வளவு வோட்டு?" என்று கேட்டாள்.

"எவ்வளவு வோட்டாயிருந்தால் உனக்கு என்ன?"

"எனக்கு ஒன்றும் இல்லையா?"

பட்டாபிராமன் மௌனம்.

"உங்களுடைய ஜயத்தில் எனக்கு ஒன்றும் பாத்தியதை கிடையாதா? நிஜமாக என்னைப் பார்த்துச் சொல் லுங்கள்!" என்றாள் லலிதா.

"பாத்தியதை உள்ளவளைப் போல் நீ நடந்து கொண்டாயா?"

"என்ன விதத்தில் நடந்துகொள்ள வில்லை? சொல்லுங்களேன்!"

"எனக்கு இன்றைக்குச் சேர்மன் பதவி கிடைத்தது. இனி மூன்று வருஷத்துக்கு இந்த ஊருக்கே நான் ராஜாமாதிரி. அவ்வளவு பெரிய வெற் றியுடன் நான் இன்று வீட்டுக்குத் திரும்பி வந்தேன். நீ எப்படி என்னை வரவேற்றாய்? அழுது வடிய முகத் தைக் காட்டிக் கொண்டு நின்றாய்!"

"என் முகத்தில் எப்போதும் இருக் கிற இலட்சணந்தானே இருக்கும்? புதிதாக எப்படி வந்து விடும்?"

"இலட்சணத்தைப் பற்றி இப் போது யார் என்ன சொன்னார்கள்? நீ சந்தோஷமாக என்னை வரவேற் றாயா என்று கேட்டேன்."

"நான் சந்தோஷமாகத்தான் இருந் தேன், உங்களுக்கு அழுது வடிகிறது போலத் தோன்றியது. சீதா சந்தோஷ மாக வந்து வரவேற்கவில்லையே என்று உங்களுக்குக் கோபம். அதை என் பேரில் காட்டினீர்கள்."

"அப்படித்தான் வைத்துக் கொள்."

"அந்த நீலி மாடி அறையில் குப் புறப் படுத்துக் கொண்டு அடம் பிடித் தால் அதற்கு நான் என்ன செய்வேன்?"

"அவளைச் சாக்ஷாத் லக்ஷ்மி என்றும் சரஸ்வதி என்றும் நீதான் சொல்லிக் கொண்டிருந்தாய். இப்போது அவள் நீலியாகி விட்டாளா?"

"நான் கபடமில்லாதவள். அவளை யும் என்னைப் போல் நல்லவள் என்று நம்பி ஏமாந்து போய்விட்டேன்."

"அவள் நல்லவள் இல்லை, கெட்ட வள் என்று எப்போது தெரிந்தது?"

லலிதா மௌனம் சாதித்தாள்.

"நேற்றுவரையிலேகூட உற்சாக மாக இருந்தாளே? இன்றைக்குத் திடீரென்று அவளுக்கு என்ன வருத் தம் வந்து விட்டது?" என்று பட் டாபிராமன் மறுபடியும் கேட்டான்.

"எனக்கு என்னமாய்த் தெரியும்? என்னிடம் அவள் சொல்லவில்லை!"

"நீயே யோசித்து உத்தேசமாகச் சொல்லேன்; பார்க்கலாம்?"



"அவளுக்கும் புருஷன், குழந்தை குடும்பம், உண்டு அல்லவா? அவர்களோடு போய்ச் சேரவேண்டும் என்ற எண்ணம் வந்திருக்கும்."

"அவள் போவதை யார் வேண்டாம் என்றார்கள்?"

"வேண்டாம் என்று சொல்லாதிருந்தால் போதுமா? புறப்பட்டுப் போவதற்கு ஏதாவது வழி செய்துகொடுத்தால்தானே போவாள்? அதைத்தான் அம்மாவும் சொல்கிறாள்!"

பட்டாபிராமன் மௌன சிந்தனையில் ஆழ்ந்தான். ஆஹா! நாம் சந்தேகித்தது சரிதான். மாமியாரின் வேலைதான் இது! பெண்ணின் மனத்தையும் கெடுத்து விட்டிருக்கிறாள்! இரண்டு பேரும் சீதாவை ஏதோ சொல்லியிருக்கிறார்கள்! இந்தப் பரிதாபத்துக்கு என்ன பரிகாரம்? கணவனால் கைவிடப்பட்ட அந்த அநாதைக்கு என்ன கதி? — இவ்விதம் எண்ணமிட்டான்.

"ஏன்னா? 'யமதூதன்' என்கிற பத்திரிகையை நீங்கள் பார்த்தீர்களா?" என்று லலிதா கேட்டதும் பட்டாபிராமன் திடுக்கிட்டான். தன்னை வீட்டுக்குக் கொண்டுவிட வந்திருந்த நண்பர்கள் ஏதோ ஜாடைமாடையாகச் சொன்னது ஞாபகம் வந்தது. ஓகோ! அப்படியா சமாசாரம்? அந்தக் குப்பைப் பத்திரிகையில் ஏதோ எழுதியிருக்கிறதாக்கும்! அதை மெனக்கெட்டு யாரோ வந்து லலிதாவிடம் சொல்லி அவளுடைய மனதைக் கெடுத்திருக்கிறார்கள்!

"நான் கேட்டதற்கு நீங்கள் பதில் ஒன்றும் சொல்லவில்லையே?" என்று லலிதா தூண்டினாள்.

"அந்தக் கந்தலை நான் படிக்கவில்லை; படிக்கப் போவதுமில்லை. நீ

எதற்காகக் கேட்கிறாய்? உன்னிடம் யாராவது ஏதாவது சொன்னார்களா?"

"நீங்கள் படிக்காவிட்டால் ஊரெல்லாம் படிக்கிறார்கள். பூனை கண்ணை மூடிக் கொண்டால் உலகம் அஸ்தமித்துப் போய்விடுமா?"

"ஏது? பேச்சு ரொம்பப் பலமாயிருக்கிறதே! நீ இருக்கிற வரையில் உலகம் அஸ்தமிக்காது!"

"உங்களுக்கு என்னைக் கேலி செய்யத்தான் தெரியும். ஊரெல்லாம் நம்மைப் பார்த்துச் சிரிக்கிறது."

"ஊரெல்லாம் நம்மைப் பார்த்துச் சிரிக்கிறதா? எதற்காக?"

"'யமதூதன்' பத்திரிகையில் எழுதியிருப்பதைப் பற்றித்தான். அண்டை வீட்டு அம்மாமி, எதிர் வீட்டு அம்மாமி எல்லாரும் என்னிடம் வந்து சொல்லிவிட்டுப் போனார்கள். ஊரெல்லாம் தெரிந்துதானிருக்கிறது. உங்களுக்கு மட்டுந்தான் தெரியாது."



"அப்படியா சமாசாரம்? 'யமதூதன்' பத்திரிகையில் அப்படி என்னதான எழுதியிருக்கிறதாம்? உனக்குத் தெரியுமா விஷயம்?"

"எல்லாம் தெரியும்."

"அப்படியானால் சொல்லேன்."

"வாயினால் சொல்லவே முடியாது. அவ்வளவு அசிங்கமான விஷயம். அவரவர்களே படித்துத் தெரிந்துகொள்ள வேண்டியதுதான்."

பட்டாபியின் மனதில் ஒரு சந்தேகம் உதித்தது. "அந்தப் பத்திரிகை உன்னிடம் இருக்கிறதா?" என்று கேட்டான்.

"இருக்கிறது" என்றாள் லலிதா.

பட்டாபிராமனுக்கு அளவில்லாத கோபம் வந்தது. காரியார்த்தமாகக் கோபத்தை அடக்கிக் கொண்டு, "எங்கே? அதைப் போய் எடுத்து வா, பார்க்கலாம்!" என்றான்.

"இங்கேயேதான் இருக்கிறது!" என்று சொல்லிவிட்டு லலிதா மின்சார விளக்கை ஏற்றிப் பெட்டியைத் திறந்து அந்தப் பத்திரிகைத் துண்டை எடுத்துக் கொடுத்தாள்.

பட்டாபிராமன் எழுந்து நின்ற வண்ணம் அதைப் படித்தான். படிக்கும்போது அவனுடைய இரத்தம் கொதித்தது என்றால் அது மிகையாகாது. அந்தக் கந்தல் பத்திரிகையில் அச்சாகியிருந்த ஆபாசக் கட்டுரையின் முதற் பகுதியில் பட்டாபிராமனும் சீதாவும் கள்ளக் காதல் செய்வதாகவும் லலிதா சுத்த மூழு மூடம் என்றும் கண்டிருந்தது. பிற்பகுதியில் சூரியாவுக்கும் சீதாவுக்கும் ஏற்கெனவே இருந்த நேசத்தைப் பற்றியும் சூரியா சீதாவுக்காக அவளுடைய கணவனிடம் தூது சென்றது பற்றியும் சௌந்தரராகவன் தூதனைச் செம்மை

யாக உதைத்து அனுப்பிவிட்டது பற்றியும் எழுதி யிருந்தது.

பல்லைக் கடித்துக்கொண்டு எல்லாவற்றையும் படித்து முடித்த பிறகு, "நெருப்புப் பெட்டி இருக்கிறதா?" என்று பட்டாபிராமன் கேட்டான்.

"எதற்கு?" என்றாள் லலிதா.

"கொடு, சொல்கிறேன்!"

லலிதா எடுத்துக் கொடுத்தாள்.

நெருப்புக்குச்சியைக் கிழித்து அந்தப் பத்திரிகைத் துண்டைப் பட்டாபிராமன் கொளுத்தப் போனான்.

"ஐயையோ! அதைக் கொளுத்தாதீர்கள்!" என்றாள் லலிதா.

"ஏன்?"

"அதில் பாதி வரையிலேதான் படித்திருக்கிறேன். பாக்கிப் பாதியும் படிக்க வேண்டும்."

"அது வேறேயா?" என்று சொல்லிக் கொண்டே பட்டாபி அதைக் கொளுத்திச் சாம்பராக்கினான்.

"அது என்ன அவ்வளவு அவசரம்? நான் சொன்னது உங்களுக்கு இலட்சிய மில்லையா? குற்ற முள்ள நெஞ்சு குறுகுறுக்கும் என்பது சரியாய்ப் போய்விட்டதே!"

பட்டாபிராமன் லலிதாவிடம் நெருங்கி வந்து பளீர் என்று அவளுடைய கன்னத்தில் ஒரு அறை கொடுத்தான். "இந்தக் குப்பையை யெல்லாம் வாங்கவும் கூடாது; படிக்கவும் கூடாது என்று நான் சொல்லவில்லையா? நீ என்னமாய் இதைத் துணிந்து வாங்கினாய்?" என்றான்.

லலிதா திக்பிரமையிலிருந்து விடுபட்டு, தேம்பிக் கொண்டே, "நான் ஒன்றும் வாங்கவில்லை; தபாலில் வந்தது" என்றாள்.

"தபாலில் அனுப்பியது யார்?"

"யாரோ, தெரியாது."

"இந்த மாதிரி ஒன்று தபாலில் வந்ததும் ஏன் என்னிடம் சொல்லவில்லை? பெட்டிக்குள்ளே வைத்து எதற்காகப் பூட்டினாய்? இது பொக்கிஷமா வைத்துப் பாதுகாப்பதற்கு?"

"அப்புறம் சாவகாசமாகச் சொல்லலாம் என்று இருந்தேன்."

"அப்புறமாவது, சொல்லவாவது? தரித்திரம் பிடித்த மூதேவி நீ! உன் மனது அசிங்கத்துக்கு ஆசைப்படுகிறது. ஆகையினாலேதான் இதைப் பெட்டியில் வைத்துப் பூட்டினாய்."

லலிதா மௌனமா யிருந்தாள்.

விளக்கை அணைத்துவிட்டு வந்து பட்டாபிராமன் மறுபடியும் படுத்துக் கொண்டான்.

லலிதா "நான் செய்தது பிசகுதான்; தயவு செய்து மன்னித்து விடுங்கள்!" என்று சொன்னாள்.

"ரொம்ப சரி; இனிமேல் இப்படி எனக்குத் தெரியாமல் ஒரு காரியமும் செய்யாதே; இப்போது பேசாமல் படுத்துக் கொண்டு தூங்கு."

அவ்வாறே லலிதா படுத்துக் கொண்டாள். ஆனால் தூக்கம் வரவில்லை. தேம்பலும் அழுகையும் வந்தது. கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டாள்.

கொஞ்ச நேரம் கழித்து "ஏன்னா! சேர்மன் வேலை என்றால் தினம் தினம் ஆபீஸுக்குப் போக வேண்டியிருக்குமா?" என்று கேட்டாள்.

"ஆமாம், ஆமாம். 'எங்காத்துக்காரரும் கச்சேரிக்குப் போகிறார்' என்று நீ எதிர் வீட்டு அம்மாமி, பக்கத்து வீட்டு அம்மாமி எல்லாரிடமும் பெருமை யடித்துக் கொள்ளலாம்."

"அதற்காக ஒன்றும் நான் கேட்கவில்லை. தினந்தினம் அப்படி என்ன வேலை இருக்கும் என்று தெரிந்து கொள்ளக் கேட்டேன்."

"தூக்கம் வருகிறது; என்னைத் தொந்தரவு செய்யாதே! எல்லாம் நாளைக்குச் சொல்கிறேன்."

தூங்குவதற்கு லலிதா மனப்பூர்வமான முயற்சி செய்தாள். எனினும் தூக்கம் வரவில்லை. ஆகவே பட்டாபியின் தூக்கத்தைக் கெடுக்கா திருக்கும் பொருட்டுத் தானும் தூங்குவது போலப் பாசாங்கு செய்தாள்.

மணி பதினொன்று அடித்தது.

• • •

கடிகாரத்தின் நிமிஷ முள் முழு வட்டத்தையும் ஒரு சுற்றுச் சுற்றி வந்தது. மணி பன்னிரண்டு அடித்தது.

எங்கிருந்தோ ஒரு விம்மல் சத்தம் கேட்டது. நெஞ்சைப் பிளக்கும்பட

யான சோகமும் வேதனையும் நிறைந்திருந்த விம்மல் சத்தம் அது.

தூக்கமின்றிச் சிந்தனையில் ஆழ்ந்திருந்த பட்டாபிராமனின் காதில் அது விழுந்து திடுக்கிடச் செய்தது.

மறுபடியும் அந்த விம்மல் சத்தம்; மேலும் மேலும் விம்மல் சத்தம்.

மேல் மாடியிலே யிருந்துதான் அந்த விம்மல் வருகிறது; சந்தேகம் இல்லை.

தன்னுடைய உள்ளத்தை இந்த உலகத்தில் உண்மையாக உணர்ந்தவள் சீதாதேவி ஒருத்திதான். தன்னுடைய ஆசாபாசங்களில் பூரண அநுதாபம் உள்ளவள் அவள். தனக்கு வாழ்க்கையில் புதிய உற்சாகம் ஊட்டியவள் அவள். தன் வாழ்க்கைக்கே ஓர் ஆதாரத்தை அளித்தவள் அவள்.

அத்தகைய சீதா தன்னந்தனியாகப் படுத்துக்கொண்டு விம்மி அழுகிறாள். நெஞ்சு உடையும்படியான வேதனையினால் துடிக்கிறாள். நள்ளிரவு ஆகியும் தூங்காமல் தவிக்கிறாள். அவளுக்கு என்ன துயரமோ, என்னமோ? தன் மாமியாரும் மனைவியும் கூறிய நிந்தை மொழிகள்தான் அவளை இப்படி வதைக்கின்றனவோ? அல்லது வேறு ஏதேனும் துயரச் செய்தி கிடைத்திருக்கிறதோ!— ஆகா! இந்தச் சந்தர்ப்பத்தில் அவளுக்கு ஆறுதல் கூறாவிட்டால் தான் உயிரோடிருந்து என்ன பயன்? அவள் தனக்குச் செய்திருக்கும் உதவிகளுக்கெல்லாம் வேறு எப்போது எந்தவிதத்தில் நன்றி செலுத்தப் போகிறோம்?

லலிதாவை எழுப்பி அழைத்துக்கொண்டு போகலாமா? — கூடவே கூடாது! அவள் சீதாவை விரோதிக்கத் தொடங்கி விட்டாள். அவளை அழைத்துக்கொண்டு போவதில் பயனில்லை. ஒருவேளை அவளாலேயே தான் இந்த துக்கம் சீதாவுக்கு நேர்ந்திருக்கிறதோ, என்னமோ?

பட்டாபிராமன் சத்தம் போடாமல் எழுந்து கட்டிலிலிருந்து இறங்கினான். அறையின் கதவைச் சத்தமில்லாமல் திறந்து வெளியேறினான். சத்தமின்றி அடிமேல் அடி வைத்து மாடிப்படி மீது ஏறத் தொடங்கினான்.

தூங்குவதுபோல் பாசாங்கு செய்துகொண்டிருந்த லலிதா படுக்கையிலிருந்து எழுந்தாள். திறந்திருந்த கதவு வழியாக வெளி வந்து வாசற்படிக்கருகே நின்றாள். பட்டாபிராமன் மேலே ஏறுவதைப் பார்த்துக்கொண்டு நிக்பிரமை பிடித்து நின்றாள்.

இரண்டு நிமிஷத்துக்கெல்லாம் லலிதாவின் தாயார் திடீரென்று லலிதாவின் பின்னால் வந்து நின்றாள். லலிதா திரும்பிப் பார்த்து இன்னார் என்று தெரிந்துகொண்டாள்.

சரஸ்வதி அம்மாள் இரகசியம் பேசுகிற குரலில், "பார்த்தாயாடி, பெண்ணே! பாம்புக்குப் பாலை வார்த்தாலும் அது விஷத்தைத்தான் கக்கும் என்று நான் முட்டிக் கொள்ளவில்லையா? அந்தச் சண்டாளி என்ன செய்து விட்டாள் பார்த்தாயா? உன் குடியைக் கெடுத்து விட்டாளே!" என்று தூபம் போட்டாள்.

லலிதா 'உஷ்!' என்று வாயில் விரலை வைத்து அவளை அடக்கினாள்.

பட்டாபி மச்சுப்படி ஏறும் சத்தம் நின்றது. அறையின் கதவைத் திறக்கும் 'கிறீச்' சத்தம் கேட்டது. மின்சார விளக்குப் போடும் 'கிளிக்' சத்தம் கேட்டது. பின்னர் கதவைச் சாத்தும் சத்தமும் கேட்டது.

"போடி, பெண்ணே, போ!" என்று சரஸ்வதி அம்மாள் தூண்டினாள். ஆனால் லலிதாவுக்கு அச்சமயம் தூண்டுதல் அவசியமாயிருக்கவில்லை. ஆவேசம் வந்தவளைப் போல் மச்சுப்படிகளில் வேகமாக ஏறிப்போனாள்.

மேல் மாடித் தாழ்வாரத்தின் வழியாகச் சென்று சீதாவின் அறைக் கதவை இலேசாகத் திறந்தாள். உள்ளே பார்த்த காட்சி அவள் ஒருவாறு எதிர்பார்த்ததே! ஆனாலும், அவளை ஒரு நிமிஷம் ஸ்தம்பித்து நிற்கும்படி செய்து விட்டது.

பட்டாபிராமன் சீதாவின் முகவாய்க்கட்டையைத் தன் கையினால் தூக்கிப் பிடித்துக் கொண்டிருந்தான். சீதாவின் கண்களில் ததும்பிய கண்ணீர்த்துளிகள் மின்சார விளக்கின் மங்கலான ஒளியில் நல் முத்துக்களைப் போல் பிரகாசித்தன.

லலிதா தன்னுடைய வாழ்நாளில் என்றும் அநுபவித்திராத ரௌத்ராகாரத்தை அச்சமயத்தில் அடைந்தாள்.

மே 28௳ முதல்

மதுரை	- ஸ்ரீ தேவி
கோயமுத்தூர்	- ராயல்
"	லைட் ஹவுஸ்
பெங்களூர்	- ஸ்வஸ்திக்
	- சிவாஜி
"	- ரூப் மஹால்
"	ராஜா
திருச்சி	-
சேலம்	- நியூ ஸினிமா
திருநெல்வேலி	- பாலஸ்
சிதம்பரம்	- வடுகநாதன்



ஜூன் 3௳ முதல்

சென்னை

ஸ்டார், கிரௌன்

இரு தியேட்டர்களிலும்
மற்றும் ஆந்திரதேசத்தில்
அநேக நகரங்களிலும்
வெளிவருகிறது



ஸ்ரீ ராஜராஜேஸ்வரி பிலிம் கம்பெனியின்

நவஜீவனம்

தமிழ்

நித்திய வாழ்க்கையில் நிகழும் விந்தைகளை நினைவுறுத்தும் சித்திரம்..

நாகய்யா • கண்ணாம்பா • எஸ். வரலக்ஷ்மி • ஸ்ரீராமன்

டி. ஏ. ஜயலக்ஷ்மி • டி. ஆர். ராமச்சந்திரன் • எல். நாராயண ராவ் • நடித்தது

டைரக்‌ஷன் : **கே. பி. நாகபூஷணம்** ... ஸ்டுடியோ : ஜெமினி

வசனம் : "உதயகுமார்" • சங்கீதம் : எஸ். வி. வெங்கடராமன்


இதோ!
உங்களுக்காக
புதியவிதமான உயர்ந்த ரக,
காம்பு மண்வெட்டி
A I C
TRADE MARK
டாடா
அக்ரிகோ
எல்லா பெரிய
இரும்பு கடைகளிலும்
கிடைக்கும்.
தி டாடா அயரன் அண்டு ஸ்டீல் கம்பனி லிமிடெட்
தலைமை ஸேல்ஸ் ஆபீஸ்: 23 B, நேதாஜி சுபாஷ் ரோடு, கல்கத்தா.
பிராஞ்ச் ஸேல்ஸ் ஆபீஸ்:
ஓரியன்டல் பில்டிங்ஸ், 108, அரண்மனைக்காரத்தெரு, ஜீ. டி. மதராஸ்.

காட்ஸ்வால்

அவர்கள் தேக சீதோஷ்ணத்தை சமப் படுத்துகிறது.

உஷ்ணவேளையில்
அவர்களை
குளுமையாகவும்
குளிர்ந்த வேளையில்
கதகதப்பாகவும்
வைத்திருக்கிறது!



தங்கள் குழந்தைகளை உஷ்ணவேளையிலும் சரி, விளையாட்டுச் சமயங்களிலும் சரி, குளுமையாக வைத்திருப்பதுடன் தேகப் பயிற்சிக்குப் பின் அல்லது குளிர்ந்த வேளையில் அவர்களுக்கு ஜலதோஷம் வராமல் காப்பாற்றவும் கூடியதோர் துணியைத் தான் எல்லாத் தாய்மார்களும் கோருவது. இதோ இப்புதிய ஜவுளி அவர்கள் கோரிக்கையை நிறைவேற்றுகிறது!

காட்ஸ்வால் இவ்விருவித பாதுகாப்பும் அளிப்பது அதன் அரிய சேவைத்தன்மை காரணமாகத் தான். அதிலுள்ள ஆயிரக் கணக்கான சிறு துவாரங்களின் மூலம் உடம்போடு சேர்ந்தாற்போல் காற்றோட்டம் எப்போதும் ஏற்பட்டு தேக சீதோஷ்ணம் சம நிலையில் நிறுத்தப் படுகிறது. வியர்வையும் எளிதில் உலர்கிறது.

காட்ஸ்வால் அணிவதற்கு சுகமாகவும், அதி மென்மையான சருமங்களுக்கும் மிருதுவாகவும் இருப்பது தவிர, பார்வைக்கும் அழகுதான். தாய்மார்கள் தங்களுக்கும் தங்கள் கணவர்களுக்கும் காட்ஸ்வால் ஆடையணிகளை கட்டாயம் விரும்புவர். அநேகவித வசீகரமான கெட்டிச்சாய நிறங்களிலும், கோடுகளுடனும், செக் கோலங்களிலும் கிடைக்கும்.

> சலவைக் குறிப்புகள்: உங்கள் கம்பளியாடைகளைப் போன்றே வெதுவெதுப்பான ஜலத்தில் சோப்புச் செதில்கள் அல்லது லக்ஸில் சோப்பினால் சலவை செய்யவும்.

கரையோரத்தில் இப்பெயரை கவனியுங்கள்

Cotswol

தயாரிப்பாளர்கள்:

தி பெங்களூர் மில்ஸ்

தி பெங்களூர் உலன், காட்டன் & ஸில்க் மில்ஸ் கம்பெனி லிமிடெட் பெங்களூர் சிட்டி.

ஏஜண்டுகள், மானேஜிங் ஏஜண்டுகள், டிஸ்டிரிப்யூட்டர்கள்:
பின்னி & கம்பெனி (மதராஸ்) லிமிடெட்

ஆகாரத்திற்கு பின் வயிற்று நோயா?

இதுதான் நான் சிபார்சு செய்வது



வயிற்றில் அதிக அமிலம் சேருவதால் அடிக்கடி அஜீரண உபாதைகள் ஏற்படலாம். இந்த அதிக அமிலச் சேர்ப்பினால் ஏற்படும் எரிச்சல், வாயு, இதர உபாதைகள், அதிகமாய் ஆகாரத்திற்குப் பின் வயிற்று நோய் முதலியவைகளுக்கு உலகம் அறிந்த நிவாரணியாயே "பிஸ்மாக்"கை சிபார்சு செய்கிறேன். அமிலச் சேர்க்கையால் வயிற்று நோயால் தவிப்பவர்களுக்கு உடனேயே "பிஸ்மாக்" நிவாரணமளிக்கும். இன்றே ஒரு முறை பரீக்ஷித்து உங்கள் வயிற்றை சகல உபாதைகளிலிருந்தும் தடுத்துக் கொள்ளுங்கள்.

உங்களுக்கு வேண்டியது

BISMAG

எல்லா கெமிஸ்டுகளிடமும் ஸ்டோர்களிலும் பவுடராகவும் மாத்திரையாகவும் கிடைக்கும்.

இந்தியாவுக்கு பூரண விநியோகஸ்தர்கள்:

ஜியாப்ரே மானர்ஸ் & கோ., லிட்.

பம்பாய் - கல்கத்தா - டெல்லி - மதராஸ்

டி.எஸ்.ஆர்.

சந்தனாதித் தைலம்





அரைக்கீரை விதை தைலம்

டி. எஸ். ஆர். தைலங்களை ஆயிரக்கணக்கான மக்கள் விரும்பி உபயோகிப்பதற்குக் காரணம் அவைகளின் சிறந்த குணமே. ஆயுர்வேத சாஸ்திரீய முறைப்படி தயாரித்த சந்தனாதித் தைலம், அரைக்கீரை விதைத் தைலம் மூளைக்குக் குளிர்ச்சியையும் சருமத்திற்குப் பளபளப்பையும் கொடுக்கின்றன



டி.எஸ்.ஆர் & கோ.
கும்பகோணம்

கோவை, நீலகிரி ஜில்லாக்கள் & பாலக்காடுக்கு ஏஜண்டு:

B. பாலபட்டாபி

(ESTD. 1933)

P. B. No. 182, கோயமுத்தூர்

ஸ்டாக்கிஸ்டுகள்:

சுந்தரம் ஸ்டோர்ஸ், மயிலாப்பூர்

விஜயா ஸ்டோர்ஸ் மயிலாப்பூர்

அதிகப்படியான மைல்கள்

Firestone

De Luxe CHAMPION TYRES

பயர்ஸ்டோன்

டிலக்ஸ் சாம்பியன் டயர்களினால்

இரண்டு அடுக்குகள் அதிகமான கம்-டிப்பிடு கயிறு பிணைப்புகள் கொண்டவை.

அகலமான அழுத்தமான விடாமிக் ரப்பருடன் விசேஷ முறையில் சேர்த்து செய்யப்பட்ட வரம்புகளுடன் கூடியவை.



இன்று சிறந்தது - நாளை இன்னும் சிரேஷ்டமானது

Edited. Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamalle High Road, Kilpauk. Madras

கல்கி



KALKI மே 29, 1949 4 அணா

REGD. No. M. 4392